4078

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

பாகனேரி

4078

ACLTDD 00318

செர்ரித் தோட்டம்

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISVANATHAN CHETTIAR
PAGANERI.

முதல் பதிப்பு
6-10-1948

அல்லயன்ஸ் பிரஸ்
156, பிராடீஸ் ரோட்,
மயிலாப்பூர் :: சென்னை.

4078

செஹாவின் நாடகங்கள்

[புரசு பாலகிருஷ்ணன்]

செஹாவ் என்றால் அவருடைய கதைகள்தான் உலகத்தாருக்கு முதலில் ஞாபகம் வரும். ஆனால் ரஷ்யாவில் அவருடைய நாடகங்கள் அவருடைய கதைகளுக்குச் சமமான இடம் பெற்றிருக்கின்றன. அதாவது, ரஷ்யாவில் அவர் 'நாடகச் சக்கரவர்த்தி' எனக் கருதப்படுகிறார். மாக்ஸிம் கார்க்கி முதலியவர்கள் அவருடைய நாடக முறையைத்தான் பின்பற்றுகின்றனர். மாக்ஸிம் கார்க்கியின் 'சமூகப் பிரஷ்டம்' நாடக இலக்கியத்தில் முதன்மை பெற்ற சிருஷ்டிகளில் ஒன்று......நாடகத் துறையில் கார்க்கியைச் செஹாவின் இரண்டாந்தரச் சிஷ்யர் என்று சொல்லலாம். ஏனெனில் செஹாவின் நாடக முறையைப் பின்பற்றினால், மற்றவர்கள் குருவைப்போல் முதல்தரமாய் எழுத முடியாது' கார்க்கி செஹாவின் நாடகமுறையைத்தான் அனுசரிக்கிறார்'. என்று டி. எஸ். மர்ஸ்கி சொல்லுகிறார்.

செஹாவின் கலை வாழ்வின் தொடக்கத்திலேயே அவருடைய கற்பனை நாடக முறையைத் தழுவிச் சென்றது என்பதற்கு அத்தாட்சிகள் இருக்கின்றன. கலாசாலை நாட்களிலேயே அவர் நாடகங்கள் எழுதினார். பின்னர் "வான்யா மாமா" என்ற பிரசித்திபெற்ற நாடகத்திற்கு அவர் அக்காலத்தில்தான் முதலில் உருக் கொடுத்தார். 1886-ல் அவருடைய முதல் நாடகமான "இவனவ்" வெளிவந்தது. 1887-ல் நடிக்கப்பட்டு, எல்லோராலும் இகழப்பட்டது. பிறகு அவருடைய கவனத்தைச் சிறு கதைகள் முற்றிலும் கவர்ந்துவிட்டன. "காட்டாள்", "கல்யாணம் வைபோகமே!" முதலிய குட்டி நாடகங்கள்தாம் அவர் எழுதினார். மறுபடியும் 1896-ல் சிறப்பான நாடகங்கள் எழுதத் தொடங்கி, "ஹம்ஸ வதம்" "வான்யா மாமா" "மூன்று சகோதரிகள்" "செர்ரித் தோட்டம்" முதலிய நாடகங்களை இயற்றினார். மாஸ்கோ கலைஞர் சபையோர் நாடகத் துறையில் வெற்றி அடைந்தபிறகு, அந்த வெற்றிக்குப் பாதிக் காரணமாயிருந்த செஹாவைக் கௌரவப்படுத்துமாறு, தங்கள் புதிய நாடக மண்டபத்திற்கு "செஹாவ் நாடக மண்டபம்" என்று பெயர் வைத்தனர்.

செஹாவ் மண்டபம் ரஷ்யாவின் நாடகச் சரித்திரத்தில் முதல் இடம் பெற்றிருக்கிறது.

செஹாவ் சிறு கதைக் கலையில் ஒரு புதிய முறையைச் சிருஷ்டித்ததுபோல் நாடகக் கலையிலும் ஒரு புதிய முறையைச் சிருஷ்டித்தார். அவ் விஷயத்தில் புகுமுன், அவருடைய நாடகங்களின் பொருளைப் பற்றிப் பொதுவாய்க் கவனிப்போம். அவருடைய கதைகளைப் போலவே அவருடைய நாடகங்களிலும் "கதை" அம்சம் மிகக் குறைவே. விஷயம் நடக்கும் விதத்தில்தான் செஹாவின் தனிச்சிறப்பு விளங்குகிறது. வாழ்க்கை - தானே மனோ கதியில் ஓடும் பேச்சுக்களுடன் - பேச்சுக்களின் மத்தியில் நடைபெறும் விஷயத்துடன் - நம்முன் நாடக மேடை மீது நிகழ்கின்றது. நாடக மேடைமீது அசல் வாழ்க்கை என்ற மாயை விழுகிறது. கதாநாயகனும் கதாநாயகியுங்கூட பளிச் சென்ற முன்னணியில் நிற்பதில்லை. செஹாவ் நாடகங்களில் எல்லாப் பாத்திரங்களும் சமம். அவைகளைப் படிக்கும்போது நம் மனத்தில் தனி ரஸங்கள் நிற்காமல், ஏக்கமும் அழகும் கலந்த ஒரு நிறைவுதான் நிற்கிறது. இது ஒரு தனிச் சிறப்பு என்பதில் சந்தேகமில்லை. இதைப் பின்னர் விளக்குவோம்.

செஹாவின் நாடகங்களில் மூன்றை எடுத்துக்கொண்டு, அவைகளின் சாரத்தை இங்குச் சுருக்கமாய்த் தருவோம்:

"ஹம்ஸவத"த்தில் நீனு ஸரிச்னுயாதான் சிதைவுறும் பறவை. இளம் எழுத்தாளன் திரிப்லீவ் அவளைக் காதலிக்கிறான். அவன் தாயார் இரீனு அர்க்கடீனு ஓர் உதாரமில்லாத நடிகை. பெயரும் பொருளும் உடையவள். ஆனால் அவள் மகன் உதவுவோர் இல்லாமல் பிழைப்புக்குக் கஷ்டப்படுகிறான். அவனுடைய நாடகம் ஒன்றில் நீனு கதாநாயகியாக நடிக்கிறாள். அவள்மீது அவன் தாயாருக்குப் பொறாமை. அத்துடன் அர்க்கடீனு குறுகிய நோக்கமுடையவள். அவள் திரிப்லீவையும் அவன் நாடகத்தையும் அவன் மனம் நோவும்படி இகழ்கிறாள். அவளுடைய காதலன் பிரசித்திபெற்ற ஆசிரியன் திரிகாரின்; சஞ்சல புத்தியுடையவன். நீனு அவனைக் காதலிக்கிறாள். திரிப்லீவ் காதலிலும் இலக்கிய லட்சியத்திலும் ஏமாற்றம் அடைந்து, தன்னைச் சுட்டுக்கொள்கிறான். ஆனால் குறி தப்பிவிடுகிறது; அவன் உத்ஸாகமின்றி மறுபடியும் வாழ்க்கையைத் தொடங்குகிறான். திரிகாரினே நீனுவை வசப்படுத்திக்கொண்டு, அவளுடன் சிலகாலம் சுகித்து விட்டு அவளைக் கைவிட்டு விடுகிறான். டாக்டர் டார்ன்,

இளைஞர்கள் எல்லோரும் அங்குள்ள ஏரியின் மாயையால் பிரமை
யடைந்திருக்கின்றனர் என்று கருதுகிறார்; திரிப்லீவை மாஷா
என்னும் பெண் காதலிக்கிறாள். அவள் தன் ஆவல் நிறைவேறாமல்
முடிவில் மத்விதங்கோ என்னும் ஓர் எளிய உபாத்தியாயரைக்
கல்யாணம் செய்துகொள்கிறாள். அவளுடைய தாயார் பொலீனா
டாக்டர் டார்னைக் காதலிக்கிறாள். டாக்டருக்கோ காதலுக்கு
அவகாசமில்லை; மனமுமில்லை. நாடக முடிவில் நீனா, சிறகொடிந்த
ஹம்ஸம்போல், உவகை குன்றி, அமைதி இழந்து, ஏரிக்கரைக்கு
வருகிறாள். திரிப்லீவ் அவளைக் காதலுடன் வரவேற்கிறான்.
"அக்காலத்தில் நம் வாழ்க்கை ஒரு தெய்வமலர்போல் உலகவாசனை
யில்லாத புனித உணர்ச்சிகளுடன் எவ்வளவு உன்னதமாய்
இருந்தது!" என்று அவள் ஏங்குகிறாளேயொழிய, அவனை மறுபடி
யும் மறுக்கிறாள். ஓர் உயர்ந்த நடிகை என்ற புகழ் அடையவேண்டு
மென்று துடிக்கிறாள், திரிப்லீவ் மறுபடியும் தன்னைச் சுட்டுக்
கொள்கிறான். இம்முறை அவனுடைய தற்கொலை முயற்சி சித்தி
பெறுகிறது.

"வான்யா மாமா"வும் இதே ரீதியில் செல்லுகிறது. ஆனால்
அதன் முடிவு வேறு. சோகத்திலிருந்து தீரம் பிறக்கிறது.
வான்யா மாமாவும் அவனுடைய சகோதரியின் பெண் ஸோன்யா
வும், ஆரம்பம்முதல் கடைசிவரையில், தங்கள் தனிமை வாழ்க்கை
களில் ஒன்றாய்ப் பிணைக்கப்பட்டிருக்கின்றனர். ஸோன்யா ஓர்
சிறந்த கர்மயோகியாய் விளங்குகிறாள். அவளுடைய ஆத்ம
உறுதியும் ஒளியும் அவளுடன் கஷ்டப்படும் வான்யாவுக்குக்
கடைசியில் ஆறுதலும் பலமும் அளிக்கின்றன. அவர்களுடைய
வாழ்க்கை இன்பமில்லாமல் கழிகிறது; இன்பத்தை எட்டிப்
பிடிக்க முயலுகின்றனர்; அது எட்டவில்லை. வேலையில் மனத்தை
நிலைக்கச் செய்து, சேவையில் சுய இச்சைகளை மறக்கின்றனர்.

ஸோன்யாவின் தகப்பனார் பிரொபஸர் ஸெரிபிரியகாவ் தம்
இளைய மனைவி எலீனாவுடன் கிராமத்திற்குத் திரும்பிவருகிறார்.
நிலங்கள் ஸோன்யாவின் காலஞ்சென்ற தாயாருடையவை.
வான்யா தன் குடும்பப் பங்கையும் தன் சகோதரிக்கு அன்பளிப்
பாய்க் கொடுத்திருந்தான். மாமனும் மருமகளும் நிலங்களைப்
பார்வையிட்டு, அதன்மீதிருந்த கடனைத் தீர்த்துவிட்டு, பட்டணத்
துப் பிரொபஸருக்குத் தவறாமல் பணம் அனுப்பிக்கொண்டிருந்
தனர். வான்யா இருபத்தைந்து வருஷங்களாக ஸெரிபிரிய
காவை ஒரு மேதாவி என்று கருதிக்கொண்டிருந்தான். பிரொப

ஸரோ ஒருவருக்கும் உதவாத பெரியபெரிய விஷயங்களைப்பற்றிப் புஸ்தகங்கள் எழுதியிருக்கிருரேயொழிய, சுய வாழ்க்கையிலேயே மூழ்கியிருப்பவர். "நிஜ வாழ்க்கை யில்லாமல், சில்லறை அலுவல்களிடையே இவனுக்காக என் வாழ்க்கையை வாழாமல் இருந்துவிட்டேனே" என்று வான்யா வருந்துகிருன். மேலும் அவனுக்கு எலீனுவின்மீது காதல் உண்டாகிறது. இரண்டுமாய்ச் சேர்ந்து அவன் வயிற்றெரிச்சலைக் கிளப்புகின்றன. பிரொபஸர் நிலங்களை விற்றுவிட்டுப் பட்டணத்திற்குப் போகலாமா என்று யோசிக்கிருர். அதன்மேல் வான்யா பித்துப்பிடித்தவன்போலாகி அவரைச் சுட எத்தனிக்கிருன். குறி தப்பிவிடுகிறது. எலீனு தன் வயதுசென்ற கணவனுக்கு வைத்தியம் செய்யும் டாக்டர் ஆந்திராவைக் காதலிக்கிருள். டாக்டரும் அவள் அழகில் ஈடுபடுகிருர். ஆனல் எலீனுவுக்கு மனச்சாக்ஷிப் பயம். ஆகவே அவள் தன்னைத் தன்வசமாகவே வைத்துக்கொள்கிருள். ஸோன்யாவிற்கு டாக்டர்மீது அளவில்லாக் காதல். ஆனல் டாக்டர் அவளைக் கண்ணெடுத்துப் பார்ப்பதுகூட இல்லை. "நான் அழகாயில்லை! அம்மம்ம, நான் என்ன செய்வேன்? நான் அழகாயில்லை என்று எனக்குத் தெரியும்! நான் என்ன செய்வேன், ஆண்டவனே!" என்று ஸோன்யா நொந்து கொள்கிருள். ஆனல் அவளுடைய இளம் ஆத்மா வயிரம் பாய்ந்தது. வாழ்க்கை இருளையும் மீறி அது ஒளி வீசுகிறது. வான்யா டாக்டர் ஆந்திராவின் கைப்பெட்டியிலிருந்து விஷத்தைத் திருடி வைத்துக்கொள்கிருன். டாக்டர் அதைக் கண்டுபிடித்து விடுகிருர். வான்யா அதைத் அவரிடம் திருப்பிக்கொடுத்து விடும்படி ஸோன்யா அவனை வேண்டுகிருள். அவன் அவளுடைய விசுவாசத்திஞல் மனமிளகி இசைகிருன். தீரா மனத்தாங்கலிலிருந்து அவனைக் கரையேற்றி அவனைத் தீவிர வேலையில் ஈடுபடச் செய்கிருள் ஸோன்யா. "மற்றவர்களுக்காக நாம் ஓய்வில்லாமல் உழைப்போம்!" என்று அவள் அவனைத் தன் கூட்டத்திற்கு அழைக்கிருள். பட்டணத்தார்கள் கிராமத்தை விட்டுச் சென்று விடுகின்றனர். "நாம் கஷ்டப்படுவது எல்லாம் வீண் போகாது. மாமா, பொறுத்துக்கொள்! கடவுள் நம்மைக் கைவிடமாட்டார்!" என்கிருள் ஸோன்யா.

"வான்யா மாமா" செஹாவின் மூன்ருவது நாடகம்; "ஹம்ஸவதம்" இரண்டாவது. முதல்நாடகமான "இவனு"வில் இவனுவ் தன்னிடத்திலும் தன் லட்சியங்களிலும், முற்றிலும் நம்பிக்கையை இழந்து, தன் கல்யாண தினத்தன்று தற்கொலை

செய்துகொள்கிறான். "ஹம்ஸவத"த்தில் திரிப்லீவ் தற்கொலை செய்துகொண்டாலும், உயர் லட்சியங்களில் தான் வைத்திருந்த நம்பிக்கையை இழக்கவில்லை. "இவனு"வில் இவனுவைக் காதலிக்கும் ஸாஷா "வான்யா மாமா"வில் ஸோன்யாவைப் போன்றவள் தான்; ஆனால் ஸோன்யாவிடமிருந்து நாடக முடிவில் வீசும் ஆத்ம ஒளி ஸாஷாவிடமிருந்து அவ்வளவு தீவிரமாய் வீசவில்லை. "ஹம்ஸவத"த்தில் நீனா அகந்தை மீறிய முயற்சியில் ஈடுபடுகிறாளேயொழிய, ஸோன்யாவின் என்றும் அழியாத ஆத்ம சாந்தி அவளிடமில்லை. இவனுவ் தன் ஆத்மத் தளர்ச்சியைத் தானே உணர்ந்து, தன்னைக் கொலைசெய்து கொள்கிறான். அது அவன் ஆத்ம பலஹீனத்தின் சரியான முடிவே. ஆனால் அத்தகைய ஆத்மத் தளர்ச்சியிலிருந்து வான்யாவை, ஸோன்யா—தன் விஷயத்திலேயே இன்பமிழந்திருந்தபோதிலும் — காப்பாற்றுகிறாள். சுய இச்சைகள் முறிந்தபின் மனிதர்களைக் கரையேற்றக் கூடிய தெய்விக ஒளியை நாம் "ஹம்ஸவத"த்தில் காணவில்லை; "வான்யா மாமா"வில் காண்கிறோம். தன்னலத்தை மீறியது பேரின்பம் எனில், செஹாவின் நாடகங்கள் அவருடைய பேரின்பச் சித்தியைத் தங்கள் வரிசைக் கிரமத்தில் காண்பிக்கின்றன. அவருடைய கடைசி நாடகமான "செர்ரித் தோட்டம்" "வான்யா மாமா"வைக் காட்டிலும் இவ்விஷயத்தில் ஒரு படி உயர்ந்திருக்கிறது. "வான்யா மாமா"வில் தனி ஆத்மாக்களைக் கரையேற்றக் கூடிய ஒளியைக் காண்பித்த செஹாவ் "செர்ரித் தோட்டத்"தில் தனி ஆத்மாக்களை சமூக ஆத்மாவின் அம்சங்களாகக் காட்டி, சமூகத்திற்கே ஒரு பேரின்பம் ஊட்ட முயலுகிறார்.

நாடகத்தின் கதை பின்வருமாறு: லியூபா ஆண்டிரீவ்னு கணவனை இழந்தவள். ஐந்து வயதுள்ள புத்திரன் கிரீஷாவையும் ஆற்றில் இழந்துவிடவே, மன நிம்மதி இழந்து, தன் பெண் அன்னியாவுடன் அந்நிய தேசங்களைப் பார்க்கச் செல்லுகிறாள். அவளுடைய நிலத்தை அவளுடைய ஸ்வீகார புத்திரியான வாரியா பார்வையிட்டு வருகிறாள். கிரீஷாவின் பழைய வாத்தியார் நித்ய பிரும்மச்சாரி டிராவிமாவ் அவர்கள் வீட்டில் தங்கி வருகிறான். ஐந்து வருஷங்களுக்குப் பின் ஆண்டிரீவ்னு பணத்தை எல்லாம் செலவழித்துவிட்டு, பிரான்ஸிலிருந்து வீடு திரும்புகிறாள். நிலங்களை அடைமானத்திலிருந்து அவளாலும் அவளுடைய சகோதரன் கயேவாலும் மீட்டுக்கொள்ள முடியவில்லை. அவர்களுடைய சிநேகிதன், வியாபாரி லொபாகின், அவர்களுடைய செர்ரித்

தோட்டத்தைப் பாகங்களாய்ப் பிரித்து, குத்தகைக்கு விடலாம் என்று யோசனை சொல்லுகிறான். அழகான தோட்டத்தை அழிக்க அவர்களுக்கு மனம் வரவில்லை. அதன்மீது அவர்களுக்கு அளவுகடந்த அன்பு—தபோவனத்தின்மீது சகுந்தலைக்கு இருந்ததைப்போன்ற அன்பு—இருக்கிறதே யொழிய, அவர்களுக்கு அதைக் காப்பாற்றத் தெரியவில்லை. தோட்டம் ஏலத்தில் விற்கப் படுகிறது. லொபாகின் அதை வாங்கிக்கொண்டு, தன் யோசனையை அமுலுக்குக் கொண்டுவருகிறான். செர்ரி மரங்கள் வீழ்த்தப் படுகின்றன. லியூபா ஆண்டிரீவ்னு முதலியவர்கள் வீட்டை விட்டுச் செல்லுகின்றனர்.

லியூபா ஆண்டிரீவ்னுவின் செர்ரித்தோட்டம் ரஷ்யாவிற்கே ஒரு நிதர்சன வடிவாய் அமைந்திருக்கிறது. ரஷ்யாவில் நவயுகம் பிறப்பதைச் செஹாவ் இந் நாடகத்தில் காண்பிக்கிறார். நவ ரஷ்யாவின் வருகைக்கு முரசொலிபோல் இருக்கின்றன டிராவிமாவின் வார்த்தைகள். "மகிழ்ச்சி,—அது இதோ இருக்கிறது, அது நம்மை நோக்கிப் பக்கத்தில் வந்துகொண்டேயிருக்கிறது, அதனுடைய காலோசைகூட என் காதில் விழுகிறது. நாம் அதை நேரில் கண்டு, அநுபவிக்கவேண்டாமா? நாம் அநுபவிக்காவிட்டாலும் குடி முழுகிப் போகாது. மற்றவர்கள் அநுபவித்தே தீருவார்கள்!" என்று தீர்க்கதரிசனம் கண்டவன்போல் தெய்விகச் சொற்களைப் பொழிகிறான். லியூபா ஆண்டிரீவ்னு முதலியவர்கள் செர்ரித்தோட்டத்தை விட்டுச் செல்லுவதும், செர்ரித்தோட்டம் உருவழிந்து மனித வாழ்க்கை நிறைந்த கட்டிடங்களாய்ச் சீக்கிரமே மாறும் என்ற எண்ணமும், நமக்கு ஒரு சமுதாய அமைப்பே ஒழிந்து மற்றொரு அமைப்பு வருவதற்குரிய மகத்தான அவஸ்தைபோல் தோன்றுகின்றன. அடிமைத்தொண்டு புரியும் வேலைக்காரக் கிழவன் பீர்ஸ்—அடிமை விலங்குகளைப் பொன் என்று போற்றுபவன்—ரஷ்யாவில் குடியானவர்களின் அடிமைத் தனத்தை ஒழித்த சட்டம் ஏற்பட்ட காலத்தில் துர்நிமித்தங்கள் தோன்றியதாகச் சொல்லுகிறான். விண்ணிலிருந்து வாத்தியத்தின் தந்தி அறுந்து ஒலித்தாற்போன்ற தொனி கேட்டதாம். அத் தொனியை இரண்டாவது அங்கத்தில் நாம் கேட்கிறோம். "கஷ்டங்கள் வருவதற்கு முன் இப்படித்தான் ஏற்பட்டது. ஆந்தை ஓலமிட்டது; அடுப்பிலும் 'பட்பட்' என்று அடிக்கடி ஓசை கேட்டது" என்கிறான் கிழவன். அதே நாதத்தை நாம் நாடகத்தின் முடிவில் இரண்டாம் முறை கேட்கிறோம். அது மெள்ள இறந்து, நிசப்தம் ஏற்படுகிறது. அத்தொனியால் சிறிது நேரம்

மறைக்கப்பட்டிருந்த கோடாரி ஓசை தூரத்தில் செர்ரி மரங்களை வீழ்த்தும் ஓசை — மறுபடியும் நம் செவிகளில் 'லொட்டு' என்று விழுகிறது. இத்துடன் நாடகம் முடிகிறது. ஒரு மகத்தான மாறுதலின் பிறப்பு - வேதனையின், குறிகள்போல், நம் மனத்தில், தூரத்தில் மறையும் (தந்தி ஒலியும், தூரத்திலிருந்து கேட்கும் கோடாரி) யோசையும்—விழுகின்றன. நம் முன் மேடைமீது கிழவன் பீர்ஸ், தன்னாமையில் எழுந்திருக்கவும் விருப்பமில்லாதவனாய்த் தனியே படுத்துக்கொண்டிருக்கிறான். அவன் அடிமைத்தனம் ஒழிந்ததை ஒரு விபத்தாய்க் கருதுபவன்; இந்த நாதத்தை ஒரு துர்நிமித்தமாய்க் கருதுபவன். லியூபா ஆண்டிரீவ்னா, கயேவ் முதலியவர்கள் நந்தவனம் போன்ற செர்ரித் தோட்டத்தைக் கண்ணீருடன் விட்டுச் சென்றிருக்கின்றனர். சுய வாழ்க்கையில் மூழ்கிய ஜனங்களால் பண்பு செய்யப்பட்ட அழகு அழிந்து, பொதுநல வாழ்க்கை ஏற்படுகிறது. ஆண்டிரீவ்னா, கயேவ் முதலியவர்கள் இன்னலுறுகின்றனர். நாம் அவர்களுக்காகப் பரிதாபப்படுகிறோம். நம் மனத்தில் அவர்களுக்காகவும், தோட்டத்தை அழிக்கும் சமூக நிலைக்காகவும் ஓர் ஆழ்ந்த விசனம் குடிகொண்டிருக்கிறது. ஆனால் இவ்வேதனையில் மறைந்திருக்கும் (நாம் நமது வேதனையின் விசனத்தில் காணக்கூடாத) தெய்வக் கருத்தை, பீர்ஸ் போன்றவர்கள் தாமாக அக்கருத்தை உணருவதற்கு நித்திய பிரும்மச்சாரி டிராவிமாவின் தீர்க்க தரிசனம் வேண்டும். விசனத்தில் மூழ்கியவர்களுக்கு அவ்விசனத்தின் கரையைக் கண்டாலன்றி அந்த திருஷ்டி ஏற்படாது. டிராவிமாவால் உத்ஸாக மூட்டப்பட்ட அன்னியா — எஜமானி லியூபா ஆண்டிரீவ்னாவின் பெண் — மற்றவர்களைப்போல் விசனமுறவில்லை. வீட்டைவிட்டுப் புறப்படும் சமயத்திலும் — தன் தாயாரும் மாமனும் மனங்கலங்கும்போதும் — அவள் குதூகலமாய் இருக்கிறாள். "என் செல்வமே! உன்னுடைய கண்கள் இரண்டு வயிரங்கள்போல ஒளி வீசுகின்றன, நீ மிகுந்த மகிழ்ச்சியுடன் விளங்குகிறாய். உனக்கு மிகுந்த சந்தோஷமாய் இருக்கிறதா?" என்று தாயார் கேட்கிறாள். "ஆம், மிகுந்த மகிழ்ச்சிதான். நமக்கு ஒரு புதிய வாழ்வு ஆரம்பமாகிறது, அம்மா!" என்று பதிலளிக்கிறாள் அன்னியா. வீட்டை விட்டு வெளியேறும் சமயத்தில், "இனிமேல், இந்த வீடே து!... இந்தப் பழைய வாழ்வே து! "போய்வருகிறேன்!" என்கிறான், "புதிய வாழ்வை நாம் வரவேற்போம்!......" என்று சேர்த்துச் சொல்கிறான் டிராவிமாவ்.

லியூபா ஆண்டிரீவ்னு, கயேவ், லொபாகின், டிராவிமாவ் எல்லோருமே பண்புள்ள மனதுடையவர்கள்: தேசாபிமானம் உடையவர்கள். அவர்களுடைய உணர்ச்சி எப்படிப் படிப்படியாய்ப் பேரின்ப நிலையை அடைகிறது என்பதைக் கவனிக்கலாம். லியூபா ஆண்டிரீவ்னு ஐந்து வருஷங்கள் அந்நிய நாடுகளில் வசிக்கிருள். "திடீரென்று ஊரைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் வந்தது......" என்கிருள். கண்ணில் நீர் பெருகியதைத் துடைத்துக்கொள்கிருள். கயேவும் இவ்விதமேதான். "புஸ்தகங்களில் கூடப் பிரசித்தமாயிருக்கிறது எங்கள் தோட்டம்!" என்கிருன். ஆனுல் அவர்கள் இருவரும் கண்ணீரும் கம்பலையுமாய் இருக்கின்றனரேயொழிய, தங்கள் வாழ்க்கையைச் சரியாக அமைத்துக்கொள்ளத் தெரியாதவர்கள், வெளி உலகை மறந்திருப்பவர்கள், இவ்வழகு வாய்ந்த தோட்டத்தை அழிக்கும் வியாபாரி லொபாகினைப் பழிப்பது எளிது. ஆனுல் அவன் வெறும் பண மூட்டை உருவம் அல்லன். சுய லாபத்திலேயே கண்ணுயிருப்பவன் அல்லன். கடைசி வரையில் ஆண்டிரீவ்னுவும் கயேவும் தங்கள் தோட்டத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும் என்று அவன் அவர்களைத் தூண்டிக்கொண்டே இருக்கிருன்; அதற்கு ஆலோசனையும் கூறுகிருன், அவர்கள் அவன் வார்த்தையைக் கேட்காமல் இருக்கின்றனர். மற்ருெருவன் வாங்கப்போகும் தோட்டத்தைத் தான் வாங்கிக் கொள்கிருன். அவர்களுக்கு முன்பு கூறியிருந்த ஆலோசனையைத் தானே பின்பற்றுகிருன். தோட்டத்தை இழந்து விசனமுறும் ஆண்டிரீவ்னுவிடம், "ஏன் என் பேச்சைக் கேட்கவில்லை? என்ன காரணம்? போனதைப்பற்றிச் சிந்திக்கிறதில் காரியமில்லை. (கண்ணீருடன்) நம்முடைய துக்ககரமான கோர வாழ்வு எப்படி மாறுமோ, அப்படி விரைவாக இதெல்லாம் மாறிவிடும்!" என்கிருன். மேலும் அவன் "சில வேளைகளில் துக்கம் வராதபொழுது, நான் இப்படி யோசிக்கிறதுண்டு! 'ஈசனே, நீ எங்களுக்குப் பெரிய காடுகளைத் தந்திருக்கிருய், அசைக்க முடியாதபடி நிலங்களைத் தந்திருக்கிருய், கங்குகரை காணுத வானவெளிகளைக் கொடுத்திருக்கிருய், இத்தனைக்கும் மத்தியில் வசிக்கிற நாங்கள் பெரிய பெரிய ராக்ஷதர்களைப் போலல்லவா இருக்கவேண்டும்!" என்று வேருெரு சந்தர்ப்பத்தில் கூறுகிருன். லியூபாவ் ஆண்டிரீவ்னுவிடம் "செர்ரித் தோட்டத்தையும் ஆற்றங்கரை ஓரமாயுள்ள நிலத்தையும் துண்டு துண்டாகப் பிரித்து பங்களாக்கள் கட்டுவதற்காகக் குத்தகைக்குக் கொடுத்தால் வருஷத்திற்கு 25,000 ரூபிள்

கிடைக்கும்"......"இரண்டரை ஏக்கர் நிலத்துக்குக் குறைந்த பட்சம் வருஷத்திற்கு 25 ரூபிள் குத்தகையில் வரும். நீங்கள் எதை வேண்டுமென்ருலும் பந்தயமாக வையுங்கள். நான் சொல்லுகிறதுதான் நடக்கப்போகிறது. இப்பொழுதே விளம்பரஞ் செய்தால் இலையுதிர் காலத்திற்குள் காணி நிலங்கூடப் பாக்கியிராது. எல்லாத் துண்டுகளையும் வாரிக்கொண்டுபோய் விடுவார்கள்"...... "பின்னுல் நாளடைவில் அவர்கள் ஒவ்வொருவரும் தம்முடைய இரண்டரை ஏக்கர் நிலத்தை உழ ஆரம்பித்துவிடக்கூடும். அப்புறம் உங்கள் செர்ரித் தோட்டம் இருந்த இடம் அழகாக மாறிவிடும்" என்கிருன்.

பிரும்மச்சாரி டிராவிமாவின் உணர்ச்சிதான், எல்லோருடையதையும்விட உன்னத நிலையை எய்தியிருக்கிறது. எல்லோரும் செர்ரித் தோட்டத்தை விட்டுச் செல்லும்போது லொபாகின் அவனைக் கிண்டல் செய்கிருன்; "எத்தனை யுகங்களாகக் கலாசாலையில் வாசித்து வருகிறீர்கள்" என்று கேட்கிருன். டிராவிமாவ்! "வேறு ஏதேனும் விஷயத்தைப்பற்றிப் பேசுங்கள்" ஏதோ சாரமற்ற பழைய விஷயத்தையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே! (ரப்பர் பூட்சுகளைத் தேடிக்கொண்டே) இனிமேல் நாம் சந்திப்பது அரிது. ஆகவே போகிறபொழுது தங்களுக்கு ஒரு விஷயத்தைச் சொல்லிவிட்டுப் போகலாம் என்று நினைக்கிறேன். எப்பொழுதும் கைகளை ஆட்டிக்கொண்டு இருக்காதீர்கள்! அந்தப் பழக்கத்தை விட்டு விடுங்கள். பங்களாக் கட்டுவதும் பங்களாவில் வசிக்கிறவர்கள் கூட நாளடைவில் சொந்தப் பங்களாக்கள் வந்துவிடும் என்று நம்புவதும் கைகளை ஆட்டுகிற காரியமாகவே போய்விடப் போகின்றன. என்ன இருந்தாலும் உங்களிடத்தில் எனக்கு அன்பு இருக்கத்தான் செய்கிறது. உங்களுடைய விரல்களெல்லாம் ஒரு சைத்திரிகனுடைய விரல்களைப்போல் இருக்கின்றன. உங்களுடைய உள்ளம் உணர்ச்சி ததும்பிய கூர்மையான உள்ளம்" என்கிருள். அழகுச் சோலை அழிகிறது. பழமும் புஷ்பமும் போய், கட்டிடமும் பணமும் வருகின்றன. ஆனுல் இதற்கு அப்பாலும் ஒரு புதிய உலகைச் செஹாவ் காண்கிருர். வியாபாரி லொபாகின் பணத்திற்கு அப்பால், ஜனங்கள் வசதிகளுடன் வாழ்வதைத் தூரத்தில் பார்க்கிருன்; நித்திய பிரும்மச்சாரி டிராவிமாவ் லொபாகினுக்கும் அப்பால், பரிபூரணமான அகவுயிர் வாழ்வைப் பார்க்கிருன். கயேவும், லியூபா ஆண்டிரீவ்னுவும் தங்களுடைய வருத்தத்திற்கு அப்பால் பார்க்க இயலாதவர்களாய் இருக்கின்

றனர். அவர்கள் பழைய ரஷ்யாவின் மறையும் ஜனங்கள். அவர்களுக்காக டிராவிமாவ் அனுதாபப்படுகிருன். ஆண்டிரீவ்னு வைத் தாயைப்போல் கருதுகிருன். ஆனுல் செர்ரித்தோட்டத்தின் கதியைக் குறித்து அவன் விசனப்படவில்லை. ''கைகடந்து போன விஷயத்தைப்பற்றித் திரும்பிப் பார்ப்பதில் பயனில்லை.....நீங்கள் மனத்தைச் சமாதானம் செய்துகொண்டு அமைதியாயிருங்கள்'' என்று அவளுக்கு ஆறுதல் கூறுகிருன். அவள் மகள் அன்னியா விடம் ''இந்த ரஷ்ய நாடு முழுதுமே ஒரு தோட்டம். நம் நாடு அகண்டமானது, அழகானது, மகத்தானது. அநேக ஆச்சரிய மான இடங்கள் இதில் இருக்கின்றன...இப்பொழுது யோசித்துப் பார்! அன்னியா! உன்னுடைய பாட்டனும், உன் முன்னேர் களும், உன் பாட்டனுக்குப் பாட்டனும், அனைவரும் அடிமை களை வைத்து நடத்திஞர்கள். அடிமைகளை நிலத்தோடு சேர்த்து வாங்கிஞர்கள், விற்ருர்கள்; அதாவது அநேக மனித உயிர்களுக்கு முதலாளிகளாக இருந்தார்கள். இந்தத் தோட் டத்திலுள்ள ஒவ்வொரு செர்ரி மரத்திலிருந்தும், ஒவ்வோர் இலையிலிருந்தும், ஒவ்வோர் அடிமரத்திலிருந்தும் அடிமைகள் எட்டி எட்டிப் பார்ப்பது உன் கண்ணில் படுகிறதா?......அவர் களுடைய குரல்களை நீ கேட்கவில்லையா?......உன்னுடைய தோட் டத்தை நினைக்கும்பொழுது பயங்கரமாயிருக்கிறது. சாயங்காலத் திலோ அல்லது இரவிலோ இந்தத் தோட்டத்திற்குள் நடந்து போகிற சமயத்தில் மரங்களின் பழைய பட்டைகள் மங்கலான காட்சியை அளிக்கின்றன. நூறு வருஷங்களுக்கு முந்தியோ, அல்லது இருநூறு வருஷங்களுக்கு முந்தியோ நிகழ்ந்தவைகளை, அவைகள் தம் உறக்கத்தில் கனவாகப் பார்ப்பதுபோலப் படுகின்றன. இருண்ட தோற்றங்கள்தாம் அவைகளுக்கு முன் எழுகின்றன. அதிகம் சொல்லுவானேன்? நாம் வெகு காலம் பின் தங்கிவிட்டோம். குறைந்தது இருநூறு வருஷங்களாவது பின் தங்கிவிட்டோம். இன்னும் எதையும் சாதிக்கவில்லை. தேசத் தின் பழைய சரித்திரத்தைப்பற்றி நமக்குத் தீர்மானமான அபிப் பிராயம் எதுவும் ஏற்படவில்லை. வெறும் வரட்டுத் தத்துவங் களைப் பேசுவதைத் தவிரக் கிரியாம்சத்தில் நம்மிடம் ஒன்றும் கிடையாது. நாட்டைப்பற்றியும் வீட்டைப்பற்றியும் ஏதோ ஏக்கம் பிடித்து, 'அது சரியில்லை, இது சரியில்லை' என்று பிதற்று கிருேம்; இல்லாவிட்டால் நம் தேசத்திலுள்ள 'வோதுகை' என்ற மதுவினைக் குடித்து மகிழ்கிருேம். நாம் நிகழ்காலத்தில் உண்மையான வாழ்க்கை நடத்தவேண்டுமாஞல், முதலில் நமது

பழைய சரித்திரத்திலுள்ள குற்றம் குறைகளைக் கண்டுபிடித்துத் தக்க பரிகாரங்கள் செய்யவேண்டும். பரிகாரங்கள் தேடுவது சாதாரண காரியமில்லை, மகத்தான தியாகத்தினாலும், கஷ்டத்தினாலும், ஓய்வொழிவில்லாத அளவற்ற உழைப்பினாலுமே இது சாத்தியப்படும் : இது தெளிவான விஷயம்" என்கிறான்.

இதுதான் இந்நாடகத்தின் கருத்து. இதை எவ்வளவு பொருத்தமாய் ரஷ்யாவிலிருந்து இந்தியாவிற்கு நாம் திருப்பிக் கொள்ளலாம்! செஹாவின் வார்த்தைகள், தீண்டாமையையும் இந்தியாவையும்பற்றி மகாத்மா காந்தி கூறும் வார்த்தைகளே; ஒரு கர்ம யோகியின் வார்த்தைகள்.

மௌன நிலைகள், யோசனை நிலைகள், தயக்க நிலைகள், எல்லாம் முக்கிய இடத்தை வகிக்கின்றன. பேச்சில் பிறக்காத கருத்துணர்ச்சிகளையும், உருவமற்ற எண்ணங்களையும், ஏக்கங்களையும், ஆத்மாவின் தனிமையையும் இவை நடிக்கின்றன. வெளியே காவலாள் கழியைத் தட்டுவது செஹாவ் பல இடங்களில் உபயோகித்திருக்கும் நாடக தந்திரம். காலமே செஹாவ் நாடகத்தில் நடிக்கிறது. உயிரில்லாத பொருள்கள் — தின்பண்டங்கள், நாற்காலிகள், மேஜைகள் காற்றில் லொட லொட வென்னும் சன்னல் கதவுகள், அணைக்கப்படும் விளக்குகள் வண்டிகளின் மணியோசை, சிள் வண்டின் 'கிச்' அரவம், இறந்த ஹம்ஸம், சுவரில் தொங்கும் ஆப்பிரிக்கா படம் — எல்லாம் நடிக்கின்றன. இதே முறையை மேட்டர்லின்க் அனுசரிக்கிறார்.

இம்மாதிரியான ஒரு சிறு தந்திரத்தால், செஹாவ் ஒரு சம்பவத்தின் உயிர்நிலையையே, ஒரு மின்னல் வெட்டுப் போல் சரேலென மேடைமீது பாயும்படிச் செய்துவிடுகிறார். இத்தகையான தந்திரங்கள் சிறந்த நாடக முறை ஆகாது என்று வாதிப்பவர்கள் உண்டு. நடிகர்களே உணர்ச்சிகள் அனைத்தையும் தங்கள் நடிப்பினால் வெளிப்படுத்தவேண்டும் என்பது அவர்கள் வாதம். சூழ்நிலையில்லாமல் உணர்ச்சி பிரகாசிக்கக் கூடியது எனில், ராஜகுமாரனாய் நடிக்கும் ஒருவன் ஏழை உடுப்பை ஏன் தரித்துக்கொள்ளக்கூடாது? ராஜ உடை அவன் உணர்ச்சியை அதன் உண்மை உருவத்தில் காட்டுவதற்குத் தேவையாயிருக்கிறது. இந்தத் தர்க்கத்தைத்தான் முழுவதும் பின்பற்றியிருக்கிறது செஹாவின் நாடக முறை. பரத நாட்டியத்தில், சூழ்நிலையில் அபிநயத்தைச் சுவைக்கும் நம்மவர்கள் இதை முற்றும் அங்கீகரிப்பார்கள்.

செஹாவின் நாடக முறை நாடகத்தின் நடுவில் நம்மவர் களைப்போல் பாட்டைப் புகுத்துவதற்கு இடம் கொடுக்காது. நாடக நுட்பங்களில் கைதேர்ந்த செஹாவ், ராகத்துடன் தாளத்தைச் சேர்ப்பதுபோல், சங்கீதம் உட்பட ஏனைய புறப் பொருள்களையும் கதாபாத்திரங்களைச் சுற்றி அமைக்கிறார். இதுவே அவருடைய மகிமை: "செர்ரித் தோட்டத்தின் முடிவில் கேட்கும் அறுந்த தந்தியொலியும் கோடரியோசையும் அந்த நாடகத்தின் கருத்து அனைத்தையும் ஒரு க்ஷணத்தில் ஒருங்கே திரட்டி, அதனால் நம் மனத்தை நிரப்புகின்றன. இதே முறை யில் "ஹம்ஸவத"த்தில் இறந்த ஹம்ஸமும் துப்பாக்கிச் சப்தமும் நிமித்த ரூபமாகவும் நிமித்த ஒலியாகவும் அமைந்திருக் கின்றன.

நிதர்சன வடிவங்களை அமைப்பதில் செஹாவ் நிபுணர். "செர்ரித் தோட்டம்" ரஷ்யாவிற்கே ஒரு நிதர்சன வடிவம். மேலும் நாடகத்திற்குள்ளேயே அவர் ஆங்காங்கு நிமித்த நிகழ்ச்சிகளை அமைத்திருக்கிறார். உதாரணமாக வாரியா அன்னி யாவிடம் "தோட்டம் ஆகஸ்டு மாதத்தில் ஏலம் போடப்படும்" என்று சொல்லி முடிக்கும் தருணத்தில், லொபாகின் தற்செய லாய்க் கதவு வழியாய் எட்டிப் பார்த்து, 'மா' என்று மாடு போல் வேடிக்கையாய்க் கத்திவிட்டு மறைகிறான். வாரியாவின் கவலைக்கிடமான தோட்டம் பின்னர் அவன் வசமாகப் போவ தற்கு ஒரு நிமித்தம்போல், அவன் அவளுடைய சிந்தனைகளைத் தனக்குத் தெரியாமலேயே இப்பொழுது வேடிக்கை செய்வது போல் இருக்கிறது இது! (வாரியா அவனைக் காதலிக்கிறாள்; அவன் அவளிடம் நட்புடன் பழகும் முறையில் இவ்விதம் தமாஷாய் நடக்கிறான்). லியூபா ஆண்டிரீவ்னு பிரான்ஸ் முதலிய தேசங்களில் வீண் செலவு செய்கிறாள். வீடு திரும்பிய பின்னரும் அவள் யோசனை இல்லாமல் கேட்பவர்களுக்கு எல் லாம் பணத்தை அள்ளிக் கொடுக்கிறாள். இதற்கு ஒரு நிதர்சன வடிவமாய், இரண்டாம் அங்கத்தில், அவள் தன் பணப்பைக்குள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே பையை நழுவ விடுகிறாள். நாணயங்கள் தரையில் சிதறுகின்றன. வேலையாள் அவற்றைப் பொறுக்கி அவளிடம் கொடுக்கிறான். இன்னும் ஓர் உதாரணம் வாரியா லொபாகினைக் காதலிக்கிறாள். அவன் அவளிடம் பிரியமாயிருந்த போதி லும் அவளுடன் மணத்தைக் கோராமல் இருக்கிறான். லியூபா

ஆண்டிரீவ்ஞு அவனை வற்புறுத்துகிருள். "இப்பொழுதே பேசுவதில் எனக்குச் சம்மதமே......இதை முடிப்போமே—ஆனல் நீங்கள் இல்லாமல் நானுக அவளிடம் எப்படிக் கேட்பது? என்கிருன் லொபாகின். "எல்லாம் ஒரு நிமிஷ வேலை. இப்பொழுதே அவளைக் கூப்பிடுகிறேன்" என்று ஆண்டிரீவ்ஞு ஆர்வத்துடன் சொல்லுகிருள். "இந்தச் சந்தர்ப்பத்தில் சந்தோஷம் கொண்டாடுவதற்கு நான் வாங்கிவந்த மதுவும் இதோ இருக்கிறது"......என்று அவன் கிண்ணங்களுக்குள் நோக்குகிருன். "எல்லாம் காலியாக இருக்கின்றன. "யாராவது ஏற்கனவே குடித்துவிட்டார்களா?" என்கிருன். இந்தத் துர்நிமித்தத்தின் பூர்வ ஆதர்சனத்தைப் போலவே மணக்கும் எண்ணமும் முடிகிறது.

"வருன்யா மாமா"வில் வான்யா எலீனுவுக்கு "சரத்கால ரோஜா" மலர்களை அன்பளிப்பாய்க் கொண்டு வருகிருன். அது அவன், வயதுசென்ற பின் அவளுக்குத் தன் காதலை அர்ப்பணம் செய்வதற்கு ஓர் அறிகுறியாய் இருக்கிறது. மேலும் அவளுக்கென்று கொண்டுவந்த பூக்களை டாக்டர் ஆந்திராவ் எடுத்துக்கொண்டு போய்விடுகிறுன். ஆந்திராவ் எலீனுவின் மனத்தைக் கவர்ந்து வான்யாவின் காதல் சித்திக்குத் குறுக்கே நிற்பதற்கு இது ஒரு புறத்தோற்றமாய் இருக்கிறது.

"ஹம்ஸவத"த்தில் டாக்டர் டார்ன், எழுத்தாளன் திரிப்லீவைப்பற்றி, "அவனிடத்தில் ஒரு சக்தி இருக்கத்தான் இருக்கிறது. ஆமாம்! அவன் சிந்தனைகள் எல்லாம் நிதர்சன வடிவங்களில் அமைந்து விடுகின்றன. அவன் கதைகளில் உயிர் ததும்புகிறது; என் மனத்தில் அவை ஆழமாய்ப் பதிகின்றன!" என்கிருர். இவ்வார்த்தைகளை எழுதுகையில் செஹாவ் தம்மை நினைத்துக்கொண்டே எழுதினுர்போலும்! *

---

* புரசு பாலகிருஷ்ணன் எழுதிய "ஆன்டன் செஹாவ்" என்ற புஸ்தகத்திலிருந்து ஆசிரியரின் அனுமதியுடன் எடுக்கப்பட்டது.

நாடகப் பாத்திரங்கள்

ரீமாட்டி ரனவ்ஸ்கி: இந்த அம்மாளுடைய சொந்தப்பெயர் லீயூபா ஆண்டிரியவ்னு; இவள் செர்ரித் தோட்டத்தின் சொந்தக்காரி.

அன்னியா: அவளுடைய மகள், வயது பதினேழு.

வாரியா: அவளுடைய வளர்ப்புப் பெண், வயது இருபத்திரண்டு.

கயேவ்: முழுப்பெயர், லியானிட் ஆண்டிரியவிச் கயேவ். இவன் ரீமாட்டியின் சகோதரன்.

லொபாகின்: முழுப்பெயர், எர்மலே அலெக்சியவிச்லொபாகின்; இவர் ஒரு வியாபாரி.

டிராவிமாவ்: முழுப்பெயர், பைட்டர் சர்கீயுவிச் டிராவிமாவ் ஒரு கலாசாலை மாணுக்கன்.

சிமியனுவ்: முழுப்பெயர், பேரிஸ் பார்சியோவிச் சிமியனுவ்-பிஸ்சிக்; ஒரு மிராசுதார்.

எபிக்கிடாவ்: முழுப் பெயர் சேமியன் பாண்டலியவிச்; வீட்டுக் காரியஸ்தன்.

சார்லட்டா: முழுப் பெயர், சார்லட்டா ஐவனோவா; செவிலித் தாய்.

துன்னியாஷா: வேலைக்காரி.

பீர்ஸ்: வேலைக்காரன்; வயது எண்பத்தேழு.

யாஷா: வாலிப வேலைக்காரன்.

ஓர் அந்நியன்.

ஸ்டேஷன்மாஸ்டர்.

தபாலாபீஸ் குமஸ்தா.

விருந்தாளிகள், வேலைக்காரர்கள்.

4098

ஆக்கியோன் முகவுரை

செஹாவின் கதைகளிலும் நாடகங்களிலும் ஓடுகிற முக்கிய ரசம் கருண ரசந்தான் என்ற விஷயம் அவைகளைப் படிக்கிறவர்களுக்குப் புலனாகாமற் போகாது. உலக நிகழ்ச்சிகளனைத்தையும் அவர் ஓர் அளவு கடந்த கருணையோடு நோக்குகிறார்.

அவருடைய நாடகங்களில் செயலோட்டம் இல்லை; அசைவற்றுத்தான் எல்லாம் நிற்கின்றன. "ஒரு சிறிய அறையில் கணப்புக்குப் பக்கத்திலுள்ள ஒரு மேஜையைச் சுற்றியே மனிதனின் எல்லா இன்ப துன்பங்களும் விரிந்துவிடுகின்றன! நாம் துயருறுகிறோம்; பிறரைத் துயருறும்படி செய்கிறோம். நாம் காதலிக்கின்றோம். இறுதியில் ஒரு மூலையில் இறந்து கிடக்கின்றோம் ஒரு குறுகிய வட்டத்தில் எல்லாம் நிகழ்ந்து விடுகின்றன" என்று மேட்டர்லிங் கூறுகிறார்.

இத்தகைய இயல்பு செஹாவின் நாடகங்களுக்குப் பொருத்தமாகும். மேட்டர்லிங் நாடகங்கள்போல் அமைப்பில் செஹாவ் நாடகங்கள் திகழ்ந்தாலும், உணர்ச்சியில் வேற்றுமை உண்டு. மேட்டர்லிங்கில் ஒரு பயங்கர உணர்ச்சி எழுகின்றது; செஹாவில் ஓர் அசைவற்ற தன்மையும் ஆழ்ந்த சோகத்தையுந்தான் பார்க்கிறோம்.

செஹாவின் நாடகங்களில் மௌனம் பேசுகின்றது; காலம் உரையாடுகின்றது. அறுந்த தந்தியின் நாதத்திலிருந்து ஒரு நூதன உலகம் விரிகின்றது. கோடரி விழும் ஒலியிலிருந்து ஒரு புதிய குவலயம் உருவடைகின்றது.

வெண்ணிலாக் கதிரிலும், மலரின் மணத்திலும், முரலும் காற்றின் மர்மர அரவத்திலும் ஓயாமல் மாறி மாறி நிகழ்ந்து கொண்டிருக்கும் அறிவு - பிரிவு - மரணம் என்ற இந்த நாடகத்தைத்தான் செஹாவ் காண்கின்றார்.

மெல்லத் தேய்ந்து மறைகின்ற கானத்திலே இருளுகின்ற இதயத்தை அவர் 'மூன்று சகோதரிக'ளில் சித்திரிக்கிறார். 'கடற்பறவை' உடைந்த உள்ளத்தின் சின்னமாய்த் திகழ்கின்றது. அமைதியின்றி அடையமுடியாத, பகற் கனவு காணும் ருஷியர் உள்ளத்தைக் காட்டும் ஆதரிசமாய் 'மூன்று சகோதரிகள்'

நிற்கின்றது. 'செர்ரித் தோட்ட'த்தில், ருஷிய நாட்டின் புதிய சகாப்தத்தின் முரசொலி கேட்கின்றோம். சுருங்கக் கூறுமிடத்து ஒவ்வொரு நாடகமும் உருவ நாடகமாகும்.

செஹாவ் நாடகங்களில், அவர் அகவுயிர் வளர்ச்சியைப் பார்க்கிறோம். 'இவநா'வில் வாழ்க்கையில் நம்பிக்கை அற்ற நிலை தோன்றுகிறது. 'இவநாவ்' போல 'வானியா மாமா'வில் இருள் அதிகரித்தாலும் ஸொனியாவின் தீர்க்க தரிசனம் அவ்விருளைக் கிழித்து அப்பால் செல்லுகிறது. அவள் கண்முன் ஓர் அழகிய இன்ப உலகம் விரிகின்றது; அவள் செவியில் ஓர் அமரகீதம் ஒலிக்கின்றது. 'மூன்று சகோதரிக'ளில் அமைதியற்ற சஞ்சல நிலைதான் நம்முன் தோன்றுகின்றது. ஆனால் செர்ரித் தோட்டத்தில் பலவித மனநிலைகளைக் காண்கின்றோம். பிர்ஸ்ஸுக்கு அடிமைத் தனையே ஆபரணமாகிறது. கயேவ், ரனவ்ஸ்கி - இவர் இருவரையும் சோக முகில் மூடிவிடுகின்றது; தோட்டத்தைக் காக்கவும் வகையறியார், கைவிடவும் மாட்டார். கன அந்தகாரத்தில் திக்குத்திசை தெரியாமல் அவர்கள் தத்தளிக்கின்றனர். அடிமைக் குலத்தில் தோன்றியும் அத்தளை நீங்கிய லொபாகின் கண்முன் செர்ரித் தோட்டம் மறைந்து பங்களாக் காட்சி யீதந்து வருகின்றது. டிராவிமாவின் தீர்க்க தரிசனத்தில் ஒரு கிருதயுகம் எழுகின்றது. அந்தப் புதிய சகாப்தத்தில் ரனவ்ஸ்கியின் மகள் அன்னியாவின் தெய்வக் குரல் கேட்கிறது.

ருஷிய நாட்டின் கபட அமைதி, இனிச் சீறியெழும் புயலைக் குறிக்கும் என்பதை அவர் உணர்ந்திருக்கிறார். 'வாழ்விலே அடிபட்டுச் சலித்து ஓய்ந்த ஜனங்கள் நம் நாட்டவர் என்று தோன்றலாம். ஏதோ ஒரே அச்சிலே வார்த்ததுபோலச் சாரமில்லாத வாழ்வுப் பாதையில் போய்க்கொண்டிருக்கலாம். பூஞ்சக்காளம் பூத்த வாழ்வாய் அது இருக்கலாம். நம் நாட்டு அறிவாளிகள் பழங் கந்தைகளையும் ஏடுகளையும் புரட்டிக்கொண்டிருக்கலாம்; ருஷ்ய நாட்டின் வழக்கம்போல ஒருவர்மேல் ஒருவர் விழுந்து பிடுங்கிக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒரு புதிய சக்தி நம்மைச் சுற்றிப் பொங்கிக் கொந்தளித்துக்கொண்டிருக்கிறது. கனவில் தெய்வங்கள் நம்மை எதிர்கொள்ளுவனபோலப் பெரிய நிகழ்ச்சிகள் நம்முன் தாண்டவம் ஆடப்போகின்றன' என்று தம் குறிப்புப் புத்தகத்தில் மொழிந்துள்ளார்.

இத்தகைய தீர்க்கதரிசியின் இதயத்தை நன்குணர்ந்த என் நண்பர் புரசு பாலகிருஷ்ணன் அவர்கள், அவர் நாடகங்களின்

நயங்களை நுணக்கமாய்த் துருவி ஆராய்ந்து, 'செஹாவ்' என்ற தம் புத்தகத்தில் அவைகளை மிகக் கவின்பெறக் கூறியுள்ளார். அப்புத்தகத்தில் காணப்படும் சில பாகங்களை என் மொழிபெயர்ப்பிற்கு அவர் அனுமதிபெற்று முகவுரையாக அமைத்துக்கொண்டேன். மிக மனமுவந்து எனக்கு அனுமதி தந்த அவருக்கு என் நன்றியைச் செலுத்துகிறேன். இத்துறையில் எனக்கு மிகுந்த ஆர்வத்தைத் தூண்டிய என் நண்பர் ஸ்ரீ இராகவ பாலிகா அவர்களை நான் மறவேன். கைப்பிரதியில் மூலத்தோடு உற்று நோக்கி அச்சு வாகனத்திற்குத் தயாராய் வைத்த ஸ்ரீ ப. ராமசுவாமி ஐயங்கார் அவர்கட்கும், அச்சுப் பிழைகளைக் களைந்து தந்த ஸ்ரீ எஸ். வி. வரதராஜ ஐயங்கார் அவர்கட்கும் என் நன்றி உரியதாகும். தக்க முறையில் இப் புத்தகத்தை வெளியிட்ட அல்லயன்ஸ் கம்பெனியாருக்கும் என் மனமார்ந்த வந்தனத்தை அளிக்கின்றேன்.

திருவல்லிக்கேணி,
16—10—48.

ரா. ஸ்ரீ. தேசிகன்.

சமர்ப்பணம்

என்னைச் 'செல்லமணி' என்று மிகப் பரிவுடன் அழைத்து மறைந்த என் பெற்றோர்களின் நினைவு மலராய் இந்த மொழிபெயர்ப்பைச் சமர்ப்பிக்கின்றேன்.

செர்ரித் தோட்டம்

முதல் அங்கம்

[இப்பொழுதும் குழந்தைகளைத் தாலாட்டும் கூடம் என்று அழைக்கப்படும் ஓர் அறை. அதன் கதவுகளில் ஒன்று அன்லியா அறைக்குப் போகிற வழி. விடியற் காலம்: கொஞ்ச நேரமானால் சூரியன் கிளம்பிவிடுவான். மே மாதம்; செர்ரி மரங்கள் பூத்திருக்கின்றன. ஆனால் தோட்டத்தில் குளிரும், காலைப்பனியும்; அறையின் ஜன்னல்கள் மூடப்பட்டிருக்கின்றன. துன்னியாஷா மெழுகு வர்த்தியை எடுத்துவருகிறாள். லோபாகின் புத்தகமும் கையுமாக வருகிறான்.]

லொபாகின்: அப்பாடா, ஆண்டவன் அருளால் ரயில் வந்து விட்டது! மணி என்ன?

துன்னியாஷா: இரண்டு அடிக்கப் போகிறது. (வர்த்தியை அணைத்துக்கொண்டே) வெளிச்சமாகிவிட்டதே!

லொபாகின்: எவ்வளவு நேரங்கழித்து வண்டி வந்தது! குறைந்தது இரண்டுமணி நேரம் தாமதப் பட்டிருக்குமே! (கொட்டாவி விட்டுக்கொண்டும் காலை நீட்டிக்கொண்டும்) நான் புத்திசாலி தான்! நல்ல காரியம் பண்ணினேன்! ஸ்டேஷனுக்குப் போய் அழைத்துவர வேண்டும் என்ற கருத்துடன் வந்தேன்! நாற்காலியில் சாய்ந்தபடியே உறங்கிவிட்டேன்...எவ்வளவு வேதனையா யிருக்கிறது... நீ வந்து என்னை எழுப்பியிருக்க வேண்டாமா?

துன்னியாஷா: நீங்கள் போயிருப்பீர்களென்று நான் நினைத் தேன். (செவி சாய்த்து) இப்பொழுது அவர்கள் வந்து விட்டார்கள் போலிருக்கிறது!

லொபாகின்: (செவி சாய்த்து) இல்லையே...சாமான்களை எடுக்க நாழிகையாகும். இதை எடுக்கவேண்டும், அதை எடுக்க

வேண்டும்......ரனவ்ஸ்கி அம்மாள் ஊரைவிட்டு வெளியே போய் ஐந்து வருஷமாகிவிட்டது. இப்பொழுது என்ன மாதிரி இருப்பாளோ தெரியாது. அவள் நல்லவள். சகஜமாய்ப் பழகலாம்; கள்ளங்கபடு இல்லாதவள். எனக்குப் பதினைந்து வயதா யிருந்தபொழுது நிகழ்ந்த விஷயம் நேற்று நடந்ததுபோல் ஞாபகமிருக்கிறது. என்னுடைய தகப்பனார் - இப்பொழுது இறந்துவிட்டார் - இந்தக்கிராமத்தில் ஒரு கடை வைத்திருந்தார். அவரும் நானும் ஒரு காரியமாக இங்கே வந்தோம். என் தந்தை கொஞ்சம் மொந்தை அதிகம் போட்டிருந்தாரோ என்னவோ, சடாரென்று என்மீது ஓர் அடி விட்டார். உள்மூக்குப் பெயர்ந்து ரத்தம் வந்தது. இளங்கொடிபோல் இருந்த சீமாட்டி ரனவ்ஸ்கி அதைப் பார்த்து ஓடிவந்து, இந்த அறையிலே - இதே குழந்தைக் கூடத்திலே - உள்ள கைகால் கழுவுகிற பாத்திரத்திலிருந்து தண்ணீர் எடுத்துத் துடைத்தாள். துடைத்துக்கொண்டே, 'அப்பா குழந்தாய், உனக்குக் கலியாணமாவதற்குள் மூக்கு சரியாகப் போய்விடும்' என்று சமாதானப்படுத்தினாள். (சிந்தனையில் ஆழ்கிறான்) 'சின்னக் குடியானவனே' என்று என்னை அழைத்தாள் அந்த அம்மாள். ஆமாம் உண்மைதான். என் தகப்பனார் ஒரு குடியானவர். ஆனால் ஒரு கனவான் அணிந்துகொள்ளுகிற அங்கியும், காலில் பளபளப்பான பூட்சுகளும் நான் அணிந்திருக்கிறேன். தோலினால் செய்த பை போய், பட்டுப் பை வந்திருக்கிறது. என்ன இருந்தாலும், யோசித்துப் பார்த்தால் நான் குடியானவன் தானே!......(புத்தக இதழ்களைப் புரட்டிக்கொண்டு) வாசித்துக் கொண்டிருந்தேன். ஒன்றும் விளங்கவில்லை. அப்படியே அயர்ந்துவிட்டேன். (சிந்தனையில் ஆழ்கிறான்.)

துன்னியாஷா: நாய்கள் உறங்காமல் இரவு முழுவதும் ஓலமிட்டனவே, எஜமானர்கள் வருகிற செய்தி அவைகளுக்குக்கூடத் தெரியும்போல் இருக்கிறது!

லொபாகின்: துன்னியாஷா, உடம்புக்கு என்ன? உன்னைப் பார்த்தால் —

துன்னியாஷா: என் கைகள் நடுங்குகின்றன. எனக்கு மயக்கம் வந்துவிடும்போல் இருக்கிறது.

லொபாகின்: துன்னியாஷா, உனக்கு உணர்ச்சி வேகம் அதிகம். நீ பெரிய சீமாட்டியைப்போல உடை அணிந்துகொள்கிறாய், தலையைச் சிங்காரித்துக்கொள்கிறாய். இந்த வேஷம் உனக்குச்

சரியில்லை. ஒவ்வொருவரும் தாம் இருக்கும் நிலையை மறந்துவிடக் கூடாது.

(எபிக்கிடாவ் ஒரு பூங்கொத்தைக் கையிலேந்தி வருகிறான்; உடலில் அவன் ஒரு சாதாரணச் சட்டை அணிந்திருக்கிறான்; கால்களில் பளபளப்பான பூட்சுகள் மின்னுகின்றன; அவை 'கிரீச், கிரீச்' என்று ஓசை செய்கின்றன; அவன் உள்ளே நுழைகையில் புஷ்பங்களை நழுவவிடுகிறான்.)

எபிக்கிடாவ்: (விழுந்த புஷ்பங்களைப் பொறுக்கிக்கொண்டு) தோட்டக்காரன் புஷ்பங்கள் அனுப்பியிருக்கிறான். இவைகளைச் சாப்பாட்டுக் கூடத்தில் வைக்கவேண்டுமாம். (புஷ்பங்களைத் துன்னியாஷா கையில் கொடுக்கிறான்)

லொபாகின்: எனக்குக் கொஞ்சம் ஷர்பத் ஏதாவது கொண்டு வா.

துன்னியாஷா: இதோ கொண்டுவருகிறேன். (வெளியே போகிறாள்.)

எபிக்கிடாவ்: வெளியே காலைப்பனி கொட்டுகிறது, கடுங் குளிர் மூன்று டிகிரிவரை இறங்கிவிட்டது. இந்தச் சமயம் செர்ரி மரங்கள் பூத்துச் சொரிகின்றன. இங்குள்ள சீதோஷ்ண நிலை எனக்குப் பிடிக்கவேயில்லை. (பெருமூச்செறிந்து) எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. சந்தர்ப்பத்திற்குத் தகுந்த சீதோஷ்ணமே இங்கு இருப்பதில்லை. இது இருக்கட்டும். இப்பொழுது, லொபாகின், இந்தப் பூட்சுகளை நேற்று முன்தினம் வாங்கினேன். சிறிதளவு நடந்தாலும், இவை 'கிரீச், கிரீச்' என்று கத்துகின்றன. இதற்கு ஒரு நிவர்த்தியும் தெரியவில்லை. இவைகளுக்கு என்ன எண்ணெய் தடவலாம்?

லொபாகின்: நான் கொஞ்சம் நிம்மதியாய் இருக்கவேண்டும். என்னைவிட்டு எங்கேயாவது போயேன்! நீ பெரிய பீடையாய் இருக்கிறாய்!

எபிக்கிடாவ்: பொழுது விடிந்தால் எனக்கு ஏதாவது ஓர் இழவு வந்துவிடுகிறது. நான் முனகுவதில்லை. துரதிர்ஷ்டங்கள் எனக்கு வழக்கமாகிவிட்டன. அதனால் சிரிக்கவும் செய்கிறேன். (துன்னியாஷா வந்து, ஷர்பத்தை லொபாகினுக்குக் கொடுக்கிறாள்) நான் போகிறேன். (நாற்காலிமீது மோதியதால் அது கவிழ்ந்து விடுகிறது.) இதோ பார்... (தான் வெற்றிபெற்றதுபோன்ற உவகையுடன்) இதுதான் நான் சொன்னது! இந்த மாதிரி விஷயந்தான் எப்பொழுதும் நடக்கிறது...நிரம்ப ஆச்சரியம் (வெளியே போகிறான்.)

துன்னியாஷா: உங்களுக்குத் தெரியுமா, ஐயா? எபிக்கோடாவ் என்னைக் கல்யாணம் செய்துகொள்வதற்காகக் கேட்டிருக்கிருன்.

லொபாகின்: அப்படியா?

துன்னியாஷா: என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை. அவன் ஒரு சாது; ஆனால் சில சமயங்களில் பேச ஆரம்பித்து விட்டால், என்ன சொல்லுகிருன் என்று நமக்குப் புரியாது. அழகான பேச்சு. உணர்ச்சி ததும்பியிருக்கும். ஆனாலும் அர்த்தம் மட்டும் நமக்கு விளங்காது. ஆயினும் ஒருவகையில் அவன் எனக்கு உகந்தவனே. என்மேல் அவன் காதல் கொண்டிருக்கிருன். அவனுக்கு அதிர்ஷ்டமில்லை; ஒவ்வொரு நாளும் ஒரு விபரீதம் நேர்ந்துகொண்டே இருக்கிறது. இங்கே எல்லோரும் அவனை ஏளனம் செய்கிருர்கள். அவன் பெரிய பீடை என்று நிந்திக்கிருர்கள்.

லொபாகின்: (எதையோ உற்றுக் கேட்டு) சத்தம் கேட்கிறது; அவர்கள் வருகிருர்கள் என்று தோன்றுகிறது. நாம் போய் எதிர்கொண்டு அழைப்போம். என்னை அவள் அடையாளம் தெரிந்துகொள்வாளா என்பது சந்தேகந்தான். ஐந்து வருஷங்களாக நான் அவளைப் பார்க்கவில்லை.

துன்னியாஷா: (மனம் குழம்பி) நான் மூர்ச்சித்து விடுவேன் போல் இருக்கிறது......நிச்சயமாய் மூர்ச்சையாகிவிடுவேன்.

[இரண்டு வண்டிகள் வருகிற சத்தம் கேட்கிறது. லோபாகின், துன்னியாஷா இருவரும் வேகமாய்ப் போகிருர்கள். நாடகமேடையில் ஒருவரும் இல்லை. பக்கத்து அறைகளில் சத்தங்கள் எழுகின்றன. பீரிஸ் ஓர் ஊன்று கோலின்மேல் சாய்ந்துகொண்டு, மேடையின் ஒரு பக்கத்தி லிருந்து மறுபக்கத்துக்கு விரைவாகப் போகிருன். சிமாட்டி ரனவ்ஸ்கியை அழைத்துவர அவன் ஸ்டேஷனுக்குப் போயி ருந்தான். அவன் பழையகாலத்து வேலைக்காரனுக்குரிய உடை களும், டவாலியும், தலையில் நீண்ட ஒரு தொப்பியும் அணிந்தி ருக்கிருன். வாய்க்குள் ஏதோ முணுமுணுத்துக்கொண் டிருக்கிருன். ஆனால் ஒருவார்த்தைகூடச் சரியாக வெளியே கேட்கவில்லை. திரைக்குப் பின்னால் சத்தம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. 'வாருங்கள் உள்ளே போவோம்...' என்று ஒரு குரல் ஒலிக்கிறது. சிமாட்டி ரனவ்ஸ்கி, அன்னியா, ஒரு வளர்ப்பு நாயை அழைத்துக்கொண்டு

சார்லட்டா ஆகியோர் பிரயாண உடைகளுடன் மேடைக்கு வருகின்றனர். வாரியா மேலங்கியும், அதற்கு மேலே ஒரு சால்வையும் அணிந்துகொண்டு வருகிருள். கயேவ், சிமியனுவ், லொபாகின் இவர்கள் வருகின்றனர். துன்னியாஷா ஒரு படுக்கைச் சுருளையும் குடையையும் எடுத்துவருகிருள். வேலைக்காரர்கள் பல சாமான்களைத் தூக்கிக்கொண்டு வருகிருர்கள். எல்லோரும் அறையின் குறுக்கே நடந்து செல்லுகின்றனர்.]

அன்னியா: நாம் இப்படி உள்ளே போவோம், அம்மா, இது என்ன அறை என்று உனக்கு ஞாபகமிருக்கிறதா?

ரனவ்ஸ்கி: [சந்தோஷமாய் ஆனந்தக் கண்ணீருடன்] குழந்தைக் கூடம்!

வாரியா: எவ்வளவு குளிர்! கைகளெல்லாம் மரத்துப் போய் விட்டன, அம்மா, உங்களுடைய அறைகள் இரண்டும், வெள்ளை அறையும் நீல அறையும், முன் இருந்தனபோல அப்படியே இருக்கின்றன, ஒரு மாறுதலும் இல்லை.

ரனவ்ஸ்கி: இந்தக் கூடம் எனக்கு மிகவும் பிரியமானது. நான் குழந்தையாயிருந்தபோது இங்கேதான் தூங்குவது வழக்கம். ......(அழுகிருள்) இப்பொழுதுகூட நான் ஒரு குழந்தையைப் போலவே நடந்துகொள்கிறேன்......(தன் சகோதரனையும் வாரியாவையும் முத்தமிட்டு, மறுபடி சகோதரனை முத்தமிடுகிருள்) வாரியா முன்போலவே இருக்கிருள். கன்னிகா மடத்துப் பெண்போல இருக்கிருள். இதோ துன்னியாஷாவும் இருக்கிருளே......(துன்னியாஷாவும் முத்தமிடுகிருள்).

கயேவ்: ரயில் இரண்டுமணி நேரம் தாமதித்து வந்திருக்கிறது. எவ்வளவு ஒழுங்காயிருக்கின்றன காரியங்கள்!

சார்லட்டா; (சிமியனுவைப் பார்த்து) என் நாய் இப்போது கடலை, பருப்புக்களைக்கூடச் சாப்பிடும்!

சிமியனுவ்: அப்படியா! உண்மையாகவா? (அன்னியாவும் துன்னியாஷாவும் தவிர மற்றவர்கள் போகிருர்கள்)

துன்னியாஷா: நீங்கள் இல்லாததால் வீடு வெறிச்சென்று இருந்தது...... (அன்னியாவின் சட்டையையும் தொப்பியையும் கழற்றி எடுக்கிருள்.)

அன்னியா: ரயிலிலே நாலு நாளாக இரவில் தூக்கமில்லை... இங்கேயோ குளிர் நடுக்குகிறது!

துன்னியாஷா: நீங்கள் போகும்போது 'லென்ட்' பண்டிகைச் சமயம், குளிரும் பனியுமாய் இருந்தது; ஆனால் இப்பொழுது, என் தங்கமே (சிரித்து அவளை முத்தமிட்டு) என் செல்வமே, என் அருமைக் கருவூலமே, நீ இல்லாமல் எப்படித் தவித்தேன் தெரியுமா!......இப்பொழுது உன்னிடம் சொல்லித்தான் ஆகவேண்டும். இனி ஒரு நிமிஷங் கூடத் தாமதிக்கக் கூடாது.

அன்னியா: (அசிரத்தையாக) மறுபடி பழைய விஷயந்தானே?

துன்னியாஷா: எபிக்கிடாவ் என்னைக் கல்யாணம் செய்து கொள்வதாகச் சொல்லியிருக்கிறான், 'ஈஸ்டர்' திருநாளைக்கு அப்புறம் என்னிடம் நேரில் சம்மதம் கேட்டிருக்கிறான்.

அன்னியா: எப்பொழுதும் உனக்கு இந்தப் பாட்டுத்தான்...... (கூந்தலை ஒழுங்கு படுத்திக்கொண்டு) என் கொண்டை ஊசிகளை எங்கோ தொலைத்துவிட்டேன்...... (மிகுந்த களைப்பினால் அவளால் நிற்கக்கூட முடியவில்லை.)

துன்னியாஷா: எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை, அவன் என்னைக் காதலிக்கிறான். - அளவுகடந்து காதலிக்கிறான்!

அன்னியா: (கதவு வழியாகத் தன் அறையை அன்புடன் பார்த்து) என் அறை, என் ஜன்னல்கள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. நான் இவைகளை விட்டுப் பிரியவேயில்லை யென்று தோன்றுகிறது! இப்பொழுது வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டேன்! நாளைக் காலை எழுந்திருந்ததும், நான் செர்ரித் தோட்டத்திற்கு ஓடிச் செல்வேன். ஆனால் இப்பொழுது தூக்கம் மட்டும் வரவேண்டும்; வழி நெடுக நான் கண் மூடவேயில்லை. எனக்கு அவ்வளவு கவலையும் ஆத்திரமும் உண்டாகியிருந்தன.

துன்னியாஷா: டிராவிமாவ் நேற்று முன்தினம் இங்கே வந்து சேர்ந்தார்.

அன்னியா: (உவகையுடன்) நம்முடைய டிராவிமாவா?

துன்னியாஷா: ஸ்நானம் செய்கிற அறைக்குப் பக்கத்திலுள்ள பகுதியிலேயே அவர் தங்கியிருக்கிறார், அங்கேதான் உறங்குகிறார். அவரால் எங்களுக்கு இடையூறாகயிருக்குமோ என்று அவர் கேட்டார். (தன் கடிகாரத்தைப் பார்த்து)

அவரை நான் எழுப்பி இருக்கவேண்டும், ஆனால் வாரியா எழுப்ப வேண்டாம் என்று சொல்லிவிட்டாள். (இடுப்பில் ஒரு கொத்துசாவியுடன் வாரியா வருகிறாள்)

வாரியா: துன்னியாஷா, காபி கொண்டுவா, சீக்கிரம் அம்மா வுக்குக் காபி வேண்டுமாம்.

துன்னியாஷா: இதோ கொண்டுவருகிறேன்! போகிறாள்.

வாரியா: அன்னியா ஒருவாறு கடவுள் புண்ணியத்திலே, சௌக் கியமாய் வந்து சேர்ந்தாயே! வீட்டுக்கு எப்பொழுது வரப் போகிறாய் என்று ஆகிவிட்டது. (அவளை அழைத்துக் கொண்டு என் கண்மணி, வீடு வந்து சேர்ந்துவிட்டாய்! என் அழகி வந்துவிட்டாய்!

அன்னியா: எவ்வளவு கஷ்டமாகிவிட்டது, தெரியுமா உனக்கு?

வாரியா: நீ சொல்லாமலே நான் ஊகித்துக்கொள்வேனே!

அன்னியா: பண்டிகையின்போது நான் வீட்டை விட்டுக் கிளம்பினேன். வழியெங்கும் சார்லட்டா பேசிக்கொண்டும், ஜாலவித்தைகள் செய்துகொண்டும் வந்தாள். ஆமாம், இந்தச் சார்லட்டாவை என்னோடு தள்ளிவிடவேண்டும் என்று உனக்கு எப்படித் தோன்றிற்று?

வாரியா: சரிதான், நீ மட்டும் தனியே பிரயாணம் செய்ய முடியுமா, என்ன? உனக்கு வயது பதினேழுதானே ஆகிறது!

அன்னியா: நாங்கள் பாரிஸ் நகருக்குப் போகும்போது அங்கேயும் குளிரும் பனியுந்தான். எனக்குப் பிரெஞ்சு நன்றாகத் தெரியாததால் என் பேச்சு மிகவும் கோர மாய் இருந்தது. அம்மா நாலாவது மாடியில் இருந்தாள். அவளைப் பார்க்கப் போனேன். அறையில் பிரெஞ்சுக்காரர் களும், ஸ்திரீகளும் ஒரு புத்தகத்துடன் ஒரு பாதிரியாரும் அம்மாவுடன் இருந்தார்கள். அறை முழுதும் புகை மண்டி உற்சாகத் தோற்றமே இல்லாதிருந்தது. அந்த நிலையில் அம்மாவைப் பார்க்க எனக்கு மிகவும் வருத்தமாயிருந்தது. அவளைக் கட்டிக்கொண்டு, விடுவதற்கு மனமேயில்லாமல் தவித்தேன், அவளும் என்னைத் தழுவிக்கொண்டு அழுதாள்.

வாரியா: (கண்ணீர் பெருக்கி) போதும், இந்த விஷயம் வேண்டாம்! கேட்கச் சகிக்கவில்லை!

அன்னியா: மென்டோனுக்குப் பக்கத்திலிருக்கும் பங்களாவை யும் அம்மா விற்றுவிட்டாள். அவள் கையிலும் பணமில்லை.

என்னிடத்திலும் ஒரு காசு கிடையாது: நாங்கள் பாரிஸ் போய்ச் சேர்ந்ததே பெரிய காரியம். அம்மாவுக்குப் பட்டும் புத்திவரவில்லை! ரயில்வே ஸ்டேஷன்களில் சாப்பாட்டுக்குச் சென்றால், விலையுயர்ந்த பண்டமும் பணியாரங்களுந்தான் அம்மா கொண்டுவரச் சொல்லுவாள். அங்குள்ள வேலைக்காரர்களுக் கெல்லாம் தலைக்கு ஒரு ரூபியை இனமாக வீசுவாள். சார்லட்டாவும் அம்மாவைப்போலவே நடந்துகொண்டாள். யாஷாவும் தனக்கு உயர்ந்த சாப்பாடுதான் வேண்டும் என்று உத்தரவிடுவான் - எனக்கு ஒன்றும் சகிக்க முடியவில்லை. யாஷா யார் தெரியுமா? அம்மாவுடைய சொந்த வேலைக்காரன். அவனும் வந்திருக்கிறான்.

வாரியா: அந்த வம்பனை நான் பார்த்தாயிற்று.

அன்னியா: இங்கே நிலைமை எப்படியிருக்கிறது? வட்டிப் பணம் கட்டியாயிற்று?

வாரியா: அது முடிகிற சங்கதியா?

அன்னியா: ஐயோ, தெய்வமே! நாம் என்ன செய்யப் போகிறோம்!

வாரியா: ஆகஸ்டில் தோட்டமெல்லாம் ஏலம் போடப்படும்.

அன்னியா: அப்படியா —

லோபாகின்: (கதவு வழியாகத் தலையை நீட்டிப் பார்த்துக் கொண்டு மே—மே—மே) கனைத்துவிட்டுப் போகிறார்.

வாரியா: (கண்ணீர் வடித்துக்கொண்டு) அவனுக்கு இதுமாதிரிக் கொடுத்தால்தான் சரியாயிருக்கும். அவன் போன திசையைப் பார்த்துத் தன் முஷ்டியைக் காட்டுகிறாள்.

அன்னியா: (வாரியாவைத் தழுவிக்கொண்டு, தணிந்த குரலில்) வாரியா! அவன் உன்னை மணந்துகொள்ள வேண்டிக் கேட்டானா? (இல்லையென்று வாரியா தலையை அசைக்கிறாள்) உண்மையாகவே அவன் உன்னைக் காதலிக்கிறான் ......நிலைமையை நீயே தெளிவுபடுத்தி இருக்கலாமே! இன்னும் எதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறாய்?

வாரியா: இதனால் ஒரு பயனும் ஏற்படுமென்று எனக்குத் தோன்றவில்லை. அவன் பல வேலைகளில் ஈடுபட்டிருக்கிறான், எத்தனையோ விஷயங்களைப்பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறான்......என்னைக் கவனிப்பதே இல்லை,

அவன் தொலையட்டும், அவனைப் பார்ப்பதே எனக்குக் கஷ்டமா யிருக்கிறது......எங்கள் கல்யாணத்தைப்பற்றித் தான் எல்லோரும் பேசுகிறார்கள். என்னை இப்பொழுதே பாராட்டுகிறார்கள். ஆனால் கல்யாணம்மட்டும் ஒரு கனவாய்த் தான் இருக்கிறது... (வேறு குரலில்) சட்டையில் நீ குத்தி யிருக்கும் ஊசி ஒரு சிறு வண்டுபோல அழகாயிருக்கிறது.

அன்னியா: (விசனத்துடன்) அம்மாதான் அதை வாங்கினாள். (தன் அறைக்குள் சென்று ஒரு குழந்தையைப்போல் இன்ப மாகப் பேசுகிறாள்) நான் பாரிஸில் இருந்தபோது ஒரு புகைக் கூண்டில் ஏறி ஆகாயத்தில் பறந்து சென்றேனே!

வாரியா: என் குழந்தாய், என் முத்து, வந்து சேர்ந்தாயே, சௌக்கியமா? (துன்னியாஷா இதற்குள் பாத்திரத்தைக் கொண்டுவந்து காப்பி போட்டுக் கொண்டிருக்கிறாள்)

வாரியா: நாள் முழுதும் வீட்டுக் காரியங்களைப் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுது, உன் நினைவுதான். நல்ல இடத் தில் உனக்குக் கல்யாணமானால், எனக்கு ஒரு பளு நீங்கினது போலாகும். அப்புறம் நான் எந்த வனாந்திரத்திலேனும் திரியத் தயார். கீவ்; மாஸ்கோ முதலிய புண்ணிய நகரங் களுக்கு யாத்திரை செல்வேன். அப்படியே எங்கு வேண்டு மானாலும் போய்க்கொண்டிருப்பேன். - எல்லாவற்றிற்கும் அவனுடைய கிருபை வேண்டும்.

அன்னியா: பறவைகளெல்லாம் விழித்துக்கொண்டு பாடுகின் றனவே; மணி என்ன இருக்கும்?

வாரியா: (இரண்டுக்கு மேலிருக்கும்.) என் கண்ணே, படுக்கப் போ, அம்மா! (அவள் அறைக்குள்போய் அவ்விடம்) எல்லாம் கிருபை! (யாஷா ஒரு கம்பளியையும் தோல் பெட்டியை யும் எடுத்துக்கொண்டு பிரவேசிக்கிறான்.)

யாஷா: (அரங்கில் குதி நடை போட்டுக்கொண்டு) இந்த வழியாய்ப் போகலாமா?

துன்னியாஷா: யாஷா, உன்னைப் பார்த்தால் யாருக்கும் அடையாளமே தெரியாது. வெளியூருக்குப் போய் வந்ததில் எப்படி மாறிப்போய்விட்டாய்!

யாஷா: ஹூம்...நீ யார், அம்மா?

துன்னியாஷா: நீ ஊரைவிட்டுப் போகிறபொழுது (கையால் உயரத்தைக் காண்பித்துக்கொண்டு) இவ்வளவுதான் இருந்தேன். நான் தியோடரின் பெண் துன்னியாஷா, என்னை மறந்துவிட்டாயா?

யாஷா: ஹ்ூம்...நீ என் கரும்பல்லவா! (நான்கு புறத்திலும் பார்த்துக்கொண்டு அவளைத் தழுவுகிருன். அவள் கூச்சலிட்டுக்கொண்டு கையிலிருந்த தட்டை நழுவவிடுகிருள். யாஷா அறையைவிட்டு ஓடுகிருன்.)

வாரியா: வாயிற்படியிலே நின்றுகொண்டு கடுகடுவென்று என்ன அமர்க்களம் அங்கே?

துன்னியாஷா: (அழுதுகொண்டே) தட்டை உடைத்துவிட்டான்.

வாரியா: உடைந்தால் அதிர்ஷ்டந்தானே!

அன்னியா: (அறையிலிருந்து வெளியே வந்து) டிராவிமாவ் இங்கே யிருக்கிருர் என்று அம்மாவிடம் சொல்லவேண்டும்.

வாரியா: அவரை எழுப்பக்கூடாதென்று சொல்லியிருக்கிறேன்.

அன்னியா: ஆறுவருஷத்திற்கு முன்னல் என் தகப்பனர் இறந்தார். தந்தை இறந்த ஒரு மாதத்திற்குள் என் சிறிய தம்பி கிரிஷா இங்கே ஆற்றிலே மூழ்கிப் போய்விட்டான். சுவர்ண விக்கிரகம் மாதிரி குழந்தை, ஏழு வயசு அவனுக்கு. அம்மா இந்தத் துக்கத்தைச் சகியாமல் ஊரை விட்டுப் போய் விட்டாள். திரும்பிக்கூடப் பார்க்கவில்லை (நடுங்கிக்கொண்டு) அவள் என்ன பாடுபடுவாள்...டிராவிமாவ் — கிரிஷாவின் உபாத்தியாயன் - அவனைப் பார்த்தவுடனே பழைய சமாசாரங்களெல்லாம் ஞாபகத்திற்கு வந்துவிடுமே! (பீர்ஸ் வருகிருன்; (ஜாக்கெட்டும் வெள்ளை உள்ளங்கியும் அணிந்திருக்கிருன்)

பீர்ஸ்: (காபி போடுகிற இடத்திற்குக் கவலையுடன் போய்) என் எஜமானி இங்கே காப்பி சாப்பிட வருவாள்... (கையில் வெள்ளை உறைகளை அணிந்துகொண்டே) காபி தயாராய் விட்டதா? (துன்னியாஷாவைப் பார்த்துக் கடுமையான குரலில்) பாலாடைக் கட்டி எங்கே?

துன்னியாஷா: ஐயோ, தெய்வமே!...(என்று சொல்லி, விரைவாய் வெளியே போகிருள்)

பீர்ஸ்: [காபி போடுகிற இடத்தில் தடபுடல் செய்துகொண்டு] என்ன, ஞானம் கெட்டவளே! (தனக்குள்ளே) பாரிஸ்

நகரத்திலிருந்து அவர்கள் வந்திருக்கிறார்கள்... இறந்துபோன என் எஜமானன்கூட ஒரு காலத்தில் கோச்சு வண்டியில் ...பாரிஸ் நகரத்திற்குப் போகிறவழக்கம். (சிரித்துக்கொண்டிருக்கிறான்)

வாரியா: பீர்ஸ், என்னப்பா சொல்லிக்கொண்டிருக்கிறாய்?

பீர்ஸ்: மன்னிக்கவும். (சந்தோஷத்துடன் கடைசியாக எஜமானி ஊர் வந்து சேர்ந்துவிட்டாள். இனிமேல் என்னை எமன் அழைத்துப்போனாலும் போகட்டும். போகிறதற்குத் தயார். (அழுகிறாள்) (ரனவஸ்கி அம்மாள் அவள் சகோதரன் கயேவ், சிமியனுவ் மூவரும் வருகிறார்கள். சிமியனுவ் நேர்த்தியான சட்டையும் காலங்கியும் போட்டுக்கொண்டிருக்கிறான். கயேவ் மேஜைமேல் பந்து ஆடுகிறதுபோல் கைகால்களை ஆட்டிக்கொண்டு உள்ளே வருகிறான்)

ரனவ்ஸ்கி: விஷயம் ஞாபகமிருக்கிறதோ என்று பார்க்கிறேன்...மஞ்சள் காயை அடித்து நடுவிலுள்ள பைக்குள் தள்ளிவிட்டேன்.

கயேவ்: நானும் அப்படியே செய்தேன். இதே அறையிலே ஒரு காலத்தில் நாம் சேர்ந்து தூங்கினோம். எனக்கு இப்பொழுது வயது ஐம்பத்தொன்று ஆகிவிட்டது. இது ஆச்சரியமில்லையா? நம்பக்கூட முடியவில்லையே!

லோபாகின்: காலம் நிற்குமா? சுழன்றுகொண்டிருக்கிறது!

கயேவ்: என்ன?

லொபாகின்: திரும்பச் சொல்லுகிறேன்...காலம் நிற்குமோ? சுழன்றுகொண்டிருக்கிறது!

கயேவ்: என்ன, ஏதோ மலிவான செண்டு வாசனை வீசுகிறதே!

அன்னியா: தூக்கம் வந்துவிட்டது, போய்வருகிறேன். (தாயாரை முத்தமிடுகிறாள்)

ரனவ்ஸ்கி: என் தங்கமே! (அன்னியா கையை முத்தமிட்டு என் அம்மா! ஊருக்குத் திரும்பினதில் சந்தோஷம் உனக்கு: எனக்கு என்னவோபோல இருக்கிறது......

அன்னியா: நான் போய்வருகிறேன் மாமா!

கயேவ்: (அவள் முகத்தையும் கையையும் முத்தமிட்டுத் தீர்க்காயுளோடு இரு) உன் அம்மாவை அப்படியே வார்த்து வைத்ததுபோல இருக்கிறாயே! [தன் தங்கையைப் பார்த்து] லியூபா, இந்த வயதிலே உன்னைப் [பார்த்தால் அவளைப்

பார்க்கவேண்டாம்! (லோபாகின், கிமியனுவ் இருவரோடும் கைகுலுக்கிவிட்டு அன்னியா கதவை அடைத்துக்கொண்டு உள்ளே போகிருள்.)

ரனவ்ஸ்கி: குழந்தை சோர்ந்து போய்விட்டாள்!

சிமியனுவ்: மிகவும் தூரமான பிரயாணமில்லையா?

வாரியா: (லோபாகின், சிமியனுவ் இருவரையும் பார்த்து) மணி இரண்டுக்கு மேலே ஆகப்போகிறதே! தூங்கவேண்டிய யோசனையே இல்லையா உங்களுக்கு?

ரனவ்ஸ்கி: (வாரியாவை அணைத்து முத்தமிட்டுக்கொண்டு) நீ கொஞ்சங்கூட மாறவில்லையே! காபி குடித்துவிட்டு இதோ போய் விடுகிறேம். [பீர்ஸ் ஒரு சிறு மெத்தையை அவள் காலடியில் வைக்கிருன்] (பீர்ஸ்ஸைப் பார்த்து) நல்லது, அப்படிப் பழக்கமாகிவிட்டது. இரவும் பகலும் காபி குடிக்க வேண்டி இருக்கிறது. (பீர்ஸுக்கு முத்தம் அளிக்கிருள்.)

வாரியா: எல்லாச் சாமான்களும் வந்தனவா என்று பார்க்க வேண்டும். (வெளியிலே போகிருள்)

ரனவ்ஸ்கி: இங்கே உட்கார்ந்திருப்பது உண்மையில் நான் தானு? [சிரித்துக்கொண்டு] காலை வீசிக் குதிக்கலாம்போல் தோன்றுகிறது. (கைக்குள் முகத்தை மறைத்துக்கொண்டு) எல்லாம் ஒரு கனவோ! ஆணையிட்டுச் சொல்லுகிறேன், என்னுடைய தேசத்திலே எனக்குச் சொல்லமுடியாத அன்பு. வழியெல்லாம் அழுகைதான். ஒன்றையும் வெளியிலே பார்க்கமுடியவில்லை. [அழுத கண்ணீருடன்] துக்கத்திலும் காபி விட்டபாடில்லை, உன்னை இந்த நிலைமையில் பார்க்கக் கிடைத்ததே சந்தோஷமான விஷயம். இன்னும் எனக்காகச் சிரமப்படுகிருய்.

பீர்ஸ்: முந்தாநாள் தான்......

கயேவ்: அவனுக்குக் காது சரியாய்க் கேட்கவில்லை.

லொபாகின்: விடியற்காலம் ஐந்து மணிக்குக் கார்க்கோவுக்குப் போகவேண்டும். கிளம்புவதென்றுல் எத்தனை கஷ்டமாயிருக்கிறது? (ரனல்ஸ்கியைப் பார்த்து) தங்களைக் கண் குளிரப் பார்க்கவேண்டும், ஆயிரம் விஷயம் பேசவேண்டும் என்று இருந்தேன்...தங்களுடைய பழைய கம்பீரத்திலே என்றும் குறைவில்லை!

சிமியனுவ்: (பெருமூச்செறிந்துகொண்டு) பழைய கம்பீரமா, அதைவிடப் பதின்மடங்கு அதிகம், அப்பா! அந்தப் பாரிஸ் உடையுடன் பார்த்தாயா?...சக்கரங்கள் கழன்றுபோன வண்டியைப் போலே என்னுடைய நிலை குலைந்துபோய் விட்டதே!

லொபாகின்: உன்னுடைய தமையன் கயேவ் என்னை என்னவோ பேர் வைத்துக் கூப்பிடுகிறான். என்னைக் காலி, சாக்கடைப் புழு என்று சொன்னால் என்ன, பணத்தாசை பிடித்த பயல், லோபி என்றால் என்ன, நான் அதைக் கவனிக்கிறேனா? அவன் ஏச்சு என்னைப் பாதிக்கிறதா? அவன் எது வேண்டுமென்றாலும் பேசட்டுமே. நீங்கள் என்னை நம்பினால் போதும். உங்கள் உல்லாசமான முகத்திற்கு நான் பாத்திரனாக ஆனால் போதும், தெய்வமே; என்னுடைய தகப்பனார் உங்களிடத்தில் தலைமுறை தலைமுறையாக வேலைசெய்தவர். உங்கள் பாட்டனாரிடத்திலும் அடிமையாக இருந்தார். இதெல்லாம் மறந்துபோய் விட்டது. நீங்கள் அவ்வளவு அன்பாய் நடத்தினீர்கள். என் பந்து வர்க்கத்தைக் காட்டிலும், உங்களிடத்தில் பிரீதியாயிருக்கிறேன்.

ரனவ்ஸ்கி: சும்மா உட்கார முடிகிறதில்லை: கொஞ்சங்கூட முடியாது [குதித்துக்கொண்டு மனப்படபடப்பில்] சந்தோஷத்தில் பிராணன் போய்விடும்போ லிருக்கிறதே. அறிவில்லாதவள் என்று என்னைப் பார்த்துச் சிரிக்கலாம்...என் அருமையான புஸ்தக அலமாரியே...என் அன்பார்ந்த மேஜையே!... (அலமாரியை முத்தமிடுகிறாள்).

கயேவ்: நீ ஊரில் இல்லாதபொழுது உன்னுடைய கிழச் செவிலித்தாய் இறந்துவிட்டாள்.

ரனவ்ஸ்கி: [உட்கார்ந்து, காபி குடித்துக்கொண்டே] அப்பொழுதே அவள் இறந்ததைப்பற்றி எனக்கு எழுதினார்கள். அவளுடைய ஆத்மா பகவானிடம் போய்ச் சேரட்டும்!

கயேவ்: அனஸ்டசியும் செத்துப்போய்விட்டாள். ஒன்றரைக் கண் பெட்ருஸ்கா நம்மை விட்டுப்போய்ப் பட்டணத்திலே போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் வேலை செய்துகொண்டிருக்கிறான். (ஒரு டப்பாவிலிருந்து மிட்டாய் ஒன்றை எடுத்து வாயில் போட்டுக் கொள்ளுகிறான்.)

சிமியனுவ்: என்னுடைய பெண் தஷங்கா உங்களை மிகவும் விசாரித்தாள்.

லொபாகின்: உங்களுக்கு உற்சாகமான இன்பவார்த்தை ஒன்று சொல்லலாம் என்று நினைக்கிறேன்...[கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு] சீக்கிரம் புறப்பட வேண்டியிருப்பதால் உங்களோடு அதிக நேரம் பேச முடியாது...என்ருலும், சுருக்கமாகச் சொல்லுகிறேன்: உங்களுடைய செர்ரித் தோட்டத்தை விற்ருல்தான் உங்கள் கடன் தீரும் என்று உங்களுக்குத் தெரியும். ஆகஸ்டு மாதம் 22-ஆம் தேதி ஏலம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனுல், அதைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். அதிலிருந்து தப்பித்துக்கொள்ள ஒரு வழியிருக்கிறது. அது என்னவழி என்று சொல்லுகிறேன், கேளுங்கள். உங்களுடைய நிலபுலன்கள் பட்டணத்திலிருந்து முப்பது மைலுக்கு அப்பால் வெளியிலே தள்ளியிருக்கின்றன. அவைகளுக்குப் பக்கத்தில் ஒரு ரயில் பாதை போடத் தீர்மானித்திருக்கிருர்கள். செர்ரித் தோட்டத்தையும் ஆற்றங்கரை ஓரமாயுள்ள நிலத்தையும் துண்டு துண்டாய்ப் பிரித்து, பங்களாக்கள் கட்டுவதற்காகத் குத்தகைக்குக் கொடுத்தால் வருஷத்திற்கு 25,000 ரூபிள்கள்* கிடைக்கும்.

கயேவ்: நான் சொல்லுகிறேன் என்று கோபித்துக்கொள்ளாதே, நீ பேசுகிறது சுத்தப் பொய்!

ரனவ்ஸ்கி: நீ சொல்லுவது ஒன்றும் எனக்கு விளங்கவில்லை.

லொபாகின்: இரண்டரை ஏக்கர் நிலத்திற்கு, குறைந்த பட்சம் வருஷத்திற்கு 25 ரூபிள் குத்தகையில் வரும். நீங்கள் எதை வேண்டுமென்ருலும் பந்தயமாக வையுங்கள். நான் சொல்லுகிறதுதான் நடக்கப்போகிறது. இப்பொழுதே விளம்பரம் செய்தால், இலையுதிர் காலத்திற்குள் காணி நிலம்கூடப் பாக்கியிராது. எல்லாத் துண்டுகளையும் வாரிக்கொண்டு போய்விடுவார்கள். உங்களுக்கு இன்னும் அதிர்ஷ்டமிருக்கிறது என்பதற்காகப் பாராட்டுகிறேன். இப்படிச் செய்தால் பிழைக்கலாம். நிலம் நல்ல இடத்தில் இருக்கிறது. பக்கத்தில் ஆழமான ஆறு கம்பீரமாய் ஓடிக்கொண்டிருக்கிறது. அதைச் சுத்தப்படுத்திஞல் போதும்.

* ரஷ்ய வெள்ளி நாணயம், முன்னுல் ரூ. 1-9-6 மதிப்புள்ளது,

பழைய கட்டடங்களை இடித்துத் தள்ளலாம். ஒன்றுக்கும் பயனில்லாத இந்த வீட்டை எதற்காகக் கட்டிக் காக்க வேண்டும்? இந்தச் செர்ரித் தோட்டத்தை வெட்டித் தள்ளி...

ரனவ்ஸ்கி: வெட்டித் தள்ளவா? என்னப்பா, ஏதோ ஒன்றும் தெரியாமல் வாய்க்கு வந்தபடி பேசுகிறாயே! இந்தப் பிராந்தியத்தில் அற்புதமாக ஏதேனும் இருந்தால், அது நம்முடைய செர்ரித் தோட்டமே என்று சொல்லலாம். அதையா வெட்டவேண்டும்?

லொபாகின்: இதில் அற்புதம் என்ன இருக்கிறது! தோட்டம் பெரிதாயிருக்கிறது, அவ்வளவுதான்; பலனோ, இரண்டு வருஷத்திற்கு ஒரு தரம் காய்ப்பு; பழங்களும் விற்பனையாவதில்லை; வாங்குவாரும் இல்லை.

கயேவ்: புஸ்தகங்களில்கூடப் பிரசித்தமாயிருக்கிறது எங்கள் தோட்டம்!

லொபாகின்: [கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு] இப்பொழுதே நாம் ஒரு தீர்மானம் செய்து ஒரு வழிக்கு வராது போனால், ஆகஸ்டு 22-ஆம் தேதியன்று, செர்ரித் தோட்டமும், மற்ற சொத்துக்களும் போய்விடும். தீர்மானம் செய்து நிச்சயமாய்த்தான் சொல்லுகிறேன், வேறு வழியில்லை.

பீர்ஸ்: நாற்பது ஐம்பது வருஷங்களுக்குமுன் செர்ரிப் பழங்களை வற்றல் போடுவார்கள், ஊறுகாய் போடுவார்கள், ஹல்வாவும் பண்ணுவார்கள். சில வேளைகளில் —

கயேவ்: சும்மா இரு. பீர்ஸ்!

பீர்ஸ்: மாஸ்கோ, கார்க்கோவ் முதலிய இடங்களுக்கு வண்டி வண்டியாக அனுப்புகிற வழக்கம். பை பையாகப் பணம் வந்து குவியும். அந்த வற்றலுண்டோ இல்லையோ, எவ்வளவு மிருதுவாய் இருக்கும்! வாயிலே போட்டால் அப்படியே கரைந்துவிடும்! என்ன ருசி! என்ன வாசனை!... அப்படிப் பக்குவப்படுத்துவதற்கு அந்தக் காலத்தவருக்குத் தான் தெரியும்!

ரனவ்ஸ்கி; அந்த முறை எங்கே போய்விட்டது?

பீர்ஸ்: மறந்துபோய்விட்டது, ஒருவருக்கும் ஞாபகம் இல்லை.

சிமியனவ்: (ரனவ்ஸ்கி அம்மாளைப் பார்த்து) பாரிஸ் பட்டணத்தில் எப்படி? என்ன அதிசயங்கள்? சாப்பிடுவதற்கு அங்கே தவளைகள் கிடைக்கும்; சாப்பிட்டீர்களா?

ரனவ்ஸ்கி: தவளையா? முதலைகூடச் சாப்பிட்டேன்!

சிமியனுவ்: உண்மைதானு, கேலிப் பேச்சா?

லொபாகின்: இதுவரையில் இந்தப் பிராந்தியத்திலே எஜமானன், குடியானவன் என்ற இரண்டு வகுப்புக்களே இருந்தன. இப்பொழுது பங்களா வாசிகள் என்று மூன்றும் வகுப்பு ஒன்றும் கிளம்பியிருக்கிறது. சிறு பட்டணங்களில் கூடப் பங்களாக்கள் கிளம்பிவிட்டன. காலக்கிரமத்தில் எங்கும் பங்களா மயந்தான்! பங்களா வாசிகளுக்கு இப்பொழுது தேநீர் அருந்துவதுதான் வேலை. ஆனால் நாளடைவில் அவர்கள் ஒவ்வொருவரும் தம்முடைய இரண்டரை ஏக்கர் நிலத்தை உழ ஆரம்பித்துவிடக்கூடும். அப்புறம் உங்களுடைய செர்ரித் தோட்டம் இருந்த இடம் அழகாக மாறிவிடும்.

கயேவ்: (கோபத்துடன்) என்ன அபத்தமாய்ப் பேசுகிருய்! (வாரியாவும் யாஷாவும் வருகிருர்கள்.)

வாரியா: அம்மா, உங்களுக்கு இரண்டு தந்திகள் வந்திருக்கின்றன. (சாவிக் கொத்திலிருந்து திறவுகோலை எடுத்துப் பழைய புத்தக அலமாரியைத் திறக்கிருள், (தந்திகள் இதோ) இருக்கின்றன.

ரனவ்ஸ்கி: பாரிஸிலிருந்தா? (பார்க்காமலேயே தந்திகளைக் கிழித்தெறிந்து விடுகிருள்.) இனி, பாரிஸ் போதும் —

கயேவ்: லியூபா, புஸ்தக அலமாரி எத்தனை வருஷங்களாக இருக்கிறது, தெரியுமா? ஒரு வாரத்திற்குமுன் அடிடிராயரைத் திறந்தேன். அலமாரி செய்யப்பட்ட தேதி அதில் குறிக்கப்பட்டிருந்தது. என்ன ஆச்சரியம்! நூறு வருஷமாயிற்று. அதற்குச் சதாபிஷேகம் பண்ணலாமே! உயிர் இல்லாததுதான் குறை: ஆனல் யோசித்துப் பார்த்தால் அருமையான புஸ்தக அலமாரி அல்லவா? (ஆச்சரியப் படுகிருன்.)

சிமியனுவ்: நூறுவருஷமா?...இருக்காது!

கயேவ்: ஆமாம்! அது கேவலம் ஒரு பொருளா? (புஸ்தக அலமாரியை அணைத்துக்கொண்டு.) புஸ்தக அலமாரியே! உனக்கு ஒரு வந்தனம். நூறு வருஷகாலமாய் எங்கள் குடும்ப அந்தகாரத்தை நீக்கி நல்லறிவுச் சுடர் கொளுத்தினையே! கொஞ்சங்கூட வலுவில் குறையாது, தலைமுறை தத்துவமாய்

வலிமையளிக்கும் காரியங்களைச் செய்ய எங்களுக்கு ஊக்கம் அளித்தாய். எல்லோருக்கும் தைரியத்தையும், நன்மையில் நம்பிக்கையையும் அருளினாய். எல்லோருடைய நன்மையையும் நாடும்படி செய்தாய்! (கண்ணீர் விட்டுக்கொண்டு சற்று மௌனம்.)

லொபாகின்: அது வாஸ்தவம்!

ரனெவ்ஸ்கி: கயேவ், நீ எப்பொழுதும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறாய்.

கயேவ்: (சற்று லஜ்ஜையுடன்) சரியான பையில் ... காயை மத்தியிலுள்ள பையில் தள்ளினேன்.

லொபாகின்: (கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு) நேரமாயிற்று, நான் போகவேண்டும்.

யாஷா: (ரனவ்ஸ்கிக்கு மருந்தைக் கொடுக்கிறான்.) மாத்திரைகளை இப்பொழுது சாப்பிடுகிறீர்களா?

சிமியனாவ்: தாயே! நீங்கள் மருந்து இருந்து சாப்பிடக்கூடாது. அதில் குணம் ஒன்றும் இல்லை. (மாத்திரைகளை வாங்கி உள்ளங்கையில் வைத்து ஊதி வாயில் போட்டுக்கொண்டு கொஞ்சம் ஷர்பத்தைக் குடிக்கிறான்.) இதுதான் குணம்!

ரனவ்ஸ்கி: (பயத்துடன்) உனக்குப் பயித்தியமா?

சிமியனாவ்: எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட்டேன்!

லொபாகின்; என்ன பசி? (எல்லோரும் சிரிக்கிறார்கள்.)

பீர்ஸ்: இந்தப் பேர்வழி ஈஸ்டர் பண்டிகையில் ஒரு கூடை வெள்ளரிக்காயை உள்ளே தள்ளிவிட்டான்! (முணுமுணுக்கிறான்.)

ரனவ்ஸ்கி: என்ன சொல்லுகிறான் அவன்?

வாரியா: மூன்று வருஷகாலமாக ஏதோ இப்படித்தான் முணுமுணுத்துக்கொண்டேயிருக்கிறான். எங்களுக்கு இது சகஜமாய்ப் போய்விட்டது.

யாஷா: வயதாகிவிட்டது. அந்தக் கோளாறுதான்! (வெள்ளை உடையில் சார்லட்டா வருகிறாள். ஒல்லியான தேகம், இறுகிய ரவிக்கை, இடுப்பில் கட்டிய தோல் வாரில் மூக்குக் கண்ணாடி தொங்குகிறது.)

லொபாகின்: நீ சௌக்கியந்தானா என்று விசாரிப்பதற்கு அவகாசமில்லாமலே போய்விட்டது. மன்னிக்கவும். (அவள் கையை முத்தமிட முயலுகிறான்.)

சார்லட்டா: (கையை இழுத்துக்கொண்டு) கையை முத்தமிட விட்டேனானால், அப்புறம் நீ தோளையும் முத்தமிட ஆரம்பித்து விடுவாய்!

லொபாகின்: இன்றைக்கு என்னவோ எனக்கு அதிர்ஷ்டமில்லை. (அனைவரும் நகைக்கிறார்கள்.) அம்மா, செப்பிடு வித்தை ஏதேனும் காட்டேன்!

சார்லட்டா: இன்றைக்கு முடியாது. தூக்கம்வருகிறது (வெளியே போகிறாள்.)

லொபாகின்: மூன்று வாரம் கழித்துத் திரும்பப் பார்க்கிறேன், (ரனெவ்ஸ்கியின் கையை முத்தமிட்டுக்கொண்டு) போய்வருகிறேன். எனக்குக்காரியம் இருக்கிறது...கயேவ், போய்வருகிறேன்! (பீஸ்சிக்கைத் தழுவிக்கொண்டு) போய்வருகிறேன்! போக இஷ்டமில்லை. பங்களா விஷயத்தைப்பற்றி ஒரு தீர்மானத்திற்கு வந்து சொல்லி அனுப்புங்கள்: பண விஷயத்தைப் பற்றி நான் பார்த்துக் கொள்ளுகிறேன். நான் ஐம்பதினாயிரம் ரூபிளுக்கு ஏற்பாடு செய்கிறேன். தீவிரமாக யோசனை செய்யுங்கள்.

வாரியா: (கோபத்துடன்) தொலைந்துபோ, நிற்காதே!

லொபாகின்: இதோ போய்விட்டேன்! இதோ போய்விட்டேன்! (போகிறான்.)

கயேவ்: சுத்தக் காலி அவன், நான் சொல்லுகிறேன் என்று கோபித்துக் கொள்ளாதே! வாரியா அவனைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப்போகிறாள். அவள் கண் வைத்த புருஷன் அவன்தான்.

வாரியா: மாமா, என்னத்திற்காக அதிகமாய்ப் பேசுகிறீர்கள்?

ரனெவ்ஸ்கி: அதிலென்ன தப்பு? அவன் நல்லவனாயிற்றே, நீ அவனைக் கல்யாணம் செய்துகொண்டால் எனக்கும் சந்தோஷந்தான்.

பிஸ்சிக்; (தூக்கக் கலக்கத்திலே) நிச்சயமாய்ச்சொல்லுகிறேன். அவன்...மனுஷ்யன்...தங்கமான மனுஷ்யன்...என் பெண் தசங்காவும் சொல்லுகிறாள், என்னென்னவோ சொல்லுகிறாள்...(குறட்டை விடுகிறான்: ஆனால் உடனே விழித்துக் கொள்கிறான்.) அதெல்லாம் இருக்கட்டும், தாயே! அடமானத்திற்கு நாளைக்கு வட்டி செலுத்தவேண்டுமே! 240 ரூபிள் எப்படியாவது பார்த்துக் கொடுக்கவேண்டும்.

வாரியா: (பயந்து) பணமா! எங்கிருந்து நாங்கள் கொடுக்கிறது?

ரனவ்ஸ்கி: உண்மையாக ஒரு செப்புச் சல்லியில்லை!

பிஸ்சிக்: நீங்கள் எப்படியாவது பார்த்துக் கொடுப்பீர்கள். (சிரித்துக்கொண்டு) எப்படியாவது பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கை. எத்தனையோ தடவை, 'எல்லாம் போய் விட்டது' என்று நினைக்கிற வேளைகளில் ஏதேனும் கைகூடாமல் இல்லை. எல்லாம் முழுகிப்போய்விட்டது என்று இருக்கிறபொழுது, என் நிலத்தில் ரயில் ஒன்றைப் போடுவார்கள். அதிலிருந்து எனக்குப் பணம் வரும். இன்றைக்கு இல்லாது போனால், நாளைக்கு வராமல் போகாது. என் பெண் தஷங்காவின் அதிர்ஷ்டத்தை யார் கண்டார்கள்! இரண்டு லக்ஷம் ரூபிள் வரை வரலாம்! லாட்டரி டிக்கெட்டைப் பத்திரமாய் வைத்திருக்கிறாள்.

ரனவ்ஸ்கி: காப்பிக்கடை ஆகிவிட்டது, நாம் தூங்கப் போகலாம்.

பீர்ஸ்: (கயேவினுடைய இடித்துத் தள்ளிக்கொண்டு) வேறு கால் சட்டையைப் போட்டுக்கொண்டு விட்டீர்களே! எத்தனை தடவை சொல்லுகிறது, உங்களுக்கு?

வாரியா: (மெல்லிய குரலில்) அன்னியா தூங்கிக்கொண்டிருக்கிறாள். (மெதுவாக ஜன்னலைத் திறந்துகொண்டு) சூரியன் கிளம்பி விட்டான். குளிர் இல்லை அம்மா, பார்! மரங்கள் எவ்வளவு அழகாய் இருக்கின்றன! ஆகாயத்தைப்பாருங்கள்! காற்று எவ்வளவு சுகமாக வீசுகிறது! பட்சிகள் கலகலவென்று ஒலிக்கின்றனவே!

கயேவ்: (மற்றொரு ஜன்னலைத் திறந்துகொண்டு) தோட்டம் பால் போல் வெண்மையாயிருக்கிறதே! இதை மறந்து இருக்க முடியுமா? இதோ அம்பைப்போல் நேரே ஓடுகிற சோலையைப் பார்! நிலவிலே எப்படிப் பளபளவென்று பிரகாசிக்கும் தெரியுமா? இதெல்லாம் மனத்தை விட்டு அகலுமோ?

ரனவ்ஸ்கி: (ஜன்னல் வழியாய்த் தோட்டத்தைப் பார்த்துக் கொண்டு) கள்ளங் கபடில்லாத என் கல்லா இளமைப்பருவம் ஞாபகத்திற்கு வருகிறது! இந்தக் குழந்தைக் கூடத்தில் நான் அப்பொழுது தூங்கினேன். இங்கிருந்துதான் காலையில் கண் விழித்த பொழுதெல்லாம் இந்தத் தோட்டத்தைப் பார்த்துச் சந்தோஷிப்பேன். தோட்டத்தில் கொஞ்சங்கூட மாறுதல் இல்லை. அப்பொழுது பார்த்ததுபோலவே இப்

பொழுதும் இருக்கிறது. (பண்டை நினைவில் உள்ளம் களிக்கி ருள்) அப்பழுக்கில்லாமல் ஒரே வெளுப்பாயிருக்கிறது. ஆஹா, என் தோட்டம்! மப்பு மந்தாரமாயுள்ள சரத் ருதுவும் மாரிக்காலமும் கழிந்த பின்பு, நீ மறுபடி இளமைபெற்று, சோபை அடைந்துவிடுகிருய்! தெய்வங்களின் அனுக்கிரகம் உனக்குப் பூர்ணமாயிருக்கிறது...என் மனத்திலுள்ள பளு நீங்கிப் பழைய விஷயங்களையும் நான் மறந்துவிட்டால், உன் ஆசை முகத்தைப் பார்த்து எவ்வளவோ சந்தோஷப்பட லாமே!

கயேவ்: சொல்லுவது எல்லாம் நிஜந்தான். ஆனல் கடனுக்கு இந்த அருமையான தோட்டத்தை விற்கவா?—என்ன விசித்திரம்.

ரனவ்ஸ்கி: அதோ பார், தோட்டத்தில் இறந்துபோன நம்முடைய தாயார் உலாவுவதுபோலத் தோன்றுகிறதே! ...... வெள்ளை உடை அணிந்துகொண்டு தோட்டத்தில் நடமாடுவதைப் பார்! (உவகையில் முகம் மலர்ந்து) ஆம், அவள்தான்.

கயேவ்: எங்கே அம்மா?

வாரியா; என்ன, கனவு காண்கிறீர்களா?

ரனவ்ஸ்கி: அங்கே ஒருவருமில்லை, எல்லாம் என் பிரமைதான். வலது பக்கத்தில் கொடி மண்டபத்திற்குப் போகிற வழியில் ஒரு சிறிய மரம் ஒரு வனிதையைப்போல வளைந்து நிற்கிறது. அது என்னைத் திகைக்க வைத்துவிட்டது. (மாண வன் உடையில் மூக்குக்கண்ணாடி அணிந்துகொண்டு டிராவி மாவ் வருகிருன். அவனுடைய நிஜார் நைந்திருக்கிறது.)

ரனவ்ஸ்கி: என்ன ஆச்சரியமான தோட்டம்! அழகிய நீல வானம்! அதன்கீழே கொள்ளை கொள்ளையாக வெள்ளை வெளேரென்று எவ்வளவு புஷ்பங்கள்!

டிராவிமாவ்: ரனவ்ஸ்கி! (அவள் அவனைப் பார்க்கிருள்.) எனக்கு ஒரு காரியமும் இல்லை. நீங்கள் சௌக்கியமா யிருக் கிறீர்களா என்றுதான் வந்தேன். (அவளுடைய கையை ஆர்வத்துடன் முத்தமிட்டுக்கொண்டு) பொழுது விடிகிற வரையில் என்னைக் காத்திருக்கச் சொன்னர்கள். அதுவரை யில் எனக்குத் தாங்கவில்லை. (ரனவ்ஸ்கி திகைக்கிருள்.)

வாரியா: (கண்ணீர் வடித்துக்கொண்டு.) இவர்தான் டிராவிமாவ் —

டிராவிமாவ்: நான்தான் டிராவிமாவ். உங்கள் கிரிஷாவுக்கு உபாத்தியாயராய் இருந்தேன். நான் மிகவும் உருமாறி விட்டேனே ?

(ரெனெவ்ஸ்கி அவனைத் தழுவிக்கொண்டு தன்னை அறியாமலே அழுகிருள்.)

கயேவ்: (ஒன்றும் தோன்ருமல்) ஐயோ, ஐயோ, ரெனெவ்ஸ்கி!

வாரியா: (அழுதுகொண்டு) பொழுது விடிகிறவரையில் உன்னைக் காத்திருக்கச் சொல்லவில்லையா?

ரெனெவ்ஸ்கி: என் செல்லக் கண்ணுக்குட்டி! என் குழந்தை கிரிஷா! என்னை மோசம் பண்ணிவிட்டு எங்கேயடா போனுய் ?

வாரியா: நாம் என்ன செய்யமுடியும், அம்மா? எல்லாம் பகவானுடைய சங்கல்பம்.

டிராவிமாவ்: (பரிவுடன், கண்ணீர் உதிர) ஐயோ பாவம்! ஐயோ பாவம்!

ரெனெவ்ஸ்கி: (சத்தமில்லாமல் அழுதுகொண்டு) என் அருமைக் குழந்தை, ஐயோ, அநியாயமாய் முழுகிப்போய் விட்டானே! எதற்காக இதெல்லாம் நடக்கவேண்டும், அப்பா? (மெல்லிய குரலில்) அன்னியா இங்கே தூங்கிக் கொண்டிருக்கிருள். நான் உரக்கப் பேசிக்கொண்டிருக் கிறேனே...டிராவிமாவ், எப்படியோ அழகு மாறிவிட்டாய்! மிகவும் வயதானவன் மாதிரி ஆகிவிட்டாயே!

டிராவிமாவ்: ரயிலில் என்னை ஒருத்தி எலும்பும் தோலுமாய் இருக்கிறேன் என்று ஏளனம் செய்தாள்.

ரெனெவ்ஸ்கி: அந்தக் காலத்தில் நீ சின்னப் பையனுயிருந்தாய்; கலாசாலையில் வாசிக்கும் அழகான வாலிபனுய் இருந்தாய், இப்பொழுது தலை ரோமமெல்லாம் உதிர்ந்து, கண்ணுடி வேறு உன் கண்களில் ஏறிவிட்டது! இன்னும் கலாசாலைப் பையனுகவே இருக்கிருயோ? (கதவண்டை போகிருள்.)

டிராவிமாவ்: என்றுமே பள்ளிப் பையனுய்த்தான் இருப்பேன்,

ரெனெவ்ஸ்கி: (முதலில் தன் சகோதரனை முத்தமிட்டு, பிறகு வாரியாவை முத்தமிடுகிருள்.) இப்போது, படுத்துக் கொள்ளப் போங்கள். (தன் சகோதரனைப் பார்த்து) கயேவ், உனக்கும் கிழடு தட்டிவிட்டது.)

சிமியனுவ்: (அவனைப் பின்தொடர்ந்து) உங்களுக்குப் படுக்கப் போகும் நேரம் வந்துவிட்டதுபோல் இருக்கிறது...என் காலிலே நீர் சுரந்திருப்பதால் நடக்கமுடியவில்லை. அதைக் கவனிக்காமல் உங்களோடு தங்கியிருக்கிறேன், தாயே! அதி காலையிலே எனக்கு...240 ரூபிள் வேண்டுமே —

கயேவ்: அதே பாட்டைத்தான் இன்னும் பாடுகிறான், ஓய மாட்டான்போல் இருக்கிறதே!

சிமியனுவ்: 240 ரூபிள்...அடமானத்திற்கு வட்டிதானே!

ரனெவ்ஸ்கி; சல்லிக்காசுகூட என் கையில் கிடையாது, அப்பா!

சிமியனுவ்: ஆயிரம் பதினுயிரமா? சொற்பத் தொகைதானே!... திரும்பவேண்டுமானுல் தந்துவிடுகிறேன்!

ரனெவ்ஸ்கி: நல்லது, என் சகோதரனைக் கொடுக்கச் சொல்லு கிறேன்...கயேவ், அவனுக்குப் பணத்தைக் கொடு.

கயேவ்: எது வந்தாலும் வரட்டும், நான் கொடுக்கமாட்டேன்.

ரனெவ்ஸ்கி: மாட்டேன் என்று சொல்ல முடிகிறதா?... அவனுக்குக் கொடுத்துவிடு. அவனுக்குப் பணமுடையாயிருக்கிறது...மேலும் யாசகமில்லை, கடனைத்தானே கேட்கிறான்... திருப்பிக் கொடுத்துவிடுவான்.

(ரனெவ்ஸ்கி, டிராவிமாவ், சிமியனுவ், பீர்ஸ் ஆகியோர் போகின்றனர். கயேவ், வாரியா, யாஷா ஆகியோர் தங்கிநிற்கின்றனர்.)

கயேவ்; பணத்தைக் கொட்டி வாரி இறைக்கிற சுபாவம் இன்னும் போகவில்லையே என் தங்கைக்கு! (யாஷாவைப் பார்த்து) உன் கிட்டவந்தால் கோழி நாற்றம் அடிக்கிறது, கொஞ்சம் தள்ளி நில்லு!

யாஷா: (பல்லை இளித்துக்கொண்டு) உங்களுக்கு எப்பொழுதும் கேலிதான்.

கயேவ்: அப்படியா? (வாரியாவைப் பார்த்து) அவன் என்ன சொன்னுன்?

வாரியா: (யாஷாவைப் பார்த்து) கிராமத்திலிருந்து உன்னுடைய தாயார் வந்திருக்கிறுள். உன்னைப் பார்க்கவேணுமென்று நேற்றிலிருந்து காத்துக்கொண்டிருக்கிறுள்.

யாஷா: என்னை ஏன் உபத்திரவப்படுத்துகிறுள்? என்னைத் தனியாய்விட்டால் போதும்.

வாரியா: என்ன, இப்படிப் பேசுகிருய்? வெட்கக்கேடா யிருக்கிறது!

யாஷா: எனக்கு மிகுதியான கவலையோ? இன்றைக்கு வந்தவள் நாளைக்கு வந்தால் போதுமே! (வெளியிலே போகிருன்.)

வாரியா: அம்மாவிடம் கொஞ்சங்கூட மாறுதல் இல்லை. அவள் ஆசைபோல நடக்க விட்டுவிட்டால் எல்லாவற்றையும் கொடுத்துத் தொலைத்துவிடுவாள்.

கயேவ்: உண்மைதான்...(சிறிது மௌனம்.) ஒரு வியாதிக்கு அநேக மருந்துகளைத் தேடிஞல் அது குணப்படாத வியாதி என்று சொல்லிவிடலாம். நானும் யோசிக்கிறேன், மண்டையை உடைத்துக்கொள்ளுகிறேன், அநேக உபாயங்கள் தோன்றுகின்றன, உண்மையிலேயே எத்தனையோ யுக்திகள் தென்படுகின்றன; இதிலிருந்து என்ன தெரிகிறது? நிச்சயமாக ஒரு வழியும் தெரியவில்லை என்றுதான் அர்த்தம். யாரேனும் தன் சொத்தை விட்டுவிட்டுப் போனல் நல்லதுதான்; அன்னியாவை ஒரு பணக்காரப் பையனுக்குக் கல்யாணம் செய்துகொடுத்தால் விசேஷமா யிருக்கும்; யரோஸ்லாவலுக்குப் போய்ப் பெரும் செல்வத்தோடிருக்கும் சீமாட்டியான எங்களுடைய அத்தையைப் பார்த்தால் சிலாக்கியமாய்த்தான் இருக்கும். எங்கள் அத்தை பெரிய பணக்காரிதான்.

வாரியா: (அழுதுகொண்டு.) பகவான் கண் விழித்துப் பார்த்தால் எல்லாம் நடக்கும்.

கயேவ்: இங்கேயிருந்து அழாதே. எங்களுடைய அத்தை பணக்காரிதான், ஆனல் அவளுக்கு எங்களிடத்தில் பிரிதி இல்லை. அதற்கு அநேக காரணங்கள் உண்டு. முதலாவது, என் தங்கை ஒரு சீமானைக் கல்யாணம் செய்துகொள்ளாமல் ஒரு வக்கீலுக்கு வாழ்க்கைப்பட்டாள். (அன்னியா கதவண்டை வந்து நிற்கிருள்.) ஒரு சீமானைத்தான் கல்யாணம் செய்துகொள்ளவில்லை என்ருலும், அவள் ஒழுங்காயும் நடக்கவில்லை. மற்றபடி அவள் நல்லவள்தான், அன்பாயிருப்பாள், நாகரிகமுள்ளவள், அவளிடம் எனக்கும் மிகுந்த அன்பு உண்டு. ஆனல்...எவ்வளவுதான் அவளுக்காக நாம் பரிந்து பேசுவதானலும், ஒன்றைமட்டும் ஒப்புக்கொண்டே தீரவேண்டும்: அவள் ஒழுக்கங்கெட்டவள். அவளுடைய ஒவ்வொரு செயலிலும் அதைப் பார்க்கலாம்.

வாரியா; (மெதுவாக) அன்னியா கதவடியில் நிற்கிருள்.

கயேவ்; அப்படியா? (சற்று மௌனம்) எல்லாம் விசித்திரமா யிருக்கிறது, என் வலது கண்ணுக்கு ஏதோ வந்துவிட்டது. முன்போல் சரியாய்ப் பார்க்கமுடியவில்லை. வியாழக்கிழமை கோர்ட்டு காரியத்தைக் கவனிக்கிறபொழுது —

(அன்னியா வருகிருள்.)

வாரியா: அன்னியா, ஏன் தூங்கவில்லை?

அன்னியா; தூக்கம் வரமாட்டேன் என்கிறது, நான் என்ன பண்ணட்டும்?

கயேவ்: என் கிளியே! என் கிளியே! (அன்னியாவை முத்த மிட்டுக்கொண்டு) என் குழந்தாய்!...(கண்ணீர் வடித்து) நீ என்னுடைய மருமகளில்லை, நீ என் தெய்வம், என் செல்வ மெல்லாம் நீ ஒருத்திதான்! என்னை நம்பு...

அன்னியா: மாமா, உங்களை நம்பாமல் யாரை நம்புவது! ஒவ் வொருவரும் உங்களிடத்தில் பிரியமாய்த்தான் இருக்கின் றனர், ஒவ்வொருவரும் மரியாதை காட்டுகின்றனர்...ஆனால், அருமை மாமா, நீங்கள் பேசாமலிருக்கக் கூடாதா? உங்க ளோடு கூடப்பிறந்தவள் என் தாயார். அவளைப்பற்றி இப்பொழுது என்ன சொல்லிக்கொண்டிருந்தீர்கள்? எதற் காக அப்படிச் சொன்னீர்கள்?

கயேவ்: உண்மைதான், உண்மைதான் ...(கையை எடுத்துத் தன் முகத்தை மூடிக்கொண்டு) அது பயங்கரந்தான்! ஜகதிசா! நீதான் காப்பாற்றவேண்டும்! புஸ்தக அலமாரி யைக் கண்டு புலம்பினேனே...என்ன முட்டாள்தனம்!

வாரியா: மாமா, வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருங்களேன், அது போதும்.

அன்னியா; நீங்கள் பேசாமலிருந்தால் உங்களுடைய மனம் வேதனையில்லாமல் சந்தோஷமடையும்,

கயேவ்: (அன்னியாவையும் வாரியாவையும் முத்தமிட்டு) நான் பேசவில்லை, இனி நான் பேசவில்லை. ஆனால் வீட்டு விஷய மாக இரண்டொரு வார்த்தைகள் சொல்லுகிறேன். வியாழக் கிழமை கோர்ட்டுக்குப் போயிருந்தேன். நாங்கள் சில பேர்கள் கூடினோம். எத்தனையோ விஷயங்களைப் பற்றிப் பேச்சு நடந்தது. சிநேகிதர்களின் ஜாமீனுடன் பிராமிஸரி நோட்டு எழுதிக்கொடுத்தால், பாங்கியில் வைத்த அடமானச் சொத்துக்கு வட்டியைச் செலுத்திவிடலாம்.

வாரியா: பகவான்தான் வழிவிடவேண்டும்!

கயேவ்: வியாழக்கிழமை நான் மறுபடியும் போய்ப் பேசுகிறேன். (வாரியாவைப் பார்த்து) அழாதே... (அன்னியாவைப் பார்த்து) உன்னுடைய அம்மா லொபாகினேடு பேசினால், அவன் இல்லையென்று சொல்லிவிடமாட்டான்...ஊர் போய்த் திரும்பிய சிரமம் தீர்ந்தபிறகு நீ யரோஸ்லாவலில் இருக்கிற உன் அத்தைப்பாட்டியிடம் போகவேண்டும், மூன்று இடங்களில் கல் எறிவோம், ஏதாகிலும் ஒன்றிலாவது கனி விழாதா? காரியம் முடிந்ததுபோலத்தான் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. வட்டி செலுத்தச் சீக்கிரம் பணம் கிடைத்து விடும். (ஒரு மிட்டாயை வாயில் போட்டுக்கொண்டு) ஆனால் நான் எதன்பேரில் வேண்டுமானாலும் ஆணையிட்டுச் சொல்லுவேன், நம்முடைய தோட்டத்தைமட்டும் ஒரு நாளும் விற்கப்போகிறதில்லை. (படபடப்புடன்) விற்க நேர்ந்தால் நான் நாசமாய்ப் போகிறேன்! இதோபார், அதுமட்டும் ஏலத்திற்கு வந்துவிடும் பட்சத்தில், என்னை நீசன் என்றும் அயோக்கியன் என்றும் கூப்பிடுங்கள்! என்மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்; அதை விற்க விடமாட்டேன்!

அன்னியா: (அமைதியான நிலைமையை அடைந்து விளங்கினள்.) மாமா, பேஷ், நீங்கள் எவ்வளவு நல்லவராக இருக்கிறீர்கள்! உங்களுக்கு எவ்வளவு யுக்தி தெரிகிறது! (மாமாவைத் தழுவிக்கொண்டு) இப்பொழுதுதான் மனத்திற்குச் சமாதானம் ஏற்பட்டிருக்கிறது! மிகவும் சமாதானமாயிருக்கிறது!

(பீர்ஸ் வருகிறான்.)

பீர்ஸ்: (கடிந்து சொல்லுகிற முறையில்) அட தெய்வமே! கயேவ், இன்னும் படுக்கைக்குப் போகிற யோசனையில்லையா?

கயேவ்: இதோ கிளம்பிவிட்டேன், இதோ கிளம்பிவிட்டேன். பீர்ஸ், நீ போகலாம். நான் உடையை மாற்றிக்கொண்டு படுக்கச் செல்லவேண்டும். குழந்தைகளே, போய்வாருங்கள். மற்ற விஷயங்கள் நாளைக்குத் தெரியும்; இப்பொழுது போய்ப் படுத்துக்கொள்ளுங்கள். (அன்னியாவையும் வாரியாவையும் முத்தமிட்டுக்கொண்டு), நான் பழங்காலத்து மனுஷ்யன்; என் காலத்து விஷயங்கள் இப்பொழுது யார்க்கும் பிடிப்பதே இல்லை. ஆயினும் நான் ஒன்றுமட்டும் சொல்லமுடியும், என்னுடைய கொள்கைகளை நிலைநாட்டு

வதற்காக நான் எத்தனையோ கஷ்ட நிஷ்டூரங்களை அடைந்திருக்கிறேன். காரணமில்லாமல் குடியானவர்கள் என்னை நேசிக்கவில்லை. குடியானவர்களைக் குப்பையென்று தள்ளிவிடமுடியாது; அவர்களைப்பற்றித் தீர்க்கமாக ஆராய்ந்து பார்த்தால் எத்தனையோ விஷயங்கள் தெரியும். எந்த நிலையிலிருந்து ஆராயவேண்டும் என்பதைத்தான் நாம் தெரிந்துகொள்ளவேண்டும்...

அன்னியா: மறுபடியும் பிரசங்கம் ஆரம்பித்துவிட்டீர்களே, மாமா!

வாரியா: மாமா, வாயை மூடமாட்டீர்களா?

பீர்ஸ்: (கோபமாய்) இன்னும் பேச்சு ஓயவில்லையா, கயேவ்?

கயேவ்: வந்துவிட்டேன், வந்துவிட்டேன்...நீ போய்த்தூங்கு. இரண்டு பக்கங்களிலிருந்தும் நடுவில் வெள்ளைக்காயைத் தள்ளுகிறேன்...(வெளியே போகிறான். அவனுக்குப்பின்னால் காலை இழுத்து இழுத்து வைத்துக்கொண்டு பீர்ஸும் நடக்கிறான்.)

அன்னியா: இப்பொழுது பாரம் நீங்கினதுபோல் இருக்கிறது. யரோஸ்லாவலுக்கு நான் போகப் போவதில்லை, அத்தைப் பாட்டியையே எனக்குப் பிடிக்கவில்லை; இருந்தாலும் இப்பொழுது மனம் நிம்மதியாய் இருக்கிறது, எல்லாம் மாமாவின் தர்மந்தான்.

(கீழே அமர்கிறாள்.)

வாரியா; தூங்கப்போக நேரமாகிவிட்டது, நானும் போகிறேன். நீ இல்லாதபோது இங்கே அமர்க்களமாய் இருந்தது. வேலைக்காரருக்காக ஒதுக்கியுள்ள விடுதிகளில் நம்முடைய பழைய வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். எபிமுயிஷ்கா, போலிமா, எவ்ஸ்டிக்னீ, கார்ப் முதலியோர் இருக்கிறார்கள். முதல் முதலில் இப்படி ஆரம்பித்தார்கள்; இரவு நேரங்களில் போக்கிரிகளைத் தங்கள் விடுதிகளில் நுழைய விட்டார்கள். நான் ஒன்றும் பேசவில்லை. பிறகு அவர்கள் ஒரு வதந்தியைக் கிளப்பிவிட்டார்கள். பட்டாணிக்கடலையைத் தவிர வேறு ஆகாரம் அவர்களுக்குக் கொடுக்கக்கூடாதென்று நான் உத்தரவு செய்தேனும்! எல்லாம் என் கருமித்தனத்தால்தான் அப்படிச் செய்தேனும்! இதற்கெல்லாம் காரணமாயிருந்தவன் எவ்ஸ்டிக்னீ...அப்படியானால் ஒன்று செய்யவேண்டும் என்று எண்ணினேன். அவனைக் கூப்பிட்

டனுப்பினேன். (கொட்டாவி விடுகிறாள்.) அவன் வந்தான் அட முட்டாளே...இப்படிப் பேச உனக்கு எப்படித் துணிவு வந்தது என்றேன்...(அன்னியாவைப் பார்த்து) என்ன அன்னியா...(சத்தப் பேசாமலிருக்கிறாள்). இவள் தூங்கிப் போய்விட்டாள்......) அன்னியாவைக் கையைப் பிடித்து அழைத்துப் 'படுக்கப் போவோம், வா...அம்மா, வா!......' (நடத்தி அழைத்துக்கொண்டு போகிறாள்) என் தங்கம் தூங்கிவிட்டாள். (இருவரும் போகிறார்கள்) (வெகுதூரத்திலிருந்து, தோட்டத்திற்கு வெளியிலிருந்து, ஓர் ஆயனுடைய புல்லாங்குழலின் இசை வருகிறது. டிராவிமாவ் பிரவேசிக்கிறான், வரியாவையும் அன்னியாவையும் கண்டு, நிற்கிறான்.)

வாரியா: உஸ்...சத்தம் போடாதே...அவள் தூங்குகிறாள், வா அம்மா, என் தங்கமே!

அன்னியா: (மெதுவாக, அரைத்தூக்கத்தில்) எனக்கு மிகவும் களைப்பாயிருக்கிறது...மணிகள் கணகணவென்று கேட்கின்றன...மாமா...அம்மா...அம்மா, மாமா—

வாரியா: வா அம்மா...

(அருமை அன்னியா, வா அம்மா...)அவர்கள் அன்னியாவின் அறைக்குள் போகிறார்கள்.)

டிராவிமாவ்: (மிகவும் மனம் இளகி) இவளே என் சூரியன்! வசந்த காலத்தின் அழகெல்லாம் இவளிடம் பொருந்தியிருக்கிறது!

(திரை விழுகிறது.)

இரண்டாம் அங்கம்

[ஒரு வயலில் புராதனமான, கோணலான, இடிந்து விழுந்த சிறிய கோயில். அதன் பக்கத்தில் ஒரு கிணறும், பெரிய கற்களும். ஒரு காலத்தில் அப் பெருங் கற்கள் கல்லறைக் கற்களாக இருந்திருக்கவேண்டும். ஒரு பழைய பெஞ்சு அங்கே கிடக்கிறது. கயேவின் மாளிகைக்குப் போகிற ரஸ்தாவையும் அங்கே இருந்து பார்க்கலாம். ஒரு பக்கத்தில் கொஞ்சம் உயர்ந்த இடத்தில் இலவ மரங்கள் செறிந்து இருண்டு விளங்குகின்றன; அங்கேதான் செர்ரித் தோட்டத்தின் எல்லை ஆரம்பமாகிறது. தூரத்தில் தந்திக் கம்பங்களின் வரிசை. வெகு தூரத்திற்கு அப்பால் அடிவானத் தருகே ஒரு பெரிய பட்டணம் தெரியும். மப்பு மந்தாரமில்லாத பொழுதுதான் அது தென்படும். சூரியன் சீக்கிரத்தில் மறைந்துவிடுகிற சமயம். சார்லட்டா, யாஷா, துன்னியாஷா ஆகியோர்கள் பெஞ்சின்மீது உட்கார்ந்துகொண்டு இருக்கிறார்கள்; எப்பிக்கிடாவ் பக்கத்தில் நின்றுகொண்டு சாரங்கி வாத்தியம் வாசித்துக் கொண்டிருக்கிறான். மற்றவர்கள் எல்லோரும் சிந்தனையில் ஆழ்ந்தபடியே அமர்ந்திருக்கிறார்கள். சார்லட்டா ஆண்பிள்ளை அணியும் ஒரு பழைய குல்லாவை அணிந்து கொண்டிருக்கிறாள். அவள் தன் தோள்மீதிருந்த ஒரு துப்பாக்கியை எடுத்து, அதிலுள்ள தோலில் கொக்கியைப் பொருத்துகிறாள்.]

சார்லட்டா: (சிந்தனை தேங்கிய முகத்தோடு) சொல்லிக்கொள்ள எனக்கென்ன யோக்கியதை இருக்கிறது! எனக்கு என்ன வயதென்றே எனக்குத் தெரியாது. ஆனால் நான் இன்னும் ஒரு சின்னஞ் சிறு பெண்தான் என்றே எண்ணுகிறேன். தகப்பனாரும் தாயாரும் சந்தைகளுக்கு அழைத்துப்போய், நல்ல வேடிக்கைகள் செய்து காட்டுவார்கள். நானும் அநேக வேடிக்கைகள் காட்டுகிற வழக்கம். தாயும் தகப்பனும் போனபிறகு, ஒரு ஜெர்மன் சீமாட்டி என்னைத் தன் வீட்டில் வைத்துக்கொண்டு எனக்குப் பாடம் சொல்லித் தந்தாள். நல்லது - நான் வளர்ந்தேன்; ஒரு செவிலித்தாய்

ஆனேன். ஆனால் நான் யார், எங்கிருந்து வந்தேன் என்பதெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது...என் பெற்றோர்களைத்தான் தெரியுமா? (பையிலிருந்து ஒரு வெள்ளரிக்காயை எடுத்துக் கடித்துத் தின்றுகொண்டே) எனக்கு ஒன்றும் தெரியாது. (சிறிது மௌனம்) நல்ல விஷயத்தைப் பற்றிக் கேட்கவேண்டும் என்று சில சமயங்களில் ஆசை வரும், ஆனால், பேசுவதற்கோ ஆளில்லை......எனக்கு ஒருவரும் கிடையாது.

எப்பிக்கிடாவ்:— (சாரங்கியை மீட்டிக்கொண்டே பாடுகிறான்.)
"பெரிய மனிதரென்றால் எனக்கென்ன,
வேண்டியவர் வேண்டாதவரென்றால் எனக்கென்ன?"
வீணை வாசிப்பதே குஷியாகத்தான் இருக்கிறது.

துன்னியாஷா:— (ஒரு சிறு கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்துப் பவுடரை ஒற்றிக்கொண்டு) உன்னுடைய வாத்யம் சாரங்கி, வீணை இல்லை.

எப்பிக்கிடாவ்:— காதல் பித்தேறினவனுக்கு இது வீணைதான்... (வாய்க்குள் வண்டுபோல் ரீங்காரஞ் செய்துகொண்டு) 'காதற் கனவினால் இருவரும் கனிந்து உருகினால்......'

(யாஷா பின் பாட்டுப் பாடுகிறான்.)

சார்லட்டா:— இவர்கள் பாடுகிற பாட்டு எவ்வளவு கோரமாய் இருக்கிறது... நரி ஊளையிடுவது போலிருக்கிறது!

துன்னியாஷா:— (யாஷாவைப் பார்த்து) வெளி நாடுகளில் பிரயாணம் செய்வது எவ்வளவு ஆனந்தமாயிருக்கிறது, தெரியுமா?

யாஷா:— ஆமாம், சரிதான்; நீ சொல்லுகிறதை நான் ஒப்புக்கொள்ளாமல் இருக்க முடியாது. (கொட்டாவி விட்டுக்கொண்டு, சிகரட்டைப் பற்றவைக்கிறான்.)

எப்பிக்கிடாவ்: நீங்கள் சொல்வது தெளிவான விஷயந்தான். வெளி நாடுகளிலே வெகுநாளாகவே எல்லாம் உன்னத நிலைக்கு வந்துவிட்டன.

யாஷா:— ஆமாம். நீ சொல்வது உண்மைதான்.

எப்பிக்கிடாவ்: நான் மிகவும் படித்தவன், என்னவோ பெரிய புஸ்தகங்களையெல்லாம் வாசித்திருக்கின்றேன். எவ்வளவு படித்து என்ன பயன்? என் மனம் எதை இச்சிக்கிறது என்பதே தெரியவில்லை — நான் உயிர் வாழ வேண்டுமா;

அல்லது என்னை நானே சுட்டுக்கொள்ள வேண்டுமா — ஒன்றுமே இன்னும் புலனாகவில்லை! எப்பொழுதும் ரிவால்வரை மட்டும் கையில் வைத்துக்கொண்டே இருக்கிறேன். இதோ இருக்கிறது, பாருங்கள்!

(ரிவால்வரைக் காண்பிக்கிறான்.)

சார்லட்டா: என் காரியமாகிவிட்டது, நான் போகிறேன். (துப்பாக்கியை யெடுத்துத் தோளில் மாட்டுகிறாள்.) எப்பிக்கிடாவ், நீ புத்திசாலிதான். ஆனால் உன்னைக் கண்டால், அடிவயிற்றில் நெருப்புத்தான். உன்னைப் பார்த்து ஸ்திரீகள் அப்படியே மோகித்து விழுந்துவிடுவார்கள்! (போய்க்கொண்டே) 'புத்திசாலி, புத்திசாலி' என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் எல்லாம் பெரிய முட்டாள்களாகவே இருக்கிறார்கள். என்னோடு பேசுவதற்குத்தான் ஒருவருமில்லை. நான் தனியாக இருக்கிறேன்...எனக்கு யாருமில்லை. ...நான் யார்? எதற்காக இருக்கிறேன்? ஒருவராலும் சொல்லமுடியாது...

(மெதுவாகப் போகிறாள்.)

எப்பிக்கிடாவ்: இதர சமாசாரங்களைப்பற்றிப் பேசாமல், உசிதமாய் என் சமாசாரத்தைப்பற்றிப் பேசுவதாயிருந்தால், என்னைப்பற்றித்தானே நான் பேசிக் கொள்ளவேண்டும்! புயல் ஒரு சிறு படகை ஆட்டிக் குலைப்பதுபோல, விதி என்னை இரக்கமில்லாமல் ஆட்டிக் குலைக்கிறது. நான் தப்பாக எண்ணுவதாகவே இருக்கட்டும். அப்படியானால் இன்று காலை நான் எழுந்திருந்தவுடன் என் மார்பின் மீது பயங்கரமான பெரிய எட்டுக்கால் பூச்சியை ஏன் கண்டேன்?...அது ஏன் அப்படி வந்து கிடந்தது? பூச்சி என்றால், அது இவ்வளவு பெரிதிருக்கும்! (இரண்டு கைகளாலும் அளவு காண்பித்துக்கொண்டு) இது மட்டுமா? ஏதேனும், சர்பத் குடிக்க வேண்டுமென்று வெளியிலே போனால், அதில் மிகவும் அருவருப்பைத் தருகிற வண்டு ஏதோ மிதக்கிறது! (சற்றுப்பேசாமலிருக்கிறான்.) ஆங்கில ஆசிரியர் பக்கிள் எழுதிய நூலை வாசித்திருக்கிறாயா? (சிறிது அமைதி.) துன்னியாஷா, உன்னிடம் சில வார்த்தைகள் சொல்லித்தான் ஆகவேண்டும்.

துன்னியாஷா: சொல்லேன்.

எப்பிக்கிடாவ்: உன்னிடம் மட்டும் சொல்லுவதாக இருக்கிறேன். (பெருமூச்செறிகிறான்.)

துன்னியாஷா: (சங்கடப்பட்டுக்கொண்டு) நல்லது...ஆனல் முதலில் என்னுடைய ஜாக்கெட்டை எடுத்துக்கொண்டு வருகிறாயா?... அது பெட்டிக்குப் பக்கத்தில் இருக்கிறது. இங்கே கொஞ்சம் குளிராக யிருக்கிறது.

எப்பிக்கிடாவ்: நல்லது; நான் கொண்டு வருகிறேன்...என்னுடைய ரிவால்வரை வைத்துக்கொண்டு என்ன பண்ணுகிறது என்று இப்பொழுது எனக்குத் தெரியும்.. ...

(சாரங்கியை மெதுவாக வாசித்துக்கொண்டு வெளியே போகிறான்.)

யாஷா; தன் துக்கங்களை எப்படி அடுக்குகிறான், பார்த்தாயா? எண்ணி முடியாதுபோலிருக்கிறது! உள்ளதைச் சொல்லிக் கொண்டால் என்ன—அவன் ஒரு முட்டாள்! (கொட்டாவி விடுகிறான்.)

துன்னியாஷா: பகவான்தான் புத்தி கொடுக்கவேண்டும். தன்னையே சுட்டுக் கொன்று கொள்ளாமல் இருக்கவேண்டுமே! (சற்றும் பேசாமலிருக்கிறான்.) எனக்குக் கவலையாயிருக்கிறது. என்னையே நான் புண்படுத்திக்கொள்கிறேன். இந்த இடத்திற்கு வருகிறபொழுது நான் சிறு பெண். சாதாரண ஜனங்களுடைய பழக்க வழக்கங்களே எனக்குக் கிடையாது. என் கையைப் பாருங்கள். அப்பழக்கில்லாத ஒரு சீமாட்டியின் கை போலிருக்கிறது. எனக்கு உணர்ச்சி அதிகம், நாகரிகம் அதிகம், எல்லாம் ஒரு சீமாட்டியைப் போலவேதான். எதைக் கண்டாலும் வெறுக்கிறேன், பயப்படுகிறேன். யாஷா, நீங்கள் என்னை ஏமாற்றிவிட்டால், எனக்கு என்ன ஆகுமோ!

யாஷா: (முத்தமிட்டுக்கொண்டு) என் இன்பமே! ஒவ்வொரு பெண்ணும் தன்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டியது அவசியந்தான். கவலையே இல்லாத பெண்ணைக் கண்டாலே எனக்குப் பிடிக்காது.

துன்னியாஷா: உன்னிடத்தில் எனக்கு அளவு கடந்த காதல். நீங்கள் படித்தவர்கள், எந்த விஷயத்தைப்பற்றியும் பேச முடியும். (பேசாமலிருக்கிறாள்.)

யாஷா: (கொட்டாவி விட்டுக்கொண்டு) உண்மைதான்...... என்னுடைய அபிப்பிராயம் இதுதான்: காதல் காதல் என்று அலைகிற ஒரு பெண்ணின் நடத்தை சரியில்லை என்று தான் சொல்லவேண்டும். (சிறிது மௌனம்) காற்றோட்டமாயிருக்கிற இடத்தில் சுருட்டுப் பிடிப்பது இன்பந்தான்... (உற்றுக் கவனித்துக்கொண்டு.) யாரோ ஜனங்கள் வருகிறார்கள்......எல்லாம் நம்முடைய எஜமான்களே. [துன்னி யாஷா தன்னை யறியாமலே அவனைத் தழுவுகிறாள்.]

யாஷா: வீட்டுக்குள்ளே போ, குளிப்பதற்கு ஆற்றுக்குப் போய் வந்ததுபோல அந்தப் பாதை வழியாய்ப் போ. அப்படிப் போகாது போனால், நீ அவர்களைச் சந்திக்க நேரிடும். நீயும் நானும் ஏதோ ஏற்பாடு செய்துகொண்டு இங்கே சந்தித்திருக்கிறோம் என்று சந்தேகிப்பார்கள். சந்தேகிப்பதற்கு இடம் தரக்கூடாது. சந்தேகம் என்றாலே எனக்குப் பிடிக்காது.

துன்னியாஷா: (தும்மிக்கொண்டு) உங்களுடைய சுருட்டு எனக்குத் தலைவலியை உண்டுபண்ணிவிட்டது...... (போகிறாள்.) (யாஷா கோயிலருகே தனியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறான். ரனவ்ஸ்கி, கயேவ், லொபாகின் மூவரும் வருகின்றனர்.)

லொபாகின்: யோசனை செய்துகொண்டே இருந்தால் பயன் இல்லை, ஒரு முடிவுக்கு வரவேண்டும். காலம் நிற்காது. விஷயமோ மிகவும் அற்பமானது. பங்களாக்கள் கட்டுவதற்கு நிலத்தைவிட உங்களுக்கு இஷ்டமா, இல்லையா? உண்டு, இல்லை என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லுங்கள். வழவழத்த சமாசாரம் வேண்டாம், ஒரே வார்த்தையில் சொல்லிவிடுங்கள்.

ரனவ்ஸ்கி: இங்கே யார் நாற்றம்பிடித்த சுருட்டுக் குடிக்கிறார்கள்? சகிக்க முடியவில்லையே!...... (கீழே அமர்கிறாள்.)

கயேவ்: இப்பொழுது ரயில் பாதையை நம்முடைய பக்கத்தில் போட்டிருக்கிறார்கள். நமக்குக் கொஞ்சம் சௌகரியந்தான். (கீழே உட்கார்ந்துகொண்டு) ரயிலில் பட்டணத்திற்குப் போய்ப் பலகாரம் சாப்பிட்டுவிட்டுத் திரும்பிவந்தோம்... நான் மேஜைமீது பந்து விளையாடுகையில் மஞ்சள் காயை நடுவிலே தள்ளினேன்! வீட்டிற்குப்போய் ஒரு விளையாட்டு விளையாடலாம் என்று பார்க்கிறேன்.

ரனவ்ஸ்கி: விளையாட்டுக்கு இப்பொழுது என்ன அவசரம்? அதற்கு அவகாசமிருக்கிறது.

லொபாகின்: (கெஞ்சிக் கேட்கிறான்.) எனக்கு ஒரு வார்த்தை சொல்லிவிடுங்கள்! நான் கேட்டதற்குப் பதில் சொல்லுங்கள்!

கயேவ்: அப்படியா? (கொட்டாவிவிடுகிறான்.)

ரனவ்ஸ்கி; (தன் பணப்பையைப் பார்த்துக்கொண்டு) நேற்று இதிலே எவ்வளவு பணம் இருந்தது, ஆனால் இன்றைக்கு ஒன்றுமே இல்லை! பாவம், வாரியா எவ்வளவோ சிக்கனம் பண்ணுகிறாள்! நமக்கெல்லாம் பால் கஞ்சிதான் தருகிறாள். சமையலறையில் வேலை செய்கிறவர்களுக்குப் பட்டாணிக் கடலையைத் தவிர வேறொன்றுமில்லை, நானோ புத்தி இல்லாமல் பணத்தை வாரி இறைக்கிறேன்...... (பையைத் தொப்பென்று கீழே போடுகிறாள். தங்க நாணயங்கள் சிதறி விழுகின்றன.) எல்லாம் கீழே விழுந்துவிட்டனவே! (அவள் கவலையுறுகிறாள்.)

யாஷா; உத்தரவு செய்தால், ஒரு நொடியில் அவைகளைப் பொறுக்கிவிடுகிறேன். (நாணயங்களைப் பொறுக்குகிறான்.)

ரனவ்ஸ்கி; யாஷா, பொறுக்கிக்கொடு. பலகாரம் சாப்பிட நான் எதற்காகப் பட்டணத்திற்குப் போனேன்?......நல்ல ஹோட்டல் பார்த்துத்தான் போனேன்! என்ன ஆபாசம், என்ன பாட்டு! மேஜைமேலே விரித்திருந்த துணியில் சோப்பு வாசனை அடித்தது!...கயேவ், நீ எதற்காக அவ்வளவு அதிகமாய்க் குடித்தாய்? மிகவும் கூடுதலாகச் சாப்பிட்டுவிட்டாய். அவ்வளவு சாப்பிடுவானேன்? வாய்க்கு வந்தபடி பேசிக் கொட்டிவிட்டாய். அதுவும் யாரோடே? ஹோட்டல் வேலைக்காரர்களோடு! பத்தொன்பதாம் நூற்றாண்டுக் கதைகளை அவர்களிடமா பேசவேண்டும்?

லொபாகின்: நீங்கள் சொல்லுவது உண்மைதான்.

கயேவ்: (கையை வீசிக்கொண்டு) இனிமேல் நான் திருந்தப் போவதில்லை, இது தெரிந்த விஷயந்தானே... (யாஷாவிடம், எரிச்சலுடன்) எங்கே போனாலும் நீ முன்னால் வந்து நின்று தொலைக்கிறாயே, ஏன்?......

யாஷா; (சிரித்துக்கொண்டு) நீங்கள் பேசுகிறபொழுது, என்னால் சிரிக்காமல் இருக்க முடிகிறதில்லை.

கயேவ்: (சகோதரியிடம்) ஒன்று நான் போகவேண்டும், அல்லது அவன் தொலையவேண்டும்...

ரனவ்ஸ்கி: யாஷா, வெளியே போ, போய்த் தொலை...

யாஷா; (ரனவ்ஸ்கியிடம் அவளுடைய பையைக் கொடுத்து விட்டு) நான் போகிறேன். (சிரிப்பை அடக்கமுடியாமல் அடக்கிக்கொண்டு) இதோ போய்விட்டேன்...... (போகிறான்.)

லொபாகின்: அந்தப் பணக்கார டெரிகனுவ் உங்களுடைய சொத்தை வாங்க உத்தேசித்திருக்கிறான். ஏலத்தன்று அவனே நேரில் வரப்போவதாகக் கேள்வி.

ரனவ்ஸ்கி: இந்தத் தகவல் உனக்கு யாரிடமிருந்து கிடைத்தது?

லொபாகின்: பட்டணத்திலே இதைப்பற்றிப் பேச்சு நடக்கிறது.

கயேவ்: யரோஸ்லாவலில் இருக்கிற எங்களுடைய அத்தை ஏதோ பணம் அனுப்புகிறதாக வாக்குக் கொடுத்திருக்கிறாள். ஆனால் எப்பொழுது, எவ்வளவு அனுப்பப் போகிறாள் என்பதுமட்டும் எங்களுக்குத் தெரியாது.

லொபாகின்: அவள் எவ்வளவு அனுப்பப் போகிறாள்? லட்சமா, இரண்டு லட்சமா?

ரனவ்ஸ்கி: நல்லது!...பத்து அல்லது பதினையாயிரத்திற்கு மேல் இராது.

லொபாகின்: நான் சொல்லுகிறேன் என்று கோபித்துக் கொள்ள வேண்டாம். நீங்கள் இரண்டு பேர்களும் புத்தி சிதறிப் போயிருக்கிறீர்கள். உங்களைப்போன்ற ஆசாமிகளை நான் எங்கும் பார்த்ததேயில்லை. உங்கள் நிலம் ஏலம்போட்டு விற்கப்படும் என்று பச்சையாக உங்களிடம் சொல்லியாயிற்று. நீங்களோ அதைப் புரிந்துகொள்ளாததுபோலவே நடக்கிறீர்கள்.

ரனவ்ஸ்கி: நாங்கள் என்ன செய்ய முடியும்? உன் யோசனையைச் சொல்லு, கேட்போம்!

லொபாகின்: ஒவ்வொரு நாளும் நான் ஒரே விஷயத்தைத்தான் படித்துப் படித்துச் சொல்லுகிறேன். உங்கள் செவிகளில் ஏறுவதாயில்லை. செர்ரித் தோட்டத்தையும் நிலத்தையும் பங்களாக்கள் கட்டுவதற்காகக் குத்தகைக்குவிடவேண்டும், இதை உடனே செய்யவேண்டும், எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் செய்யவேண்டும். இல்லா

விட்டால் ஏலத்தில் போய்விடும்! நீங்கள் இதை உணர்கிறீர்களா? பங்களாக்கள் கட்டுவதற்கு விடலாம் என்று நீங்கள் தீர்மானித்துவிட்டால், உங்களுக்கு வேண்டிய அளவு பணம் கிடைக்கும். சொத்து ஏலம் போகாமல் காத்துக் கொள்ளலாம்.

ரனவ்ஸ்கி: பங்களாக்கள், பங்களாக்காரர்கள் என்ற பேச்சே என் காதில் நாராசம் காய்ச்சி ஊற்றியது போலிருக்கிறது. சொல்லுகிறேன் என்று நீ வருத்தப்படவேண்டாம்.

கயேவ்: நீ சொல்வது மிகவும் சரியான விஷயம்.

லொபாகின்: உங்கள் பேச்சைக் கேட்க எனக்கு அழுகை வருகிறது. மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்துவிடுவேன் போல் இருக்கிறது. ஒன்றும் செய்யமுடியாது! இதற்கா என்னைச் சாருகக் கசக்கிப் பிழிந்துவிட்டீர்கள்? (கயேவைப் பார்த்து) நீயும் ஒரு கிழவிமாதிரிதான்!

கயேவ்: என்ன சொன்னாய்?

லொபாகின்: நீ ஒரு பாட்டி (வெளியே போக முயலுகிறான்.)

ரனவ்ஸ்கி: (நடுக்கங்கொண்டு) வேண்டாம், போகாதே; இங்கேயே இரு. உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்தச் சிக்கலிலிருந்து வெளியேறுவதற்கு வேறு ஓர் உபாயத்தைக் கண்டுபிடிப்போம்.

லொபாகின்: கண்டுபிடிக்க என்ன இருக்கிறது?

ரனவ்ஸ்கி: போகாதே, மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன். நீ இங்கே யிருக்கிறது எங்களுக்குச் சந்தோஷமாயிருக்கிறது... (சிறிது மௌனம்) ஏதோ தலைக்கு வந்திருக்கிறது. வீடு வாசல் எல்லாம் தொலைந்து குட்டிச்சுவராய்ப் போய்விடும் போலிருக்கிறது. அதற்குத்தான் நான் காத்துக்கொண்டிருக்கிறேன்போலப் படுகிறது.

கயேவ்: [ஆழ்ந்த யோசனையில்] பைக்குள் இரண்டு பந்துகளைத் தள்ளிவிட்டேன். இப்பொழுது நடுவிலே தள்ளியிருக்கிறேன்!......

ரனவ்ஸ்கி: எங்களுடைய பெரிய பாவங்களுக்குத் தண்டனை வேண்டியதுதான்...

லொபாகின்: உங்களுக்கு ஏது பாவம்?...

கயேவ்: (ஒரு மிட்டாயை வாயில் போட்டுக்கொண்டு) நான் உண்டு கெட்டேன் என்று சொல்லுகிறார்கள்......

ரனவ்ஸ்கி: என் பாவம் கொஞ்ச நஞ்சமல்ல!... ஒரு பைத்தியக் காரிபோல, எப்பொழுதும் பணத்தைக் கண்மூடித்தனமாய் வாரி இறைத்து வந்தேன். தவிர, வேறொன்றும் தெரியாத ஒருவரை நான் கல்யாணமும் செய்துகொண்டேன். மதுவினாலேயே என் கணவர் மாண்டார். அபாரக் குடி—மதுவிலேயே அவர் மூழ்கியிருந்தார். என் துரதிர்ஷ்டத்திற்குத் தகுந்தபடி, நான் வேறொருவனைக் காதலித்து, அவனோடு நெருங்கிய சம்பந்தமும் வைத்துக்கொண்டிருந்தேன். அதே சமயத்தில்தான், தலைதூக்க முடியாதபடி எனக்கு முதலாவது தண்டனை ஏற்பட்டது— இங்கேதான், இந்த ஆற்றில்... என் சின்னஞ்சிறு பையன் மூழ்கிப் போய்விட்டான். நான் இந்த நாட்டைவிட்டுத் தேசாந்தரம் போனேன், இந்த ஊருக்கே ஒரு முழுக்குப் போட்டுவிட்டுத் திரும்பி வராதபடி போகலாம் என்ற எண்ணத்துடன் கிளம்பினேன். இந்த ஆற்றையும் இனிப்பாரேன் என்று கண்களை இறுக மூடிக்கொண்டு யோசனையில்லாமல் ஓடினேன்...... அவன் என்னை விடாமல் தொடர்ந்துவந்தான்... இரக்கமில்லாமல் ஒரு மிருகம் மாதிரித் தொடர்ந்துவந்தான். மென்டோனில் ஒரு பங்களா வாங்கினேன். அங்கே அவன் வியாதியால் படுக்கையாகிவிட்டான். மூன்று வருஷகாலமாக இராப்பகல் எனக்கு ஓய்வில்லை. அந்த வியாதிக்காரன் என்னைச் சக்கையாய்ப் பிழிந்துவிட்டான். நான் அப்படியே வாடி வதங்கிப் போய்விட்டேன். போன வருஷம், கடன்களை அடைப்பதற்காக அந்தப் பங்களாவை விற்றபிறகு, நான் பாரிஸ் நகரத்திற்குப் போனேன். அங்கேதான் அவன் என்னை உறிஞ்சி உதறியெறிந்துவிட்டான். இன்னொரு ஸ்திரீயோடு அவனுக்குத் தொடுப்பு ஏற்பட்டது. நான் விஷத்தைச் சாப்பிட்டுப் பிராணனை விட முயன்றேன்... என்ன முட்டாள்தனம்! என்ன வெட்கக் கேடான காரியம்!... திடீரென்று ஊரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் வந்தது. என் சிறிய பெண்ணைப் பார்க்கவும் ஆசை துடித்தது...... (கண்ணில் நீர் பெருகியதைத் துடைத்துக்கொள்ளுகிறாள்.) அப்பனே! இறைவா! என்னிடத்தில் கிருபை வை, என் பாவங்களைப் பொறுத்தருள வேண்டும்! பட்டதெல்லாம் போதும், இனிமேல் சிட்சை வேண்டாம். (தன் பையிலிருந்த ஒரு தந்தியை எடுக்கிறாள்.) இது பாரிஸ் நகரித்திலிருந்து இன்றைக்கு

வந்தது...... மன்னிப்பு வேறே கேட்கிறான், பாவி! நான் திரும்ப வேண்டுமென்று கெஞ்சுகிறான்! (தந்தியைக் கிழித் தெறிகிறாள்.) எங்கேயோ பாட்டு வாசிப்பது கேட்கிறதே... (உற்றுக் கேட்கிறாள்.)

கயேவ்: பல வாத்தியங்கள் சேர்ந்து வாசிக்கும் நம்முடைய பிரசித்தமான யூதக் கச்சேரி இதுதான்! நான்கு வயலின்கள், ஒரு புல்லாங்குழல், உச்சஸ்தாயியில் வாசிக் கும் ஒரு வயலின் ஆகியவை சேர்ந்து வாசிப்பது உனக்கு ஞாபகமிருக்குமே!

ரனவ்ஸ்கி: இந்தக் கச்சேரி இன்னும் நடைபெற்று வருகிறதா? நாமும் ஒரு தடவை அவர்களை வரவழைத்து நம் வீட்டில் ஒரு கச்சேரி வைக்கவேண்டும்.

லொபாகின்: (உற்றுக் கேட்டுக்கொண்டே) எனக்குக் காதில் விழவில்லையே...... (மெதுவாய் இராகம் இழுத்துக் கொண்டு) "ரொக்கப் பணம் கிடைத்தால், ஒரு ஜெர்மானி யன் எந்த ரஷ்யனையும் பிரெஞ்சுக்காரனாக மாற்றிவிடு வான்." (சிரித்துக்கொண்டு) இந்த மாதிரி விசித்திர நாடகத்தை நாடகக் கொட்டையிலே நேற்றுப் பார்த்தேன்.

ரனவ்ஸ்கி: பார்க்கப்போனால் அதில் விநோதம் ஒன்றும் இராது. நாம் பார்க்க வேண்டியவை நாடகங்களல்ல, நம்மையே நாம் அடிக்கடி பார்த்துக்கொண்டால் போதும். நம் வாழ்வெல்லாம் சாரமில்லாத வாழ்வு. நாம் எவ்வளவு வீணான பேச்சுப் பேசுகிறோம்!

லொபாகின்: வாஸ்தவந்தான். அதை மறைக்காமல் ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். நாம் மூட வாழ்வுதான் வாழ்கி றோம். (கொஞ்சம் பேச்சை நிறுத்துகிறான்) என்னுடைய தகப்பனார் ஒரு குடியானவர், ஒரு முட்டாள். அவருக்கு ஒன்றும் தெரியாது, எனக்கும் எதையும் கற்றுக் கொடுக்க வில்லை. குடிவெறி வேளைகளில் என்னை அடித்தார், அடியும் தடிக்கம்பால்தான். பொதுவாக அவரைப் பார்த்தால் என்னைப் பார்க்கவேண்டாம்—அவர் எவ்வளவு பெரிய மூடரோ அவ்வளவு பெரிய முட்டாள் நான். நானாவது ஏதேனும் சுயமாகக் கற்றுக்கொண்டேனா? அதுவுமில்லை. என் கையெழுத்தைப் பார்த்தால் போதும்—வயிற்றிலே அடித்துக்கொள்ள வேண்டியதுதான். பன்றி உழன்றது போல இருக்கும்! என் கையெழுத்தை யாரேனும் பார்த்தால் எனக்கு அவமானந்தான்.

ரனவ்ஸ்கி: நீ சீக்கிரம் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும், அப்பா.

லொபாகின்: ஆமாம்...உண்மைதான்.

ரனவ்ஸ்கி: பேசாமல் நம் வாரியாவைக் கல்யாணம் செய்து கொள். அவள் அழகும் குணமும் உடையவள்.

லொபாகின்: சரி.

ரனவ்ஸ்கி: அவள் நல்ல பெண்; கள்ளங் கபடு தெரியாதவள். நாள் முழுதும் சலிப்பில்லாமல் வேலை செய்கிறுன்; அதெல்லாம் ஒரு பக்கம் இருப்பதோடு, அவள் உன்னைக் காதலிக்கவும் செய்கிறுள். நீயும் வெகு நாளாகவே அவளிடம் நாட்டங் கொண்டிருக்கிறுய்.

லொபாகின்: நல்லது. எனக்கு ஒன்றும் ஆட்சேபமில்லை...... அவள் நல்ல பெண்தான். (யோசிக்கிறுன்)

கயேவ்: பாங்கியில் எனக்கு ஓர் உத்தியோகம் வந்திருக்கிறது. வருஷத்திற்கு ஆருயிரம் ரூபிள் சம்பளம்...உன் அபிப்பிராயம் என்ன ? ஒப்புக்கொள்ளலாமா ?

ரனவ்ஸ்கி: அது ஒன்றும் பிரமாதமில்லை ! இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் அது பெரிதா ?

(பீர்ஸ் ஒரு மேலங்கியைக் கொண்டுவருகிறுன்.)

பீர்ஸ்: (கயேவைப் பார்த்து.) இதோ இருக்கிறது மேலங்கி, எஜமான்; இதைப் போட்டுக்கொள்ளுங்கள். குளிராய் இருக்கிறது.

கயேவ்: (மேலங்கியைப் போட்டுக்கொண்டே.) ஏ கிழவா, நீ ஓயாமல் தொந்தரவு செய்துகொண்டே இருக்கிறுயே !

பீர்ஸ்: அதெல்லாம் சரி...... காலையிலே என்னிடம் சொல்லிக் கொள்ளாமலே போய்விட்டீர்களே, அவனை ஏற இறங்கப் பார்க்கிறுன்.

ரனவ்ஸ்கி: பீர்ஸ், நீ மிகவும் தொண்டு கிழமாய்ப் போய் விட்டாயே !

பீர்ஸ்: என்ன சொல்லுகிறீர்கள் ?

லொபாகின்: நீ தொண்டு கிழமாய்ப் போய்விட்டாய் என்று அவர்கள் சொல்லுகிறுர்கள் !

பீர்ஸ்: எனக்கு வயது மிகவும் ஆகிறது. வெகு காலமாக நான் உலகத்தில் இருக்கிறேன். எனக்குக் கல்யாணத்திற்கு

ஏற்பாடு செய்தபொழுது, உங்கள் தகப்பனூர்கூட அப்பொழுது பிறக்கவில்லை. (சிரித்துக்கொண்டு) அடிமைகளுக்கு விடுதலை என்று முழங்கின காலம் அது. அப்பொழுது நான் சிறிய எஜமான் கூடவேயிருந்து பணிவிடை செய்துவந்தேன். அதனால் நான் விடுதலை அடையவில்லை. என்னுடைய எஜமானரோடு தங்கியிருந்தேன்...... (சற்றுப் பேசாமல் நிற்கிறான்.) எனக்கு ஞாபகமிருக்கிறது. ஒருவன் பாக்கியில்லாமல் எல்லோரும் சந்தோஷமா யிருந்தார்கள். எதற்காகச் சந்தோஷப்பட்டார்கள் என்பதே அவர்களுக்கு விளங்கவில்லை.

லொபாகின்: ஆமாம், அந்தக் காலம் நல்ல காலமாய்த்தான் இருந்தது. அடிமைகளை நன்றாகக் கசை அடி அடித்தார்கள்.

பீர்ஸ்: (இதைக் காதால் கேட்காமலே) அந்தக் காலம் போய்விட்டதே! குடியானவர்கள் எஜமானர்களை விடவில்லை. எஜமானர்களும் குடியானவர்களை விடவில்லை. இப்பொழுது எல்லோரும் பிரிந்து போய்விட்டார்கள்; ஒன்றும் விளங்கவில்லை.

கயேவ்: பீர்ஸ் ஒரு நிமிஷம் பேசாமல் இரு. (லொபாகினைப் பார்த்து.) பட்டணத்திற்கு நாளை போகவேண்டும். அங்கே ஒரு தளபதி இருக்கிறார். அவரிடம் என்னை அறிமுகம் செய்துவைத்து, நோட்டின்மீது கடன்வாங்கித் தருவதாகச் சில நண்பர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

லொபாகின்: இதிலொன்றும் பலியாது. நீங்கள் வட்டியையும் செலுத்தப் போவதில்லை என்பதை நான் தீர்மானமாகச் சொல்லுவேன்.

ரனெவ்ஸ்கி: தளபதியாவது இளபதியாவது! இவன் ஏதோ கனவு காண்கிறான்.

(டிராவிமாவ், அன்னியா, வாரியா மூவரும் வருகின்றனர்.)

கயேவ்: நம் கந்நுக்குட்டிகள் எல்லோரும் இதோ வந்துவிட்டார்கள்.

அன்னியா: அம்மா, கீழே உட்கார்ந்துகொண்டிருக்கிறீர்களே!

ரனெவ்ஸ்கி: என் செல்வங்களே, வாருங்கள்! வாருங்கள்!...... (அன்னியாவையும் வாரியாவையும் தழுவுகிறாள்.) உங்களிடத்தில் எனக்கு எவ்வளவு பிரியம் என்று உங்கள் இருவருக்கும் தெரியுமா? இப்படி அடுத்தடுத்துப் பக்கத்திலே உட்காருங்கள். (அனைவரும் அமர்கின்றனர்.)

லொபாகின் : (டிராவிமாவைப் பார்த்து.) ஒரு யுகமாய்க் கலா சாலையில் வாசித்துக்கொண்டிருக்கிற நம் வாலிப நண்பன் எப்பொழுதும் இளம் பெண்டுகளோடுதான் சுற்றிக் கொண்டிருக்கிறான் போலிருக்கிறது!

டிராவிமாவ் : உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள்.

லொபாகின் : கொஞ்சநாள் போனால் வயது ஐம்பதாகிவிடும், அப்பொழுதும் கலாசாலைப் படிப்பு முடியாது!

டிராவிமாவ் : போதுமே உங்கள் பைத்தியக்காரத் தமாஷுகள்.

லொபாகின் : நீ மிக விசித்திரமானவன், உனக்கு எதற்காகக் கோபம் வருகிறது!

டிராவிமாவ் : என்னைத் தொந்தரவு செய்யவேண்டாம்!

லொபாகின் : (சிரித்துக்கொண்டே.) நான் கேட்கிறேன் என்று கோபித்துக் கொள்ளாதே. என்னைப்பற்றி நீ என்ன அபிப்பிராயம் வைத்திருக்கிறாய்—அதைச் சொல் முதலில்.

டிராவிமாவ் : உங்களைப்பற்றி என் அபிப்பிராயம் இதுதான் : நீங்கள் ஒரு பணக்காரர், கொஞ்சநாள் போனால் லட்சாதிபதியாகவும் ஆகிவிடுவீர்கள். எதிரே காணும் சகல பிராணிகளையும் விழுங்கி ஏப்பமிடும் கொடிய மிருகங்களும் உலகத்திற்கு அவசியமாயிருப்பதுபோல, நீங்களும் அவசியந்தான்! (எல்லோரும் சிரிக்கின்றனர்.)

வாரியா : டிராவிமாவ், எங்களுக்கு ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்களைப் பற்றிச் சொன்னால் கேட்போம்.

ரனவ்ஸ்கி : அவைகளைப்பற்றி இப்பொழுது என்ன? நேற்றுப் பேசின விஷயத்தைப்பற்றித் தொடர்ந்து பேசுவோம்.

டிராவிமாவ் : எதைப்பற்றி?

கயேவ் ; கர்வம் பிடித்த மனிதனைப்பற்றித்தான்.

டிராவிமாவ் : நேற்று வெகுநேரம் பேசினோம், ஆனால் ஒரு முடிவுக்கும் வரவில்லை. செருக்குள்ள மனிதனிடத்தில் ஏதோ மறைவான சக்தி ஒன்று இருக்கிறது என்று நீங்கள் அபிப்பிராயப்படுகிறீர்கள். உங்கள் எண்ணப்படி நீங்கள் தவறில்லாமல் இருக்கலாம். ஆனால் ஒளிவு மறைவு இல்லாமல் பச்சையாகச் சொல்லுகிறேன். தேகக் கட்டு இல்லாத நிலையில் செருக்கு இருந்து என்ன பயன்? அந்தச் செருக்குக்கு அர்த்தமேயில்லை. அது பழிக்கத் தகுந்தது. தேகத்தை வெள்ளரிப் பழம்போல வைத்திருந்தால்

முட்டாள்தனம் இல்லையா? மனித சமூகத்தில் பெரும்பாலோர் அநாகரிகமாயும் அறிவில்லாமலும், நரக வேதனையில் ஆழ்ந்தும் இருந்துவந்தால் என்ன பயனுண்டு? நம்மை நாமே பார்த்து மெச்சிக்கொள்வதை நிறுத்தவேண்டும்! அவரவர் வேலையைக் கவனித்துச் செய்வதுதான் கடமை.

கயேவ்: என்ன பாடுபட்டாலும், கடைசியில்எல்லோரும் இறந்துதானே போகிறோம்!

டிராவிமாவ்; இறந்து போகிறோம் என்று எப்படி நிச்சயமாகச் சொல்லமுடியும்? இறந்துபோகிறோம் என்று சொல்லுகிறீர்கள். அதனுடைய கருத்தென்ன? மனிதனுக்கு நூறு பொறிகள் இருக்கலாம். ஒருவேளை நமக்கு நன்றாகத் தெரிந்துள்ள ஐந்து பொறிகள் மட்டுமே மரணத்தினால் அழிவதாயிருக்கலாம். ஆனால் மீதமுள்ள தொண்ணூற்றைந்து பொறிகள் இருக்கத்தானே செய்யும்! அவைகள் தங்கள் தொழில்களை நடத்தி இயங்கிக்கொண்டிருக்கும் என்று வைத்துக்கொள்ளலாமே.

ரனவ்ஸ்கி; டிராவிமாவ், எவ்வளவு சாதுர்யமுள்ளவன் நீ!

லொபாகின்: (கிண்டலாக.) கேட்பானேன், அப்பா சாதுரியம்!

டிராவிமாவ்: மனித சமூகம் முன்னேறிக்கொண்டே போகிறது. அது தன்னுடைய சக்திகளையெல்லாம் செம்மைப்படுத்திப் பூரணமாக்கிக்கொண்டே செல்கிறது. இப்பொழுது அதனால் அடையமுடியாதவை எல்லாம் காலக் கிரமத்தில் கண்முன்பு நிறைவேறுவதைக் காணலாம்; அவை அப்பொழுது விஷயங்களாகத் தோன்றும். நாம் மட்டும் உழைத்துக்கொண்டே வரவேண்டும், நம் முழுவலிமையுங்கொண்டு பாடுபடவேண்டும்; உண்மையை நாடுகிறவர்களுக்கு நாம் உதவிபுரியவேண்டும். நம் நாடாகிய ரஷ்யாவிலே, நம்மிடையில் உண்மைக்காகப் பாடுபடுகிறவர்கள் சிலரே இருக்கின்றனர்—விரல்விட்டு எண்ணிவிடலாம். எனக்குத் தெரிந்தவரையில், படித்த வகுப்பார்களில் பெரும்பாலோர் எதையும் நாடுவதில்லை, எதையும் செய்வதில்லை, எந்த வேலைக்கும் அருகதையற்றுக் கிடக்கிறார்கள். தாங்கள் அறிவாளிகள் என்று சொல்லிக்கொள்ளுகிறார்களே தவிர, அவர்கள் தங்கள் வேலையாட்களைப் 'போடா, வாடா' என்று மரியாதையில்லாமல் அழைக்கிறார்கள். குடியானவர்களை ஆடுமாடுகளைப்போலவே நடத்துகிறார்கள். அவர்களுக்கு

ஒழுங்கான படிப்பும் கிடையாது, படிப்பதை ஆழ்ந்து படிப்பது கிடையாது. அவர்கள் ஒரு வேலையும் செய்வதில்லை; விஞ்ஞான சாஸ்திரங்கள் என்கிறார்கள், கலைகள் என்கிறார்கள், இவைகளைப்பற்றி அவர்களுக்கு ஒன்றுமே புரிவதில்லை. பார்ப்பதற்கு எல்லோரும் பெரிய சிந்தனையாளராகவே தோன்றுகிறார்கள், முகங்களைக் கடுப்பாக உயரே நிமிர்த்திக்கொண்டுதான் நடமாடுகிறார்கள். எல்லோருடைய பேச்சுக்களும் முக்கியமான விஷயங்களைப்பற்றித்தான், எல்லோரும் தத்துவ விசாரணைபற்றியே பேசுகிறார்கள். ஆயினும் நம்மில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது பேர்கள் காட்டுமிராண்டிகள்போலவே வாழ்கிறோம். யாரேனும் நமக்குக் கொஞ்சம் ஆத்திரமூட்டிவிட்டால், உடனே வஞ்சம் பேசி ஆணைகளிட்டுக்கொண்டு பல்லை உடைத்துவிடுவோம். நம் ஜனங்கள் அருவருக்கத் தகுந்த முறையில் நின்கிறார்கள். ஆபாசக் குப்பைகளின் மேலே படுக்கிறார்கள், அசிங்கமான காற்றோட்டம் இல்லாத அறைகளிலே வசிக்கிறார்கள். எங்குப்பார்த்தாலும் மூட்டைப் பூச்சிகள், துர்நாற்றம், ஈரம்! புறத்திலே இப்படி என்றால் அகத்திலோ அழுக்குமயம். பார்க்கப்போனால், தேன் போல இனிக்கும்படி பேசுகிற பேச்செல்லாம் நம்மையும் மற்றவர்களையும் ஏமாற்றுவதற்குத்தான். சிசு சம்ரட்சணைச் சாலைகள் வேண்டுமென்று பேசினோமே, அவைகள் எங்கே? புத்தக சாலைகளைப் பற்றி முழங்கினோமே, அவைகள் தாம் எங்கே? சிசு சம்ரட்சணைச் சாலைகளையும் நாவல்களில்தான் பார்க்கிறோம்; உண்மையில் இல்லை. அசுத்தமும், அற்பத்தனமுமான இன்பங்களும், காட்டுமிராண்டித்தனமுமே எங்கும் தென்படுகின்றன. சிந்தனை தேங்கிய முகங்களைக் கண்டால் எனக்குப் பயந்தான். அவைகளை நான் விரும்புவதில்லை; தீவிரமான பேச்சுக்களைக் கேட்டாலும் எனக்குப் பயமாயிருக்கிறது. நாம் மௌனமாக இருப்பதே நலம் என்று தோன்றுகிறது.

லொபாகின்: நான் சொல்லுகிற விஷயங்கள் உங்களுக்குத் தெரியுமா என்பதை யோசித்துப் பாருங்கள்; நான் அதிகாலையில் நாலு மணிக்கு எழுந்திருக்கிறேன். காலையிலிருந்து இரவு வரை வேலை செய்து வருகிறேன். சரி, என்னுடைய பணத்தைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. பிறருடைய பணங்கள் சம்பந்தமாகவும் கவனிக்க வேண்டியிருக்கிறது. என்னைச்

சுற்றியுள்ள மனிதர்கள் எப்படியிருக்கிறார்கள் என்ற விஷயத்தை நான் பார்க்கத்தான் செய்கிறேன். ஏதாவது ஒரு வேலையை நாம் தொடங்கினால் போதும்; யோக்கியமான, கண்ணியமான மனிதர்கள் எவ்வளவு குறைவாக இருக்கிறார்கள் என்பது நன்கு விளங்கிவிடும். சில வேளைகளில், தூக்கம் வராதபொழுது, நான் இப்படி யோசிக்கிறதுண்டு: 'ஈசனே, நீ எங்களுக்குப் பெரிய காடுகளைத் தந்திருக்கிறாய், அளக்க முடியாதபடி நிலங்களைத் தந்திருக்கிறாய், கங்கு கரைகாணாத வானவெளிகளைக் கொடுத்திருக்கிறாய். இத்தனைக்கும் மத்தியில் வசிக்கிற நாங்கள் பெரிய பெரிய ராக்ஷசர்களைப் போலல்லவா இருக்க வேண்டும்!...'

ரனவ்ஸ்கி:—ராக்ஷசர்களைப் போலவா இருக்க விரும்புகிறாய்? கட்டுக் கதைகளில்தான் ராக்ஷசர்களைப்பற்றிப் படிப்பதற்கு நன்றாயிருக்கும். ஆனால் உண்மையிலே அவர்கள் வெளியே தோன்றிவிட்டால் ஒரே கோரந்தான்!

எப்பிக்கிடாவ்: (அரங்குக்குப் பின்னால் சாரங்கியை மீட்டிக் கொண்டே நடக்கிறான்.)

ரனவ்ஸ்கி: கவலையுடன் அதோ போகிறான், எப்பிக்கிடாவ்.

அன்னியா: (கவலையுடன்) எப்பிக்கிடாவ் அதோ போகிறானே!

கயேவ்: சூரியன் அஸ்தமித்துவிட்டான்.

டிராவிமாவ்: ஆமாம்.

கயேவ்: (மெல்லிய குரலில் எதையோ அழைப்பது போல) ஆச்சரியமான இயற்கை அன்னையே! நீ நித்தியமான ஜோதியுடன் விளங்குகிறாய்; உன்னிடத்தில் சௌந்தரியம் குடிகொண்டிருக்கிறது, ஆனால் நீ உதாசீனமாய் இருக்கிறாய். உன்னை எல்லோரும் 'தாய்' என்று அழைக்கிறார்கள். உன் கையில் வாழ்வும் சாவும் இணைந்திருக்கின்றன. நீயே உயிரைப்படைக்கிறாய், உயிரை அழிக்கிறாய்.)

வாரியா: (கெஞ்சிக்கொண்டு) போதுமே, மாமா!

அன்னியா: மாமா, மறுபடியும் ஆரம்பித்துவிட்டீர்களே!

டிராவிமாவ்: மஞ்சள் காயை நடுவிலுள்ள பையில் உருட்டி விடுங்கள். அந்தப் பந்தாட்டந்தான் உங்களுக்கு நல்லது!

கயேவ்: நான் பேசவில்லை, வாயை மூடிக்கொள்ளுகிறேன்.

[அனைவரும் சிந்தனையில் ஆழ்ந்து அமர்ந்திருக்கின்றனர். எங்கும் அமைதி. பீர்ஸின் அமைதியான முணுமுணுப்புத்

தான் கேட்கிறது. திடீரென்று தொலையில் 'விண்ணிலிருந்து வருவதுபோல ஓர் ஒலி எழுகிறது. ஏதோ வாத்தியத்தின் தந்தி அறுந்து சோகமாக ஒலிப்பதுபோல் கேட்டது. பிறகு ஓசை ஒடுங்கிவிட்டது.

ரனவஸ்கி: அது என்ன?

லொபாகின்: எனக்குத் தெரியவில்லை. எங்கேயோ வெகு தூரத்தில் சுரங்கத்திலுள்ள ஒரு கழியிலிருந்து தொங்கவிட்டிருக்கிற வாளி அறுந்து விழுந்திருக்க வேண்டும். ஆனால் சமீபத்தில் இருக்கமுடியாது.

கயேவ்; ஒரு பறவையின் குரலாயிருக்கும். நாரையின் குரலோ என்னவோ?

டிராவிமாவ்: செவ்வாந்தையின் குரலாயிருக்கலாம்...

ரனவ்ஸ்கி: (உடம்பில் ஓர் அதிர்ச்சியுடன்) எனக்கு என்னவோ மனவேதனை யுண்டாகிறது! (பேச்சில்லை.)

பீர்ஸ்: கஷ்டங்கள் வருவதற்குமுன் இப்படித்தான் ஏற்பட்டது. ஆந்தை ஓலமிட்டது. அடுப்பிலும் 'பட் பட்' என்று அடிக்கடி ஓசை கேட்டது.

கயேவ்: எந்தக் கஷ்டங்களுக்கு முன்?

பீர்ஸ்: அடிமைகளை விடுதலை செய்தார்களே, அதற்குமுன். (சிறிது சப்தம்.)

ரனவ்ஸ்கி: நீங்கள் எல்லோரும் ஆப்தமானவர்கள் வாருங்கள், நாம் போவோம். இருள் ஆரம்பித்துவிட்டது. (அன்னியாவைப் பார்த்து) உன் கண்களில் என்ன. தண்ணீரா? ... என்ன விஷயம்? ஏன் அம்மா, என் செல்வமே (அவளைத் தழுவிக் கொள்கிருள்.)

அன்னியா: ஒன்றுமில்லை, அம்மா, ஒன்றுமில்லை.

டிராவிமாவ்: யாரோ வருகிறதுபோல இருக்கிறதே! (அங்கியன் ஒருவன் வருகிருன். தலையில் அழுக்குப் பிடித்த வெள்ளைக் குல்லா, மேலே ஓர் அங்கி: ஆசாமி குடிமயக்கத்தில் இருக்கிருன்.)

அங்கியன்: மன்னியுங்கள், இந்த வழியாக ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகலாமா?

கயேவ்: போகலாம், அதோ அந்தப் பாதை வழியாய்ப் போ.

அந்நியன்: உங்களுக்கு மனமார்ந்த வந்தனம். (இருமிக் கொண்டு.) வெளியெல்லாம் எவ்வளவு சோபையோடு விளங்குகிறது, நல்ல காற்று!... (பாடுகிறான்.)

'அண்ணே, அண்ணே, துயருறும் அண்ணே!
அண்ணே, அண்ணே! வால்கா பாயும்
தடமெலாம் தம்பியின் அவலக்குரலே!
அண்ணே, அண்ணே, துயருறும் அண்ணே!'

(வாரியாவைப் பார்த்து) பசித்தோர் முகம் பாருங்களேன், அம்மா, ஒரு செப்புக் காசேனும் கொடுங்களேன்! (வாரியா பயந்து கூச்சலிடுகிறாள்.)

லொபாகின்: (கோபத்துடன்) ஒரு பிச்சைக்காரனுக்கு எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது தெரிய வேண்டாமா?

ரனவ்ஸ்கி: (சற்றுப் பயந்து) இதை எடுத்துக் கொள்ளேன், இந்தா!... (பையில் பணம் இருக்கிறதா என்று தேடுகிறாள்) வெள்ளிக் காசு இல்லையே... உனக்குக் கொடுக்காமலிருக்கக் கூடாது, இந்தா தங்க நாணயம்...

அந்நியன்: உங்களைக் கும்பிடுகிறேன், தாயே. (அவன் போகிறான். எல்லோரும் சிரிக்கின்றனர்.)

வாரியா: (பயந்து) நான் வெளியே போய்விடுகிறேன், வெளியே போய்விடுகிறேன்...என்னம்மா நீங்கள் பண்ணுகிற காரியம்? வீட்டிலுள்ளவர்களுக்குச் சாப்பாட்டுக்கு ஒன்றுமில்லை, அவனுக்கு ஒரு தங்க நாணயத்தைத் தூக்கிக் கொடுத்து விட்டீர்களே!

ரனவ்ஸ்கி: எனக்குப் புத்தியில்லை. என்னை வைத்துக்கொண்டு நீ என்ன பண்ண முடியும்? வீட்டில் இருக்கிறதையெல்லாம் உன்னிடத்தில் ஒப்படைத்து விடுகிறேன். லொபாகின், நீதான் இன்னும் ஒரு தடவை கடன் தரவேண்டும்.

லொபாகின்: காத்துக் கொண்டிருக்கிறேன்.

ரனவ்ஸ்கி: வாருங்கள், நேரமாகி விட்டது. ஏ, வாரியா, நீ வருவதற்குச் சற்று முன்புதான் உன் கல்யாணத்திற்கு நிச்சயம் செய்தோம்; உனக்கு மங்களம் உண்டாக ஆசீர்வதிக்கிறேன்.

வாரியா: (கண்ணீர் வடித்துக்கொண்டே) அம்மா, இந்த விஷயமெல்லாம் வேடிக்கை பண்ணுகிற விஷயமா, அம்மா? 'கன்னி ஓபீலியா கன்னி மாடத்திற்குப் போக வேண்டியது தான்...' (இந்தப் பாட்டைப் பாடுகிறாள்.)

கயேவ்: என்னுடைய கைகள் நடுங்குகின்றன. வெகு நேரமாய் நான் மேஜைமீது பந்தாடவேயில்லே.

லொபாகின்: 'ஓபீலியா! மோகினி, உன்னுடைய தியானத்தில் என் பாவங்களை மறந்துவிடாதே!' (இதைப் பாடுகிறன்)

ரனவ்ஸ்கி: வாருங்கள், இரவு சாப்பாட்டுக்கு நேரமாகி விட்டது!

வாரியா: அந்த மனிதன் என்னைப் பயமுறுத்தி விட்டான். என்னுடைய மார்பு படபடவென்று அடிக்கிறது.

லொபாகின்: சிநேகிதர்களே, ஞாபகமிருக்கட்டும்: ஆகஸ்டு மாதம் இருபத்திரண்டாம் தேதி, இந்தச் செர்ரித்தோட்டம் ஏலம் போடப்படும். அதைப் பற்றி யோசியுங்கள்!... தீர்மானமாக யோசியுங்கள்!... (டிராவிமாவ், அன்னியா இருவரைத் தவிர மற்றவர் அனைவரும் அகன்று விடுகின்றனர்.)

அன்னியா: (சிரித்துக் கொண்டு) அந்த அந்நியன் வாரியாவைப் பயமுறுத்தினது சௌகரியமாய்ப் போய்விட்டது. அவனுக்கு வந்தனம் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் அவள் போகமாட்டாள். நாம் தனியாயிருப்பதற்கு அவகாசம் ஏற்பட்டதே பாக்கியந்தான்.

டிராவிமாவ்: நாம் திடீரென்று ஒருவரை ஒருவர் காதலித்தது பற்றி வாரியாவுக்கும் பிடிக்கவில்லை; நாம் தனியாய் இருப்பதற்கு வெகு நாளாக அவள் விடுவதேயில்லை. அவளுடைய குறுகிய நோக்கத்தில் நாம் இருவரும் சாதாரணமான காதலுக்கு மேலே போய்விட்டோம் என்பதை அவள் உணரவில்லை. அற்ப விஷயங்களிலிருந்தும், மயக்கத்தைத் தருகின்ற விஷயங்களிலிருந்தும் விலகுவதுதான் வாழ்வின் நோக்கம், வாழ்வின் அர்த்தம். அதுதான் நமக்குச் சந்தோஷத்தையும் விடுதலையையும் அளிக்கும். எப்பொழுதும் முன்னேற வேண்டும்! ஏதோ ஒரு லட்சியம், ஒரு நக்ஷத்திரம் போலத் தூரத்தில் ஒளி வீசிக்கொண்டிருக்கிறது. அத்திசையை நோக்கித் தட்டுத் தடங்கலின்றி நாம் போய்க்கொண்டிருக்கிறோம். முன்னேறவேண்டும்! தோழர்களே, தங்கிவிடாதீர்கள்!

அன்னியா: (கைகளைக் கொட்டிக்கொண்டு) எவ்வளவு அழகாய்ப் பேசுகிறீர்கள்! (சற்று மௌனம்) இங்கே காற்று எவ்வளவு அற்புதமாயிருக்கிறது!

டிராவிமாவ்: இன்றைக்குச் சிதோஷ்ண நிலை வெகு சுகமாய் இருக்கிறது.

அன்னியா: இந்தச் செர்ரித் தோட்டத்தை முன்னெல்லாம் எப்படி நேசித்தேன், தெரியுமா? இந்தத் தோட்டத்தைத் தவிர வேறு நேர்த்தியான தோட்டமே இல்லை என்று நினைத்தவள் நான். இப்பொழுது முன்போல நான் இதை நேசிக்கவில்லை. இந்த மாற்றம் உங்களால்தான். நீங்கள் என்னவோ செய்துவிட்டீர்கள்!

டிராவிமாவ்: இந்த ரஷ்ய நாடு முழுதுமே ஒரு தோட்டம். நம் நாடு அகண்டமானது, அழகானது, மகத்தானது. அநேக ஆச்சரியமான இடங்கள் இதில் இருக்கின்றன. (சற்று மௌனம்) இப்பொழுது யோசித்துப் பார்! அன்னியா! உன்னுடைய பாட்டனும், உன் முன்னோர்களும், உன் பாட்டனுக்குப் பாட்டனும், அனைவரும் அடிமைகளை வைத்து நடத்தினார்கள். அடிமைகளை நிலத்தோடு சேர்த்து வாங்கினார்கள். விற்றார்கள்; அதாவது அநேக மனித உயிர்களுக்கு முதலாளிகளாக இருந்தார்கள். இந்தத் தோட்டத்திலுள்ள ஒவ்வொரு செர்ரி மரத்திலிருந்தும், ஒவ்வோர் இலையிலிருந்தும், ஒவ்வோர் அடிமரத்திலிருந்தும் அடிமைகள் எட்டி எட்டிப் பார்ப்பது உன் கண்ணில் படுகிறதா?......அவர்களுடைய குரல்களை நீ கேட்கவில்லையா?......உன்னுடைய தோட்டத்தை நினைக்கும்பொழுது பயங்கரமாயிருக்கிறது. சாயங்காலத்திலோ அல்லது இரவிலோ இந்தத் தோட்டத்திற்குள் நடந்து போகிற சமயத்தில் மரங்களின் பழைய பட்டைகள் மங்கலான காட்சியை அளிக்கின்றன. நூறு வருஷங்களுக்கு முந்தியோ, அல்லது இருநூறு வருஷங்களுக்கு முந்தியோ நிகழ்ந்தவைகளை, அவைகள் தம் உறக்கத்தில் கனவாகப் பார்ப்பதுபோலப் படுகின்றன இருண்ட தோற்றங்கள் தாம் அவைகளுக்கு முன் எழுகின்றன. அதிகம் சொல்லுவானேன்? நாம் வெகு காலம் பின் தங்கிவிட்டோம். குறைந்தது இருநூறு வருஷங்களாவது பின் தங்கிவிட்டோம். இன்னும் எதையும் சாதிக்கவில்லை. தேசத்தின் பழைய சரித்திரத்தைப்பற்றி நமக்குத் தீர்மானமான அபிப்பிராயம் எதுவும் ஏற்படவில்லை. வெறும் வறட்டுத் தத்துவங்களைப் பேசுவதைத் தவிரக் கிரியாம்சத்தில் நம்

மிடம் ஒன்றும் கிடையாது. நாட்டைப்பற்றியும் வீட்டைப் பற்றியும் ஏதோ ஏக்கப்பிடித்து, 'அது சரியில்லை, இது சரியில்லை' என்று பிதற்றுகிறோம்; இல்லாவிட்டால் நம் தேசத்திலுள்ள 'வோதுகை' என்ற மதுவினைக் குடித்து மகிழ்கிறோம். நாம் நிகழ் காலத்தில் உண்மையான வாழ்க்கை நடத்தவேண்டுமானால், முதலில் நமது பழைய சரித்திரத்திலுள்ள குற்றம் குறைகளைக் கண்டுபிடித்துத் தக்க பரிகாரங்கள் செய்யவேண்டும். பரிகாரங்கள் தேடுவது என்பது சாதாரண காரியமில்லை, மகத்தான தியாகத்தினாலும், கஷ்டத்தினாலும், ஓய்வொழிவில்லாத அளவற்ற உழைப்பினாலுமே இது சாத்தியப்படும்: இது தெளிவான விஷயம். இது உனக்குத் தெரிகிறதா, அன்னியா?

அன்னியா: நாம் இப்பொழுது வசிக்கிற வீடு இனிமேல் நம்முடையதில்லை. நிச்சயமாய்ச் சொல்லுகிறேன், நான் இதை விட்டு வெளியே கிளம்பவேண்டியதுதான்.

டிராவிமாவ்: வீட்டுச் சாவிகள் உன்னிடம் இருந்தால் கிணற்றிலே போட்டுவிட்டுப் புறப்பட்டு விடு. காற்றைப்போல நீ கவலையற்றுச் சுதந்தரமாகத் திரிந்துவா!

அன்னியா: (மிகுந்த களிப்புடன்) எவ்வளவு அழகாய்ப் பேசுகிறீர்கள்!

டிராவிமாவ்: அன்னியா, என் வார்த்தையை நம்பு! எனக்கு இன்னும் முப்பது வயதாகவில்லை. நான் இன்னும் கலாசாலையில் வாசித்துக் கொண்டுதான் இருக்கிறேன். ஆயினும் இதற்குள் எத்தனையோ விஷயங்களை நான் பார்த்தாகி விட்டது! பசியாலும், நோய், கவலை முதலிய வேதனைகளாலும், ஒரு பரதேசியைப்போல் நான் மனம்நொந்து திரிந்திருக்கிறேன். நான் போகாத இடமில்லை! வாழ்விலே மிகவும் அடிபட்டிருக்கிறேன்! என் விதி இது. ஆனால் பகலிலும், இரவிலும், எந்தக் கணத்திலும், இன்னவையென்று விவரிக்க முடியாத முறையில் எதிர்கால விஷயங்களைப் பற்றிய நல்ல சூசகங்கள் என் மனத்திலே எழுகின்றன. இனி மட்டற்ற சந்தோஷம் ஏற்படப் போகிறது என்று எனக்குத் தோன்றுகிறது. அன்னியா, இப்பொழுதுகூட அந்த மகிழ்ச்சியை நான் ஓரளவு அனுபவித்து வருகிறேன்.

அன்னியா: (சிந்தனையில் ஆழ்ந்தபடியே) சந்திரன் உதயமாகிறான். (எப்பிக்கிடாவ் சோகரஸமான பழைய பாட்டையே

சாரங்கியில் பாடுவது கேட்கிறது. இலவ மரங்களுக்குப் பக்கத்தில் வாரியா அன்னியாவைத் தேடிக்கொண்டு, 'அன்னியா, எங்கே யிருக்கிறாய்?' என்று கூவுகிறாள்.)

டிராவிமாவ்: ஆமாம், சந்திரன் உதயமாகின்றான். (சற்று மௌனம்) (மகிழ்ச்சி)—அது இதோ இருக்கிறது, அது நம்மை நோக்கிப் பக்கத்தில் வந்துகொண்டே யிருக்கிறது, அதனுடைய காலோசைகூட என் காதில் விழுகிறது. நாம் அதை நேரில் கண்டு அநுபவிக்க வேண்டாமா? நாம் அநுபவிக்காவிட்டாலும் குடி முழுகிப் போகாது. மற்றவர்கள் அநுபவித்தே தீருவார்கள்!

வாரியாவின் குரல்: அன்னியா, எங்கே யிருக்கிறாய்?

டிராவிமாவ்: மறுபடி வாரியர்தான்! (கோபத்துடன்) இந்தச் சனியன் நம்மை விடாது போலிருக்கிறது!

அன்னியா: நாம் ஆற்றங்கரைப் பக்கம் போகவேண்டாமா? அங்கே நேர்த்தியா யிருக்கும்.

டிராவிமாவ்: சரி, நாம் போவோம். (அவர்கள் போகிறார்கள்)

வாரியாவின் குரல்: அன்னியா! அன்னியா!

(திரை விழுகிறது)

மூன்றாவது அங்கம்

[வீட்டுக் கூடத்தினருகே சம்பாஷணை அறை. பல மெழுகு வர்த்திகளுள்ள விளக்குகள் ஏற்றி வைக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது அங்கத்தில் குறிப்பிடப்பட்ட யூதர் பாட்டுக்கச்சேரி கூடத்தின் முகப்பில் நடந்துகொண்டிருக்கிறது. மாலை வேளை. கூடத்தில் எல்லோரும் நடனம் செய்கின்றனர். 'நடனமாடுபவர்கள் ஜோடி சேர்ந்து வரலாம்' என்று சிமியனுவின் குரல் ஒலிக்கிறது: முதலாவதாக, சிமியனுவும் சார்லட்டாவும் வருகின்றனர்; இரண்டாவதாக, டிராவிமாவும் ரனவ்ஸ்கியும்; மூன்றாவதாக, அன்னியாவும் தபால் காரியாலயக் குமாஸ்தாவும்; நாலாவதாக, வாரியாவும் ஸ்டேஷன் மாஸ்டரும்; இப்படி ஜோடி ஜோடியாக அறைக்குள் வருகின்றனர். வாரியா மெதுவாக அழுதுகொண்டு, நடனமாடும்பொழுதே கண்ணீர்த் துளிகளைத் துடைத்துக் கொள்ளுகிறாள். கடைசி ஜோடியில் துன்னியாஷா இருக்கிறாள். சம்பாஷணை அறையில் அவர்கள் சுற்றித் திரிகின்றனர். சிமியனுவ் என்ன நடனங்கள் ஆட வேண்டுமென்பதைக் கூவுகிறான்.]

[பிரிஸ் நீளமான சட்டையை அணிந்துகொண்டு வருகிறான். கையில் ஒரு தட்டில் சோடா கிளாஸ்கள் வைத்திருக்கிறான். சிமியனுவும் டிராவிமாவும் சம்பாஷணை அறைக்கு வருகிறார்கள்.]

சிமியனுவ்: நான் திடகாத்திரம் உள்ளவன்தான். ஆயினும் இரண்டு நடனங்களுக்குமேல் ஆட முடியவில்லை. நடனம் சிரமமாகத்தான் இருக்கிறது. ஆனால், 'நாய் வேஷம் போட்டால் குலைத்துத்தானே தீரவேண்டும்' என்று பழமொழி ஒன்று உண்டல்லவா? அப்படிக் குலைக்க முடியாது போனாலும் வாலையாவது ஆட்ட வேண்டும். நான் ஒரு குதிரைக்கு நிகரான பலமுள்ளவன். குதிரை என்றதும் எனக்கு ஒரு பழைய விஷயம் ஞாபகத்திற்கு வருகிறது. காலஞ்சென்ற என் தகப்பனார் ஒரு வேடிக்கையான மனிதர். எப்பொழுதும் கேலியும் விளையாட்டுமாகப் பேசுவார். எங்களுடைய வம்ச ஆரம்பத்தைப்பற்றி அவர் சொன்ன கதை இதுதான்: "நாமெல்லாம் எங்கிருந்து வந்தோம் தெரியுமா? கலிகுலா

என்ற நம் முன்னோர் ஒருவர் ஒரு குதிரையைச் சட்டசபை அங்கத்தினராக்கி அனுப்பினார். அக் குதிரையின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள் நாம்...'(கீழே உட்காருகிறான்.) வம்சம் பெரிய வம்சம்தான், ஆனால் சங்கடம் இதுதான்: கையில் காசு கிடையாது! பசியுள்ள நாய், உணவைத் தவிர வேறு எதையும் நினைக்காது ... (அயர்ந்து ஒரு குறட்டைவிட்டு, உடனேயே விழித்துக் கொள்கிறான்.) அதுதான் என் விஷயத்திலும்...பணத்தைத் தவிர வேறொன்றிலும் எனக்கு நினைவில்லை...

டிராவிமாவ்: குதிரையின் குணம் கொஞ்சம் உன்னிடத்தில் இருக்கத்தான் செய்கிறது, ஆளைப் பார்த்தாலே அது தெரியும்.

சிமியனாவ்: நல்லது...குதிரை என்றால் அது சாதாரணமா? குதிரை யிருந்தால் பணம் கிடைக்குமே!

(அடுத்த அறையில் மேஜைமீது பந்து விளையாடும் சத்தம் கேட்கிறது. கூடத்தின் வளைவுக்குக் கீழே வாரியா தோன்றுகிறாள்.)

டிராவிமாவ்: (கேலியாக) ஸ்ரீமதி லொபாகின் வருகிறாள்! அம்மா, ஸ்ரீமதி லொபாகின்!

வாரியா: (கோபமாய்) என்ன, செல்வமில்லாத சீமானே!

டிராவிமாவ்: செல்வமில்லாத சீமானாக இருந்தால் என்ன முழுகிப்போய்விட்டது? அதுவே எனக்குப் பெருமைதான்.

வாரியா: (மனங் கசந்து சிந்திக்கிறாள்.) பாட்டுக்காரர்களை வரவழைத்தாய்விட்டது, அவர்களுக்குக் கொடுக்கப் பணத்திற்கு எங்கே போகிறது? (போகிறாள்.)

டிராவிமாவ்: (சிமியனாவைப் பார்த்து) உன் சக்தியையெல்லாம் விழலுக்கு இறைத்துவிட்டாய். அடைமானக் கடன்களுக்கு வட்டி செலுத்தப் பணம் தேடுவதிலேயே உன் வாழ்க்கையெல்லாம் கழிந்து போய்விட்டது — இந்தச் சக்தி முழுதும் வேறு நல்ல துறையில் சென்றிருந்தால் உலகத்தையே புரட்டித் தள்ளியிருக்க முடியும்.

சிமியனாவ்: நீட்சேயைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயல்லவா? ...தத்துவ ஞானி... நிகரற்ற அறிவாளி, மிகப் பிரசித்தி பெற்றவர், ஆச்சரியப்படத்தக்க ஞானத்தை உடையவர்...

அவர் தம்முடைய கிரந்தங்களில் என்ன சொல்லுகிருர், தெரியுமா? ஒருவன் கள்ள நாணயங்கள்கூடத் தயாரிக்கலாம் என்று சொல்லுகிருர்.

டிராவிமாவ்: நீட்சேயின் நூல்களை வாசித்திருக்கிருயா?

சிமியனுவ்: வாசித்ததாக நினைவில்லை...என்னுடைய தஷெங்கா சொல்லியிருக்கிருள். நான் கள்ள நாணயம் தயாரித்தால் தான் பிழைக்கமுடியும். நாளைக்கு மறுநாள் நான் 310 ரூபிள் செலுத்தவேண்டும்......எப்படியோ 130 ரூபிள் சேர்த்து விட்டேன்......(திடுக்கிட்டுச் சட்டைப் பைகளைத் தடவிப் பார்க்கிருன்.) ஐயோ பணத்தைக் காணவில்லையே! தொலைந்துவிட்டதா? (கண்ணீர் பெருக்கி) எங்கே வைத்து விட்டேன்?.........(மீண்டும் சந்தோஷத்துடன்) இங்கேயிருக்கிறது, உட்பையில்!...காணவில்லை என்றதும் எனக்கு வியர்த்து விருவிருத்துப் போய்விட்டது!......

(ரனவ்ஸ்கியும் சார்லட்டாவும் பிரவேசிக்கிருர்கள்.)

ரனவ்ஸ்கி: (ஒரு பாட்டை வாய்க்குள் பாடிக்கொண்டு) கயேவ் வருவதற்கு ஏன் இவ்வளவு நேரம்? பட்டணத்தில் என்ன செய்துகொண்டிருக்கிருன்? துன்னியாஷா, இந்தப் பாடகர்களுக்குத் தேநீர் கொடு.

டிராவிமாவ்: ஏலம் நடைபெறவில்லை என்று தோன்றுகிறது.

ரனவ்ஸ்கி: பாடகர்களுக்கும் பாட்டுக்கும் இதுதானு சமயம்? கச்சேரிக்கு நல்லசமயம் பார்த்துத்தான் ஏற்பாடுசெய்தோம்! ...நல்லது, பரவாயில்லை......(கீழே உட்கார்ந்துகொண்டு மெதுவாக வாய்க்குள் பாட்டை முனகுகிருள்.)

சார்லட்டா: (சிமியனுவிடம் சீட்டுக் கட்டைக் கொடுத்து) இதோ இருக்கிறது சீட்டுக் கட்டு, ஏதாவது ஒரு சீட்டை மனதிலே நினைத்துக்கொள்ளுங்கள்.

சிமியனுவ்; நினைத்துக்கொண்டுவிட்டேன்.

சார்லட்டா: சீட்டுகளைக் கலையுங்கள். நல்லது, அவைகளை என்னிடம் கொடுத்துவிடுங்கள். ஒன்று, இரண்டு, மூன்று! இப்பொழுது உங்கள் சட்டைப்பையில் அந்தச் சீட்டு இருக்கிறது.

சிமியனுவ்: (பையிலிருந்து சீட்டை எடுக்கிருன்.) இஸ்பெட் எட்டு! இதே சீட்டுதான்! (ஆச்சரியத்துடன்) இதை எப்படிக் கண்டுபிடிக்க முடிந்தது!

சார்லட்டா: (உள்ளங்கையில் சீட்டுகளை அடுக்கி வைத்துக் கொண்டு, டிராவிமாவைப் பார்த்து) மேலாக முதலில் இருக்கும் சீட்டு என்ன? சட்டென்று சொல்லுங்கள்!

டிராவிமாவ்: எதற்காக? சரி — இஸ்பெட் ராணி!

சார்லட்டா: அதுதான்? (சிமியனுவைப் பார்த்து) முதல் சீட்டு என்ன?

சிமியனுவ்: ஆடுதன் ஆஸ்!

சார்லட்டா: அதுதானே?...(உள்ளங்கைமேல் மற்றக் கையால் ஒரு தட்டுத் தட்டுகிருள். சீட்டுக்கட்டு மாயமாய் மறைந்து விடுகிறது.) இன்றைக்கு வெளியிலே நல்ல காற்று, ஜில் லென்று இருக்கிறது!

(எங்கிருந்து வருகிறதென்று தெரியாத ஒரு பெண்ணின் குரல் தரையிலிருந்து பதில் சொல்வதுபோல் கேட்கிறது.)

ஆமாம், வெளியிலே மிகவும் அழகாய்த்தான் இருக் கிறது, அம்மா! நீங்கள் தாம் எனக்கு லட்சியம்......(குரல் மறுபடியும் பேசுகிறது: (சீமாட்டி! உனக்காக அப்படியே என் உள்ளத்தைப் பறிகொடுத்தேன்!')

ஸ்டேஷன் மாஸ்டர்: (கரகோஷம் செய்து) சபாஷ்! நீ பலே கெட்டிக்காரி! இரண்டு குரல்களில் பேசியதும் நீதான்!

சிமியனுவ்; (ஆச்சரியத்துடன்) எவ்வளவு அற்புதம்! சார்லட்டா, உன்னை என்னவென்று சொல்வது?...உன்மேல் எனக்குக் காதலே பொங்கிவிட்டது.

சார்லட்டா: என்னைக் காதலிக்கிறீர்களா? (தோள்களைக் குலுக்கிக்கொண்டு) உங்களால் காதலிக்கவும் முடியுமா? காசுக்கு எத்தனை படி காதல் என்று தேடுகிறவர்களுக்குக் காதலைப்பற்றி என்ன தெரியும்?

டிராவிமாவ்; (சிமியனுவ் தோளைத் தட்டிக்கொடுத்து) நீ குதிரை என்பதில் சந்தேகமில்லை......

சார்லட்டா: தயவுசெய்து கவனியுங்கள்! இன்னும் ஒரு ஜால வித்தை! (நாற்காலியிலிருந்து ஒரு கம்பளத்தை எடுக்கிருள்.) இதோ ஒரு நேர்த்தியான கம்பளம் இருக்கிறது, இதை நான் விற்கப்போகிறேன்...(அதை ஆட்டிக் காட்டுகிருள்.) யாருக்கு வேண்டும்?

சிமியனுவ்: (ஆச்சரியத்துடன்) அப்படியா?

சார்லட்டா: ஒரு தரம், இரண்டு தரம், மூன்றுதரம்!

ரனவ்ஸ்கி: சபாஷ்! சபாஷ்!...

சார்லட்டா: இதுதான் கடைசி ஆட்டம்! ஒன்று, இரண்டு, மூன்று! (அவள் மறுபடி கம்பளத்தை உயரே தூக்குகிறாள்; கம்பளத்திற்குப் பின்னால் வாரியா நின்று தலை வணங்குகிறாள்.)

சிமியனுவ்: (ஆச்சரியத்துடன்) இதென்ன ஆச்சரியம்!...

சார்லட்டா: ஜால வித்தை முடிந்தது! (அவள் சிமியனுவ் மீது கம்பளியை எறிந்துவிட்டு, வணக்கம் செய்துகொண்டே கூடத்திற்கு ஓடுகிறாள்.)

சிமியனுவ்; (அவளைத் தொடர்ந்துகொண்டே) அடி, போக்கிரி மூளி! அடி, போக்கிரி! (போகிறான்.)

ரனவ்ஸ்கி: இன்னும் கயேவ் வரவில்லையே! பட்டணத்தில் இன்னும் என்னதான் செய்துகொண்டிருக்கிறான்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே! போன காரியம் முடிந்திருக்க வேண்டும், நிலம் விற்பனையாகி யிருக்கவேண்டும், இல்லாவிடின் ஏலமே நடந்திருக்காது — இத்தனை நாழிகை கிணற்றிலே கல்லைப் போட்டதுபோல இருந்தால், என்ன செய்கிறது? நமக்கு ஒன்றுமே புலப்படவில்லை!

வாரியா: (அவளுக்கு ஆறுதல் சொல்ல முயலுகிறாள்.) நிச்சயமாய்ச் சொல்லுகிறேன், நம்முடைய மாமா அதைத் தாமே வாங்கியிருக்கவேண்டும்.

டிராவிமாவ்: (வெறுப்புடன்) அப்படித்தான் இருக்கும், சரிதான்!

வாரியா: அத்தைப்பாட்டி கடன்களைத் தானே ஏற்றுக்கொண்டு தன் பெயரிலேயே நிலத்தை வாங்க மாமாவுக்கு அதிகாரப் பத்திரம் அனுப்பியிருந்தாள். ஆபத்துக் காலத்தில் அன்னியாவை விட்டுக்கொடுத்து விடுவாளா பாட்டி! பகவான் நமக்கு உதவி செய்வார், மாமாவும் சொத்தை வாங்கிவிடுவார்.

ரனவ்ஸ்கி: யாரோஸ்லாவிலிருந்து தன் பெயரால் சொத்து வாங்கப் பதினையாயிரம் ரூபிள் அனுப்பினாள் பாட்டி— நம்மை அவள் நம்பவில்லை—அந்தப் பணம் வட்டிக்குக் கூடக் காணாது. (தன் முகத்தைக் கைகளினால் மூடிக்கொள்ளுகிறாள்.) இன்றைக்குத் தெரியப்போகிறது என் அதிர்ஷ்டம்......

டிராவிமாவ்: (வாரியாவைக் கேலி செய்து) என்ன, ஸ்ரீமதி லொபாகின் அம்மாள்!

வாரியா: (கோபமாய்) இரண்டு தடவை சர்வகலாசாலையி லிருந்து உன்னை விரட்டியடித்துவிட்டார்கள்! பி. ஏ. வகுப் பிலேயே சத வருஷமாய்ப் படித்துக்கொண் டிருக்கிறாயே! அது போதாதா? என்னை வேறு கேலி பண்ண வந்து விட்டாயே!

ரனவ்ஸ்கி: வாரியா, ஏன் அம்மா கோபித்துக்கொள்ளுகிறாய்? லொபாகின் என்று சொல்லி அவன் கேலி பண்ணினால் என்ன? லொபாகின் நல்லவன், நேர்த்தியான மனிதன், அவனை நீ கல்யாணம் செய்துகொள்ள விரும்பினால், தாராள மாய்ச் செய்துகொள்ளலாம். இஷ்டமில்லாது போனால், வேண்டாம்—உன்னை ஒருவரும் கட்டாயப்படுத்தப் போகிற தில்லை, என் தங்கமே!...

வாரியா: இது விளையாட்டான சமாசாரமில்லை, அம்மா—உங்க ளிடம் ஒளிப்பானேன்? அவர் நல்லவர்தான், எனக்கும் அவ ரிடம் பிரியந்தான்.

ரனவ்ஸ்கி: அப்படியானால், கல்யாணம் செய்துகொள்ளேன். தாமதிப்பதனால் என்ன நன்மை? எனக்கு ஒன்றும் விளங்க வில்லை!

வாரியா: ஆனால், அம்மா, நானேபோய் என்னைக் கல்யாணம் செய்துகொள்ளும்படி கேட்கிறதா? இரண்டு வருஷ கால மாக ஒவ்வொருவரும் அவரைப்பற்றியே என்னிடம் பேசு கின்றனர். ஒருவர் பாக்கியில்லை. ஆனால் அவரோ ஒரு வார்த்தைகூடச் சொல்லாமல் மௌனமா யிருக்கிறார், இல்லாவிட்டால் சிரித்து மழுப்பிவிடுகிறார். எனக்கு இப் பொழுது தெரிகிறது: அவருக்குச் செல்வம் அதிகரித்துக் கொண்டே வருகிறது, தம் வேலையிலேயே ஆழ்ந்து கிடக் கிறார். என்னைப்பற்றி நினைப்பதற்குக்கூட அவருக்கு நேர மில்லை. என் கையில் கொஞ்சமாவது பணம் இருந்தால், நூறு ரூபிள் இருந்தாலும் போதும்—நான் எல்லாவற்றை யும் விட்டுவிட்டுத் தூர தேசம் போய் ஒரு கன்னியா மடத் தில் சேர்ந்துவிடுவேன்.

டிராவிமாவ்: ஆஹா, அழகான பேச்சு!

வாரியா: (டிராவிமாவைப் பார்த்து) படிக்கிற பையனுக்குத் தெரியவேண்டாமா? (கண்ணீர் ததும்ப, அமைதியான குர

வில்) வரவர உனக்கு மட்டித்தனமே அதிகரித்திருக்கிறது! ஆளும் கிழடுதட்டிப் போனாய் (அழுகையை நிறுத்தி, ரனவ்ஸ்கியைப் பார்த்து) சும்மா உட்கார்ந்து கொண்டிருக்க மட்டும் முடிகிறதில்லை, அம்மா! ஒவ்வொரு நிமிஷமும் ஏதாவது காரியம் செய்துகொண்டேயிருந்தால்தான் எனக்குப் பாந்தமாயிருக்கிறது.

[யாஷா வருகிருன்]

யாஷா: (சிரிப்பை அடக்க முடியாமல்) மேஜைப் பந்தடிக்கும் கோலை எப்பிக்கிடோவ் உடைத்து விட்டான், அது சுக்கு நூருகப் போய்விட்டது!... (வெளியே போகிருன்.)

வாரியா: எப்பிக்கிடோவுக்கு அங்கே என்ன வேலை? அவனைப் பந்தடிக்க யார் போகச் சொன்னது? இந்த ஜனங்கள் பண்ணுகிற காரியங்கள் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை! (போகிருள்.)

ரனவ்ஸ்கி: டிராவிமாவ், அவளைக் கேலி, கிண்டல் செய்யாதே. ஏற்கனவே அவள் மனதைப் புண்படுத்திக் கொண்டிருப்பது பார்த்தால் தெரியவில்லையா? அதோடு நீயும் கிண்டல் செய்ய வேண்டுமா?

டிராவிமாவ்: அவள் தனக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களில் தலையிட்டுப் பொருமைப்படுகிருள். இந்தக் கோடைக் காலம் முழுவதும் அன்னியாவும் நானும் தனித்திருக்க அவள் விடவேயில்லை, நாங்கள் காதல் கொண்டுவிடப் போகிறோம் என்று அவள் பயந்து நடுங்குகிருள். இது அவளுடைய அலுவலா? இது அவளுடைய வேலையா? மேலும் நான் காதல் சம்பந்தமாக ஓர் அறிகுறியும் காட்டவில்லை. அதைப் பற்றிய எண்ணமே எனக்குக் கிடையாதே! அது அற்ப விஷயமென்று இதுவரை அதைவிட்டு ஒதுங்கியே இருக்கிறேன். அதற்கு மேற்பட்ட விஷயங்களில் அல்லவா நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம்!

ரனவ்ஸ்கி: நீ காதலுக்கு மேலே போய்விட்டால், நான் அதிலேயே முழுகிவிட்டேன், அப்பா! (பரபரப்புடன்) கயேவ் ஏன் இன்னும் வரவில்லை? சொத்து விற்கப்பட்டதா, இல்லையா என்பது மட்டும் தெரிந்தால் போதும். இந்த மாதிரி விபத்து வருமென்று கொஞ்சங்கூட நம்ப முடியவில்லையே! ஒரு யோசனையும் புலப்படவில்லை. தலை சுழலுகிறது, மூளையும் கலங்கிவிடும்போல் இருக்கிறது. இப்

பொழுது அழுது அலற வேண்டுமென்று தோன்றுகிறது. உள்ளத்திலே இருக்கிற வேதனையில், இப்பொழுது எதை வேண்டுமானாலும் செய்யத் துணிந்துவிடலாம் போலிருக்கிறது. செய்தால், அசட்டுப் பட்டத்தை நான்தான் கட்டிக் கொள்ள வேண்டும்! டிராவிமாவ், நீதான் எனக்கு மன ஆறுதல் அளிக்கவேண்டும். ஏதாவது நல்ல விஷயமாய்ப் பேசு...

டிராவிமாவ்: சொத்து விற்கப்பட்டதோ இல்லையோ — அதுவா இப்பொழுது முக்கியமான விஷயம்? சொத்து நம் கையிலிருந்து போய் வெகு நாளாகிவிட்டது; கைகடந்து போன விஷயத்தைப்பற்றித் திரும்பிப் பார்ப்பதில் பயனில்லை. தப்புகிற வழியும் அடியோடு அழிந்து போய்விட்டது. நீங்கள் மனத்தைச் சமாதானம் செய்துகொண்டு அமைதியாயிருங்கள். ஒருவர் தம்மைத் தாமே ஏமாற்றிக்கொள்ளக்கூடாது. ஒருவர் தம் வாழ்நாள் முழுவதிலும் ஒரு முறையாவது உண்மையை நேரே நிமிர்ந்து பார்த்து உணரவேண்டும். போலிகளையே நம்பிக்கொண்டிருப்பது வீணான காரியம்.

ரனவ்ஸ்கி: என்ன உண்மை? உண்மை எங்கே யிருக்கிறது என்பதும், பொய் எங்கே யிருக்கிறது என்பதும் உனக்குப் புலப்படுகிறது. நான் கண்ணை இழந்தவள்போல இருக்கிறேன். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. முக்கியமான பிரச்னைகளை யெல்லாம் நீ தைரியமாய்ப் பரிசீலனை செய்து தீர்த்து விடுகிறாய். நீ வாலிபன். வாழ்க்கைச் சிக்கலில் உழன்றவனில்லை; நீ வாயால் பேசித் தீர்க்கும் பிரச்னைகளில் ஒன்றையாவது வாழ்வில் அனுபவித்துப்பார்த்ததில்லை. மிகுந்த தைரியத்துடன் நீ எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கிறாய், பேசுகிறாய். இதற்குக் காரணம் என்ன? பயங்கரமான விஷயம் எதுவும் நேருமென்று நீ எதிர்பார்ப்பதில்லை. அப்படி எதுவும் உன் கண்ணில் படுவதுமில்லை. இளமைப் பருவத்தில் இருக்கும் உன் கண்களுக்கு இன்னும் புலப்படாத முறையில் வாழ்க்கை மறைந்துகொண்டு நிற்கிறது. எங்களைப் பார்க்கிலும் நீ அதிகத் தைரியமாய் இருக்கிறாய்; அதிக உண்மையுள்ளவனாக இருக்கிறாய். எங்களைவிட அதிகமாக ஆழ்ந்து சிந்திக்கிறாய்; ஆயினும், கொஞ்சம் தாராள சிந்தையுடன் என் உணர்ச்சிகளுக்கும் கௌரவம் கொடுத்து, என் நிலைமையையும் நீ உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியம். நான் பிறந்தது இந்த இடத்திலே -

தான்; இங்கேதான் என் தகப்பனாரும், தாயாரும் பாட்டனாரும் வாழ்ந்து வந்தனர். இந்த வீட்டினிடம் எனக்கு அளவில்லாத பிரியம். இந்தச் செர்ரித் தோட்டம் எனக்கு இல்லாது போனால் எனக்கு உயிர்போன மாதிரிதான்; இதை விற்றுத்தான் தீரவேண்டுமென்றிருந்தால், என்னையும் இதோடு சேர்த்து விற்றுவிடுங்கள்... (டிராவிமாவைத் தழுவிக்கொண்டு நெற்றியில் முத்தமிடுகிறாள்.) இங்கேதான் என் குழந்தையும் முழுகிப்போய்விட்டது!...(அழுகிறாள்.) நீ என் அன்புள்ள நண்பன், நீதான் எனக்கு இரக்கம் காட்ட வேண்டும்.

டிராவிமாவ்: உங்களிடத்தில் எனக்கு மனப்பூர்வமான அநுதாபம் உண்டு என்பது உங்களுக்கே தெரியும்.

ரனவ்ஸ்கி: நீ சொல்வது சரிதான், ஆனால் அதை வேறு விதமாய்ச் சொல்லியிருக்க வேண்டும்... (கைக்குட்டையை எடுக்கிறாள்: அதிலிருந்து ஒரு தந்தி தரையில் விழுகிறது.)

இன்றைக்கு என்னமோ என் மனம் வேதனைப்பட்டுத் துடிக்கிறது. உனக்குத் தெரியுமா அது? இங்கே தாங்கமுடியாத சத்தமும் கூச்சலுமாயிருக்கிறது. ஏதேனும் சத்தத்தைக் கேட்டால் என் ஆத்மாவே நடுங்குகிறது, ஓரே நடுக்கமாய்த்தான் இருக்கிறது. தனியாக என் அறைக்குள் போவதற்குத் தைரியமில்லை. பேச்சரவம் இல்லாத இடத்திற்குப் போவதற்கே பயமா யிருக்கிறது......டிராவிமாவ், என்னை வெறுக்காதே......உன்னை என்னுடைய பந்துக்களில் ஒருவனாகவே மதித்திருக்கிறேன். அன்னியாவை நீயே கல்யாணம் செய்துகொள்வதில் எனக்குச் சந்தோஷந்தான். இது உண்மையான வார்த்தை. ஆனால், நீ படிக்கவேண்டும், சீக்கிரத்தில் பரீட்சை தேறிப் பட்டம் வாங்க வேண்டும். ஆனல் நீயோ ஒன்றும் செய்கிறதில்லை, விதி உன்னை அங்குமிங்கும் அலைத்து உருக்குலைக்கிறது; இது விபரீதமாயிருக்கிறது......இல்லையா? நீதான் சொல்லேன்! தவிரவும், நம் நாட்டுக் கனவான்களைப்போல் நீயும் அழகான தாடி வளர்க்க வேண்டும். (சிரித்துக்கொண்டு) நீ விசித்திரமான பையன்தான், சந்தேகமில்லை!

டிராவிமாவ்: (தந்தியை எடுத்துக்கொண்டு) தாடி வளர்த்துப் பெரிய மனிதன் என்று படாடோபம் பண்ணுவதற்கு எனக்கு இஷ்டமில்லை.

ரனவ்ஸ்கி: அந்தத் தந்தி பாரிஸ் நகரத்திலிருந்து வந்தது. ஒவ்வொரு நாளும் தந்தி வந்த வண்ணமாய்த்தான் இருக்கிறது. நேற்றும் வந்தது. இன்றும் வந்திருக்கிறது. தலைகால் தெரியாமல் திரிந்த அந்த மனிதன் மறுபடியும் வியாதியில் படுத்துவிட்டான்; சங்கடத்தில் மாட்டிக்கொண்டு விட்டான்......என்னுடைய மன்னிப்பைக் கேட்கிறான். என்னை அங்கே வரும்படி கெஞ்சுகிறான். நான் பாரிஸுக்குப் போய் அவன் பக்கத்தில் இருக்கவேண்டும். டிராவிமாவ், என்னவோ கடுமையாய்ப் பார்க்கிறாயே! நான் என்ன பண்ண முடியும்? நான் வேறு என்னதான் செய்ய முடியும்? அவனுக்கு வியாதி. ஆதரவற்றுத் தனியே அல்லற் படுகிறான். அவனைக் கவனிக்கிறது யார்? மேற்கொண்டு கோளாறுகள் ஏற்படாமல் அவனை யார் காப்பாற்றுகிறது? சரியாக நேரம் பார்த்து யார் மருந்து கொடுக்கிறது? இந்த விஷயத்தில் ஒளிவு மறைவென்ன? இதைப் பற்றிப் பேசாமல் இருப்பானேன்? நான் அவனை நேசிக்கிறேன், உண்மையில் அவனை நேசிக்கிறேன்......இந்தக் காதல் என் கழுத்தில் கல்லைக் கட்டினமாதிரிதான்? அது என்னை அதோகதியில் ஆழ்த்திவிடுகிறது. ஆயினும் அந்தக் கல்லை நான் விரும்புகிறேன். அது இல்லாமல் நான் வாழவும் முடியாது. (டிராவிமாவின் கையைப் பிடித்துக்கொண்டு) என்னைப்பற்றிக் கொடுமையாய் ஒன்றும் நினைக்காதே. ஒன்றும் சொல்லாதே, ஒன்றும் சொல்லாதே......

டிராவிமாவ்: (கண்ணீர் விட்டுக்கொண்டு) என்னை நீங்கள் மன்னித்துவிடுங்கள்: நான் பச்சையாய்ச் சொல்லுகிறேனே என்று நினைக்காதீர்கள்—அந்தப் பாவி உங்கள் பணத்தையெல்லாம் கறந்து விட்டானே!

ரனவ்ஸ்கி: இல்லை, இல்லை, அதெல்லாம் இல்லை, அப்படியெல்லாம் சொல்லாதே!......(காதுகளைப் பொத்திக் கொள்கிறாள்.)

டிராவிமாவ்: அவன் ஒரு போக்கிரி. அது உங்களுக்குத்தான் தெரியவில்லை! அவன் ஓர் அசல் போக்கிரி, வெறும் அநாமதேயப் பேர்வழி......

ரனவ்ஸ்கி: (கோபத்தை ஒரு விதமாக அடக்கிக்கொண்டு) உனக்கு இருபத்தாறு அல்லது இருபத்தேழு வயதாகிறது, நீ இன்னும் பள்ளிப் பையனாகவே இருக்கிறாய்.

டிராவிமாவ்: சரிதான், மேலே சொல்லுங்கள்!

ரனவ்ஸ்கி: இந்த வயதுக்குள் நீ பெரிய மனிதனுயிருக்க வேண்டும்; உன்னுடைய வயதில் காதல் கொள்ளுகிறவர்களின் மனப்பான்மையை உணரக் கூடிய சக்தி யிருக்கவேண்டும். நீயே காதல் கொள்ளவேண்டும்!... காதலிக்காமல் முடியாது! (கோபமாய்) என்னவோ ஒழுக்கம், பரிசுத்தம் என்கிருய், உன்னிடத்தில் ஒழுக்கமில்லை, சுத்தமில்லை, ஏதோ எச்சரிக்கையாக நடமாடுகிருய்—அவ்வளவுதான்—நீ ஓர் அசாதாரணப் பிறவி, மனிதத் தன்மையில்லாத ஒரு பயங்கரப் பிராணி!...

டிராவிமாவ்: (தூக்கிவாரிப் போடுகிற நிலையில்) என்ன பிதற்றுகிருள் இவள்?

ரனவ்ஸ்கி: 'நான் காதலுக்கு மேலே போய்விட்டேன்!' என்ருயே. அது வீண் பேச்சு. உனக்குக் காதல் போய் விட்டதோ? எங்களுடைய வேலைக்காரன் பீர்ஸ் சொல்வது போல நீ ஒரு முட்டாள். உன்னுடைய வயதில் ஒரு வைப் பாட்டி யில்லாமல் இருக்கலாமா?...

டிராவிமாவ்: (திடுக்கிட்டு) பயங்கரமான விஷயமா யிருக்கிறதே! இவள் என்ன சொல்லுகிருள்? (தலையைக் கைகளால் பிடித்துக்கொண்டு கூடத்திற்கு விரைவாய்ப் போகிருன்.) இது மிகவும் பயங்கரமான விஷயம்!... ஒரு நிமிஷங்கூட இங்கே இருக்க முடியாது. நான் தொலைந்து போகிறேன்... (வெளியிலே போய், உடனே திரும்பிவிடுகிருன்.) உங்களுக்கும் எனக்குமுள்ள உறவெல்லாம் இதோடு சரி! (கூடத்தின் வாயிலை நோக்கிப் போய்விடுகிருன்.)

ரனவ்ஸ்கி: (அவன் போகிறபொழுது கத்துகிருள்.) டிராவிமாவ் போகாதே, அப்பா! நான் விளையாட்டுக்காகவே அப்படியெல்லாம் சொன்னேன்! டிராவிமாவ்!

(கூடத்தில் யாரோ மாடிப்படியில் ஏறுகிற சத்தம் கேட்கிறது. உடனே தொப்பென்று விழுகிற ஒலியும் வருகிறது. அன்னியாவும், வாரியாவும் கத்துகிருர்கள். உடனே சிரிக்கும் ஒலியும் கேட்கிறது.)

ரனவ்ஸ்கி: என்ன நடந்தது? (அன்னியா ஓடிவருகிருள்.)

அன்னியா: (சிரித்துக்கொண்டு) டிராவிமாவ் மாடிப்படியிலிருந்து கீழே விழுந்துவிட்டார். (ஓடுகிருள்.)

ரனவ்ஸ்கி: இவ்ன் ஒரு வேடிக்கையான பேர்வழிதான்!

[ஸ்டேஷன் மாஸ்டர் கூடத்து மத்தியில் நிற்கிறார். அலெக்ஸி டால்ஸ்டாய் எழுதிய 'பாவம் புரிந்தவள்' என்ற பாட்டைப் பாடுகிறார். மற்றவர்கள் அவர் பாடுவதைக் கேட்கிறார்கள். அவர் சில அடிகளைப் பாடியதும், கூடத்தில் நடனத்திற்காக வாத்தியங்கள் முழங்குகின்றன. அவருடைய பாட்டு நின்றுவிடுகிறது. எல்லோரும் நடனம் செய்கிறார்கள். கூடத்து முகப்பிலிருந்து டிராவிமாவ், அன்னியா, வாரியா, ரனவ்ஸ்கி எல்லோரும் வருகிறார்கள்.]

ரனவ்ஸ்கி: டிராவிமாவ்...நீ கள்ளம் கபடில்லாதவன்...நான் சொன்னேன் என்று வருத்தப்படாதே...மன்னிக்கவேண்டும்... நீயும் நானும் சேர்ந்து நடனம் செய்வோம், வா! (டிராவிமாவுடன் கைகோத்து நடனமாடுகிறாள்.)

[அன்னியாவும், வாரியாவும் நடனமாடுகிறார்கள். பீர்ஸ் வந்து தன் தடிக்கம்பைக் கதவுப் பக்கத்தில் வைக்கிறான். யாஷாவும் சம்பாஷணை அறையிலிருந்து வந்து, நடனத்தைக் கவனிக்கிறான்.]

யாஷா: என்ன கிழவனாரே!

பீர்ஸ்: எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லை. அந்த நாளிலே சேனாபதிகள், பிரபுக்கள், கப்பல் தலைவர்கள் எல்லோரும் நடனக் கச்சேரிக்கு வந்தார்கள். இப்பொழுது தபாலாபீஸ் குமாஸ்தா, ஸ்டேஷன் மாஸ்டர் இவர்களை யெல்லாம் அழைக்கவேண்டி யிருக்கிறது. அவர்களாவது சந்தோஷமாக வருகிறார்களா? அதுவும் இல்லை. வரவர நான் என்னவோ பலவீனமாகி விட்டேன்! இந்த மாளிகையின் பழைய யஜமானர்—பாட்டனார் இருந்தாரே—அவர் எந்த வியாதி வந்தாலும் செவ்வாக்கு கொடுப்பது வழக்கம். இந்த இருபது வருஷ காலமாக அந்த அரக்கை நான் உட்கொள்வது வழக்கம். அதனால்தான் நான் இதுவரை பிழைத்திருக்கிறேன்.

யாஷா: ஏ, தாத்தா! எனக்கு உன்னைப் பார்க்கவே சகிக்கவில்லை (கொட்டாவி விட்டுக்கொண்டு) நீ செத்துத் தொலைந்து விட்டால்தான் உன் நோயெல்லாம் பறந்துபோகும் என்று தோன்றுகிறது.

பீர்ஸ்: முட்டாள், அடே நீயா இப்படிப் பேசுகிறாய்!...அட, முட்டாளே! (முணுமுணுக்கிறான்.)

(டிராவிமாவும், ரனவ்ஸ்கியும் முதலில் கூடத்திலும், பிறகு சம்பாஷணை அறையிலும் நடனமாடுகின்றனர்.)

ரனவ்ஸ்கி: அம்மாடி, நான் உட்காருகிறேன். எனக்குக் களைப்பாயிருக்கிறது. (உட்காருகிருள், அன்னியா வருகிருள்.)

அன்னியா: (படபடப்புடன்) சமையலறையில் ஓர் அந்நியன் வந்து, இன்றைக்குச் செர்ரித் தோட்டம் விற்கப்பட்டதென்று இப்பொழுதுதான் சொன்னுன்.

ரனவ்ஸ்கி: யாருக்கு?

அன்னியா: யாருக்கென்று சொல்லவில்லை. அவன் போய்விட்டான்.

(அன்னியாவும் டிராவிமாவும் நடனமாடிக்கொண்டே கூடத்துக்குள்ளே போகிருர்கள்.)

யாஷா: யாரோ ஒரு கிழவன் பிதற்றிய செய்தி, அதுவும் ஓர் அந்நியன்!

பீர்ஸ்: கயேவ் இன்னும் இங்கு வரவில்லை. ஏதோ சாதாரண நாளில் போட்டுக்கொள்ளுகிற மெல்லிய மேலங்கியைப் போட்டுக்கொண்டு போயிருக்கிருர். குளிரினுல் அவருக்கு ஜலதோஷம் பிடித்தால் என்ன செய்கிறது? இந்தக் காலத்து வாலிபர்கள் கொஞ்சங்கூட நின்று யோசிப்பதில்லை!

ரனவ்ஸ்கி: எனக்கு உயிர் நில்லாது போலிருக்கிறதே, யாஷா! நீ போய், யாருக்குத் தோட்டம் விற்கப்பட்டிருக்கிறது என்று விசாரித்துக்கொண்டு வாயேன்!

யாஷா: அந்தக் கிழவன் போய் வெகு நேரமாகிவிட்டதே! (சிரித்துக் கொண்டே)

ரனவ்ஸ்கி: (சற்றுக் கிலேசத்துடன்) எதை நினைத்துச் சிரிக்கிருய்? உனக்கு என்ன சந்தோஷம் வந்திருக்கிறது?

யாஷா: எப்பிக்கிடாவ் ஒரு கோமாளியாய் இருக்கிருன். தகரடப்பாமாதிரி அவனுடைய வாய் 'லொட லொட' என்று உளறிக்கொண்டே யிருக்கிறது. இதற்குள் அவன் தன் கஷ்டங்களை யெல்லாம் அடுக்கடுக்காச் சொல்லிவிட்டான்.

ரனவ்ஸ்கி: பீர்ஸ் இந்தச் சொத்து விற்கப்பட்டு விட்டால், நீ எங்கே போவாய்?

பீர்ஸ்: என்னை எங்கே போகக் கட்டளையிடுகிருர்களோ, அங்கே போகிறேன்.

ரனவ்ஸ்கி: பார்ப்பதற்கு என்னவோபோல இருக்கிருயே? உடம்பு அசௌகரியமா? படுத்துக் கொள்ளுகிறதுதானே?

பீர்ஸ்: ஆமாம். (புன்முறுவலுடன்) நான் போர்த்துக் கொண்டு படுத்துவிட்டால், சாமான்களை யெல்லாம் நான் இல்லாமல் யார் எடுத்துக்கொடுப்பார்கள்? யார் கவனிப்பார்கள்? இந்த வீட்டில் விஷயம் தெரிந்தவன் நான் ஒருவன் தானே!

யாஷா: (ரனவ்ஸ்கியைப் பார்த்து) அம்மா, நீங்கள் தயவுசெய்து எனக்கு ஓர் உதவிமட்டும் செய்யவேண்டும். நீங்கள் பாரிஸ் நகரத்திற்குத் திரும்பிப் போகிறதானுல், அன்பு கூர்ந்து என்னையும் அழைத்துக்கொண்டு போகவேண்டும். இங்கே என்னுல் தாங்க முடியாது...(சுற்றிப் பார்த்துக்கொண்டு தாழ்ந்த குரலில்) நான் சொல்லித்தான் தெரியவேண்டுமா? உங்களுக்கு தெரியாத விஷயமா? இது ஓர் அநாகரிகமான நாடு ஜனங்கள் ஒழுங்கில்லை. ஒரு நாழிகை ஒரு யுகமாய் வளர்கிறது. இங்கேயுள்ளவர்கள் எனக்குத் தருகிற ஆகாரத்தைப் பார்த்தாலே வாந்தி வருகிறது. இதோடு கூட, பீர்ஸ் வாய்க்கு வந்தபடி பொருத்தமில்லாமல் பேசியும் முனகியும் சாபமிட்டுக்கொண்டே யிருக்கிருன். என்னை உங்களுடன் அழைத்துக்கொண்டு போய்விடுங்கள்; அவசியம் கவனிக்கவேண்டும்!

(பீர்ஸ் வருகிருன்)

பிஸ்சிகீ: ஒரே ஒரு வேண்டுகோள்...உங்களோடு சிறிது நேரமாவது நடனமாட விரும்புகிறேன்!...(ரனவ்ஸ்கி அவனுடன் போகிருள்) அம்மா, உங்கள் அழகு என்னை மயக்குகிறது... எனக்கு 180 ரூபிள் வேண்டியிருக்கிறதே, என்ன செய்வேன்...நீங்கள் தாம் கட்டாயம் கொடுக்கப்போகிறீர்கள்... கொடுப்பீர்கள் என்றே நம்புகிறேன்... ..(ஆடிக்கொண்டே மண்டபத்துள் போகிருர்கள்.)

யாஷா; (மெல்லிய குரலில் வாய்க்குள் பாடிக்கொண்டு)

'உள்ளக் கலக்கந்தை உணர்வீரோ நீரே,
உள்ளக் கலக்கந்தை உணர்வீரோ நீரே!'

[மண்டபத்தில் சாம்பல் நிறமான தொப்பியும் நிஜாரும் அணிந்துகொண்டு ஓர் உருவம் கைகளை ஆட்டிக்கொண்டு அங்குமிங்கும் ஆடிக் குதிக்கிறது பலே, பேஷ், சார்லட்டா! என்ற ஆரவாரங்கள் கேட்கின்றன.]

துன்னியாஷா: (முகத்தில் பவுடர் பூசிக்கொள்ள நிற்கிறுள்.) என்னுடைய எஜமானி நடனமாட உத்தரவு அளித்திருக்கிருள். சீமான்களெல்லாம் நிறைய இருக்கிறுர்கள், சீமாட்டிகளைக் காணேம் — எத்தனை தடவை குதிக்கிறது! தலை சுற்றுகிறது. மார்பு படபடவென்று அடிக்கிறது. தபால் ஆபீஸ் குமாஸ்தா இருக்கிருரே, அவர் சற்று முன்பு ஒரு விஷயம் சொன்னுர். அப்படியே எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! (வாத்தியங்களின் கோஷம் குறைந்து வருகிறது.)

பீர்ஸ்: அவர் உன்னிடத்தில் என்ன சொன்னுர்......?

துன்னியாஷா; 'நீ ஒரு மலர்போல இருக்கிருய்,' என்று என்னைப் பார்த்துச்சொன்னுர்.

யாஷா: (கொட்டாவி விட்டுக்கொண்டு) என்ன அறியாமை! (போகிருன்.)

துன்னியாஷா; ஒரு மலரைப்போல...எது சொன்னுலும் உடனே எனக்கு உணர்ச்சி பொங்கிவிடும்...அதுவும் இது போன்ற அருமையான வார்த்தைகளைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை!...

பீர்ஸ்; ஆனுல் நீ இந்த மாதிரி இருந்தால் கஷ்டத்திற்குத்தான் ஆளாவாய்.

(எபிக்கிடாவ் வருகிருன்.)

எபிக்கிடாவ்: துன்னியாஷா, உனக்கு என்னைப் பார்க்கவே விருப்பமில்லை...என்னை ஏதோ ஆபாசமான ஓர் புழுவாகவோ பூச்சியாகவோ எண்ணி ஒதுக்குகிருய்...(பெருமூச்செறிந்து) என்ன கஷ்டமான வாழ்க்கை!

துன்னியாஷா; உங்களுக்கு என்ன வேண்டும்?

எபிக்கிடாவ்; கொஞ்சங்கூடச் சந்தேகமில்லை, நீ நினைத்தது சரி. (பெருமூச்செறிந்து) ஒரு முறையில் பார்த்தால் இப்படித்தான் இருக்கவேண்டும். நான் உள்ளதை அப்படியே சொல்லுகிறேன். என் விஷயத்தில் கோபிக்காதே, மன்னிக்கவேண்டும். இந்த மனநிலைக்கு நீ தான் காரணம். என்னுடைய விதிதான் எனக்குத் தெரியுமே! ஒவ்வொரு நாளும் எனக்கு ஏதேனும் கஷ்டம் ஏற்பட்டுவிடுகிறது. ஏற்பட்டால்தான் என்ன? எப்பொழுதுமே கஷ்டம் வழக்க

மாகிவிடுகிறது. கஷ்டத்தைச் சிரித்துக்கொண்டே சந்தோஷமாக நான் அநுபவிக்கிறேன். நீ வாக்குக் கொடுத்திருக்கிருய், ஆனல் நான்—

துன்னியாஷா: என்னை மன்னிக்கவேண்டும். இதைப்பற்றிப் பின்னல் பேசிக்கொள்ளுவோம். இப்பொழுது என்னை விட்டுவிடுங்கள். இப்பொழுதுதான் ஏதோ கனவு காண்கிறேன்...(கையிலுள்ள விசிறியை விளையாட்டாக ஆட்டிக் கொண்டிருக்கிருள்.)

எபிக்கிடாவ்: ஒவ்வொரு நாளும் ஏதாவது ஒரு விபத்து வந்து கொண்டேயிருக்கிறது. கோபித்துக்கொள்ளாதே, நான் சொல்லித்தான் ஆகவேண்டும்...எந்த விபத்தைக் கண்டாலும் நான் முறுவல் செய்கிறேன். நன்ருகப் புன்னகை செய்கிறேன். வாய்விட்டுச் சிரிக்கிறேன், அவ்வளவுதான். (கூட்டத்திலிருந்து வாரியா வருகிருள்.)

வாரியா: எபிக்கிடாவ், இன்னுமா இங்கே யிருக்கிருய்? என்னடா, கொஞ்சங்கூட உனக்கு யோசனை கிடையாதா? (துன்னியாஷாவைப் பார்த்து) இந்த இடத்தைவிட்டு உனக்கு வேறு வேலை இல்லை. மேஜையில் பந்து விளையாடிப் பந்தடிக்கும் கம்பை உடைக்கவேண்டும் அல்லது சம்பாஷணை அறையில் ஏதோ விருந்தாளி மாதிரி திரியவேண்டும். இவைகளே உன் வேலைகள்!

எபிக்கிடாவ்: மனத்தில் இருப்பதைச் சொல்லுவதற்கு இடம் கொடுங்கள். நீங்கள் என்னைக் கண்டிப்பதற்கு உங்களுக்கு என்ன அதிகாரம்?

வாரியா: அதிகாரம் என்ன? எனக்குப் பட்டதை உன்னிடம் சொல்லுகிறேன். வேலை செய்யாமலே இங்கும் அங்கும் திரிந்து கொண்டிருக்கிருய். நாங்கள் உன்னை ஒரு காரியஸ்தனுக நியமித்திருக்கிறேம். எதற்காக என்பது மட்டும் ஒருவருக்கும் தெரியாது!

எபிக்கிடாவ்: (வருத்தமடைந்த குரலில்) நான் வேலை செய்கிறேனு, அல்லது சுற்றித் திரிகிறேனு, சாப்பிடுகிறேனு, அல்லது பந்து விளையாடுகிறேனு என்ற விஷயங்களை எவர்கள் உணர்ந்துகொள்ள முடியுமோ, எவர்கள் என் எஜமானர்களோ அவர்களே அறியமுடியும்.

வாரியா: என்னிடமா, நீ இப்படித் துணிந்து பேசுகிருய்? (கோபத்தால் கொதித்து) உனக்கு எவ்வளவு தைரியம்?

உனக்கு ஒன்றுமே புரிவதில்லையோ? நீ உடனே வெளியே போ! இந்த நிமிஷமே வெளியேறு.

எபிக்கிடாவ்: (தணிந்த குரலிலே) அமைதியாய் நாகரிகமாய்ச் சொல்லுங்களேன்!

வாரியா: (சீற்றத்தோடு) இந்த நிமிஷமே இந்த இடத்தை விட்டு வெளியிலே ஓடு! (அவன் கதவண்டை போகிறான், அவள் பின் தொடர்கிறாள்) வெளியிலே போ! என் கண் முன் நிற்காதே! உன் குறைகளை யெல்லாம் இங்கே சொல்ல வந்துவிட்டாய்! என் கண்முன் நிற்காதே! (எபிக்கிடாவ் வெளியிலே சென்றுவிடுகிறான்; ஆனால் கதவுக்கு வெளியிலிருந்து அவன் குரல் கேட்கிறது) 'உன்னைச் சந்தியில் இழுத்துவிடுகிறேன்'. நீ மறுபடியும் வருகிறாயா? (பீர்ஸ் கதவுக்கருகில் வைத்த தடியைத் தூக்கிக்கொண்டு) வா, தம்பி, வா! நான் உனக்கு வழி காட்டுகிறேன்! இன்னுமா வருகிறாய்? சுடச்சுட வாங்கிக் கட்டிக்கொள்!......(தடியைச் சுழற்றுகிறாள். அந்தத் தருணத்தில் லொபாகின் வருகிறான்.)

லொபாகின்: இப்படிப் பயங் காட்டுவதற்கு மிக்க வந்தனம்!

வாரியா: (கோபத்தோடும் வெறுப்போடும்) மன்னிக்க வேண்டும்!

லொபாகின்: அதெல்லாம் ஒன்றுமில்லை. இந்த உபசாரத்திற்கு வந்தனம்!

வாரியா: அதெல்லாம் ஒன்றுமில்லையா? — (சற்றுத் தள்ளிச் செல்லுகிறாள். சுற்றிப் பார்த்துவிட்டு, அமைதியாய்க் கேட்கிறாள்.) உங்களுக்குக் காயம்படவில்லையா?

லொபாகின்; பரவாயில்லை. பட்ட இடம் பருத்துவிடும். (கூட்டத்தில் குரல்கள் ஒலிக்கின்றன: 'லொபாகின் வந்து விட்டார்! கயேவும் வந்துவிட்டார்கள்!' என்ற முழக்கம்.)

பிஸ்சிக்: கடுத்த கண்களுக்கு இது ஒரு காட்சிதான்...... (அவனும் லொபாகினும் தழுவிக்கொண்டு) உயர்ந்த பிராந்தியின் வாசனை உன்னிடத்தில் அடிக்கிறதே, என் அருமை அண்ணே! ஜோர்தான்! நாமும் தமாஷ் பண்ண ஆரம்பித்துவிட்டோம்! [ரனவ்ஸ்கி வருகிறாள்.]

ரனவ்ஸ்கி: ஓ, நீயா, லொபாகின்! ஏன் இவ்வளவு நேரம்? கயேவ் எங்கே?

லொபாகின்: கயேவ் என்னோடுதான் வந்தார். சீக்கிரம் இங்கே வருவார்......

ரனவ்ஸ்கி: (பரபரப்புடன்) செய்தி என்ன? ஏலம் முடிந்து விட்டதா? சீக்கிரம் சொல்லு!

லொபாகின்: (தம் சந்தோஷத்தைக் காட்டிக்கொள்ள முடியாத சங்கடத்தில்) ஏலம் நாலு மணிக்கே முடிந்து போய் விட்டது.. ...ரயிலுக்கு நேரமாகிவிட்டதால், நாங்கள் ஒன்பதரை மணி வரை காத்திருக்க நேர்ந்தது. (மூச்சுத் திணறிக்கொண்டு) அப்பா! என் தலை கிறுகிறுக்கிறது! (கயேவ் வருகிறான்; அவனுடைய வலது கையில் சில பொட்டலங்கள் இருக்கின்றன; இடது கையால் கண்களைத் துடைத்துக்கொள்கிறான்.)

ரனவ்ஸ்கி: கயேவ்! கயேவ்! என்ன சமாசாரம்? என்ன சமாசாரம்? (பரபரப்புடன், கண்ணீர் வழிய) சீக்கிரம் சொல்லேன்!

கயேவ்: (அவளுக்குப் பதில் ஒன்றும் அளிக்காமல், கைகளைத் தான் ஆட்டுகிறான். பீர்ஸிடம் அழுதுகொண்டே) இவைகளைக் கொண்டுபோ......சிறு அங்கோவி மீன்கள், கிரிமியா மீன்கள் இதோ இருக்கின்றன. இன்று முழுவதும் சாப்பிட ஒன்றுமே இல்லை.........எத்தனை கஷ்டப்பட்டிருக்கிறேன், தெரியுமா? (மேஜைப் பந்தாடும் அறைக்கதவு திறந்திருக்கிறது. பந்துகள் உருளுகிற ஒலி கேட்கிறது. 'ஏழு—பதினெட்டு' என்று யாஷா கூவுவது கேட்கிறது. கயேவின் தோற்றம் மாறுகிறது. அழுவதை நிறுத்திவிடுகிறான்.) மிகவும் களைப்பாயிருக்கிறது. பீர்ஸ், எனக்கு வேறு உடைகள் கொண்டுவாயேன்! (கூடத்தின் வழியாய்க் கயேவ் தன்னுடைய அறைக்குப் போகிறான். பீர்ஸ் பின்தொடர்ந்து செல்கிறான்.)

பிஸ்சிக்; ஏலம் எப்படி முடிந்தது, சொல்லேன்!

ரனவ்ஸ்கி: செர்ரித் தோட்டம் விற்கப்பட்டு விட்டதா?

லொபாகின்: ஆமாம்.

ரனவ்ஸ்கி: வாங்கியது யார்?

லொபாகின்: நான்தான் வாங்கினேன்.

(பேச்சு நிற்கிறது. ரனவ்ஸ்கி பிரமித்துப் போய்விட்டாள். பக்கத்தில் நாற்காலியும் மேஜையும் இல்லாமற்

போனால் அவள் கீழே விழுந்திருப்பாள். வாரியா தன்னுடைய இடுப்பிலிருந்த சாவிகளை எடுத்துச் சம்பாஷணை அறையின் தரைமீது எறிந்துவிட்டு அகலுகிருள்.)

லொபாகின்: நான் வாங்கியாகிவிட்டது! ஒரு நிமிஷம் பொறுத்துக் கொள்ளுங்கள்—என் மூளையில் ஒரே குழப்பமாயிருக்கிறது. எனக்குப் பேச முடியவில்லை..... (சிரித்துக் கொண்டு) ஏலம் போடுகிற இடத்திற்கு வந்தோம். டெரிகனுவ் எங்களுக்கு முன் வந்திருந்தார். கயேவிடம் பதினையாயிரம் ரூபிள் தான் இருந்தது. சொத்தைப் பொறுத்திருந்த கடனுக்கு மேலாக முப்பதாயிரம் ரூபிள் என்று டெரிகனுவ் ஏலத் தொகையைத் திடீரென்று உயர்த்திவிட்டார். 'இப்படியா இருக்கிறது நிலைமை!' என்று எண்ணி நான் நாற்பதாயிரம் என்று கேட்டேன். அவர் நாற்பத்தையாயிரத்திற்கு உயர்த்தினுர். உடனே நான் ஐம்பாதாயிரம் என்றேன். அவர் ஐயாயிரம் ஐயாயிரமாகக் கூட்டினுர். நான் பதினுயிரம் பதினுயிரமாக உயர்த்தினேன்......கடைசியில் ஏலம் முடிந்தது. கடனுக்கு மேலே தொண்ணூறுயிரம் என்று நான் ஏலம் கேட்டேன், ஏலம் எனக்கே உறுதி செய்யப்பட்டது. இப்பொழுது இந்தச் செர்ரித் தோட்டம் என்னுடையதாக ஆகிவிட்டது! எனனுடையது! (உரக்கச் சிரித்துக்கொண்டு.) ஆண்டவனே, உன் கிருபைதான்! செர்ரித் தோட்டம் என்னுடையதுதான்! எனக்குக் குடிவெறியா? சித்தப் பிரமையா? கனவு காண்கிறேனு? (காலைக் கீழே அடித்துக்கொண்டு) என்னைப் பார்த்துச் சிரிக்காதீர்கள்! காலஞ் சென்ற என் தகப்பனுரும் என் பாட்டனுரும் மீண்டு வந்தால் எப்படி யிருக்கும்! நான் அவர்களுடைய லொபாகின்தான்—அடிபட்டுப் படிப்பறியாமல், கடுங்குளிர் காலத்திலும் காலுக்கு ஒன்றுமில்லாமல் வெளியிலே திரிந்த லொபாகின்தான் நான்—அதே லொபாகின் இப்பொழுது தோட்டம் துறவு வாங்கியிருக்கிருன் என்றுல், அவர்களுக்கு எப்படி யிருக்கும்! உலகத்திலேயே மிகவும் நேர்த்தியான தோட்டத்தை நான் வாங்கி யிருக்கிறேன். இது என் பாட்டனும் தகப்பனும் அடிமைகளாய் வேலை செய்த இடம். அந்தக் காலத்தில் அவர்களைச் சமையல் அறையுள்கூட விடமாட்டார்கள். நான் நெடுந் தூக்கத்தில் ஆழ்ந்து விட்டேனு? நான் கனவு காண்கிறேனு? கனவு காண்கிற நிலையாய்த்தான் இருக்கிறது!......எல்லாம்

கற்பனையின் சிருஷ்டிமாதிரி இருக்கின்றனவே! எதுவும் தெளிவாய்ப் புலப்படாதபடி பனி மூடியதுபோல் இருக்கிறதே! (புன்முறுவலுடன் சாவிக் கொத்தை எடுத்துக் கொண்டு) அவள் சாவிகளை எறிந்துவிட்டாள். இனிமேல் வீட்டிற்குத் தான் எஜமானி இல்லை என்பதைக் காண்பிக்கத் தான் இப்படிச் செய்தாள் போலிருக்கிறது! (சாவிகளைக் குலுக்குகிறான்.) நாம் வேறு என்ன செய்ய முடியும்! (வாத்தியங்கள் அடுத்த கீதத்திற்கு ஆயத்தம் செய்யப் படும் ஓசை காதில் விழுகிறது.) வித்வான்களே, வாசியுங்கள்! உங்கள் கீதத்தைக் கேட்க எனக்கு ஆசைதான்! சரி, நீங்கள் எல்லோரும் லொபாகின் செர்ரித் தோட்டத்தை வெட்டி வீழ்த்துகிற காட்சியை வந்து பார்க்கத்தான் வேண்டும். எப்படி மரங்கள் மடமடவென்று சாயப் போகின்றன என்பதைப் பாருங்கள்! இந்த இடத்தில் அநேகம் பங்களாக்கள் கட்டுவோம். நம்முடைய பேரர்கள் எல்லோரும் புது வாழ்வு வாழட்டும்...சங்கீதம் நன்றாக முழங்கட்டும்! கச்சேரி நடக்கட்டும்!

[வாத்தியங்கள் முழங்குகின்றன. ரனவ்ஸ்கி ஒரு நாற்காலியில் அப்படியே ஆழ்ந்து, அழுது விம்மிக் கண்ணீர் பெருக்குகிறாள்.]

லொபாகின்: (நிந்திக்கிற முறையில்) ஏன் என் பேச்சைக் கேட்கவில்லை? என்ன காரணம்? போனதைப் பற்றிச் சிந்திக்கிறதில் காரியமில்லை. (கண்ணீருடன்) நம்முடைய துக்ககரமான கோர வாழ்வு எப்படி மாறுமோ, அப்படி விரைவாக இதெல்லாம் மாறிவிடும்!

பிஸ்சிக்: (அவன் கையைப் பிடித்துக்கொண்டு, காதோடு) அவள் அழுகிறாள். நாம் எல்லோரும் கூடத்திற்குப் போவோம். அவளைத் தனியாய் விடுவது நலம், வாருங்கள்! (அவர்கள் இருவரும் கூடத்திற்குச் செல்லுகிறார்கள்.)

லொபாகின்: சங்கீதம் சரிவர நடக்கட்டும்! நான் விரும்புகிறபடியெல்லாம் நடக்கட்டும்! (கிண்டலாக) இதோ வருகிறார் புது எஜமான், செர்ரித்தோட்டத்தின் அதிகாரி! (தற்செயலாய்ச் சிறிய மேஜைமீது மோதிக் கொள்ளுகிறான். அதன்மீது வைத்திருந்த மெழுகு வர்த்திகளிலுள்ள விளக்கு அநேகமாய்ச் சாய்ந்துவிடும் போலிருந்தது.) எல்லாவற்றிற்கும் நான் பணம் கொடுத்துவிட முடியும்! (பிஸ்சிக்கோடு போகிறான்.)

(சம்பாஷணை அறையிலும் கூடத்திலும் ரனவ்ஸ்கியைத் தவிர வேறொருவருமில்லை. அவள் ஒரு நாற்காலியில் முடங்கி உட்கார்ந்துகொண்டு சோகக் கண்ணீர் சொரிகிறுள். சங்கீதம் மெல்லிய இசையாகக் கேட்கிறது. அன்னியாவும் டிராவிமாவும் வேகமாக வருகிறுர்கள். அன்னியா தன் தாயாரிடம் வந்து அவள் முன்னிலையில் மண்டியிட்டு உட்காருகிறுள். கூடத்து வழியில் டிராவிமாவ் நிற்கிறுன்.)

அன்னியா : 'என் தங்க அம்மா, ஏன் அழுகிறுய்? என்னுடைய அருமைத் தாயே, ஏன் அழுகிறுய்?' நான் உன்னிடத்தில் அன்பு காட்டுகிறேன். உனக்காகப் பிரார்த்தனை செய்கிறேன். செர்ரித் தோட்டம் போய்விட்டது, இனிமேல் நம்முடையதன்று. உண்மைதான், அழாதே அம்மா, நமக்கு இன்னும் வாழ்வில்லையா? இறந்தா போய்விட்டோம்? என்னோடு வா, அம்மா! இந்த இடத்தை விட்டு வந்துவிடு, அம்மா......இதைக் காட்டிலும் அழகான தோட்டத்தை உண்டாக்குவோம்! அதை நீ நிச்சயமாக உன் கண்களால் பார்க்கப் போகிறுய். அந்தப் பொழுதில் ஏற்படும் ஆழ்ந்த அமைதியையும் இன்பத்தையும் போல நீயும் அடையப்போகிறுய்: இந்தத் துயரமெல்லாம் மகிழ்ச்சியாக மாறிவிடும், அம்மா! வா, அம்மா!

(திரை விழுகிறது.)

நான்காம் அங்கம்

[முதல் அங்கத்தில் கூறப்பட்ட அறை—அதே காட்சி. ஆனால் ஜன்னல்களில் திரைகளில்லை, படங்களில்லை, சில நாற்காலிகள் மேஜைகள் மட்டும் விற்பனைக்கு அடுக்கி வைக்கப்பட்டவை போல, ஒரு மூலையில் கிடக்கின்றன. அங்கே ஒரு சூனியம் படர்ந்திருந்தது. பின்பக்கத்துக் கதவண்டையில் நாடக மேடைக்குப் பின்பக்கமாகப் பெட்டிகளும் பிரயாணப் பைகளும் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. இடது பக்கத்தில் கதவு திறந்திருக்கிறது. அதன் வழியாக அன்னியா, வாரியா ஆகியவர்களின் குரல்கள் கேட்கின்றன. லொபாகின் காத்து நின்றுகொண்டிருக்கிறான். ஒரு தட்டு நிறைய மதுக் கிண்ணங்களை ஏந்தி நிற்கிறான் யாஷா. வீட்டின் முன் அறையில் எப்பிக்கிடாவ் ஒரு பெட்டியைக் கயிற்றால் கட்டுகிறான். இந்தக் காட்சிகளுக்கு அப்பால் தூரத்தில் பல குரல்கள் ஒலிக்கின்றன. அப்படிப் பேசுகிறவர்கள் குடியானவர்கள்; அவர்கள் விடை பெற்றுக்கொள்ள வந்திருக்கிறார்கள். 'வந்தனம், நண்பர்களே! வந்தனம்!' என்று கயேவ் பேசுகிற குரல் கேட்கிறது.]

யாஷா: சூது வாதொன்றும் தெரியாத இந்தக் குடியானவர்கள் நம்மை வழியனுப்ப வந்திருக்கிறார்கள். லொபாகின், என்னுடைய அபிப்பிராயம் தெரியுமல்லவா உங்களுக்கு? இந்தக் குடியானவர்கள் உள்ளன்பு உடையவர்கள் தாம். ஆனால் விஷயம் ஒன்றும் தெரியாதவர்கள்.

[பேச்சரவம் தேய்ந்துகொண்டு வருகிறது. முன்பக்கத்து அறை வழியாக ரனவ்ஸ்கியும் கயேவும் வருகிறார்கள்: அவள் அழவில்லை. முகம் மட்டும் வெளுத்துப் போயிருக்கிறது. முகத்தில் ஒரு பதட்டம். பேச முடியாத நிலையில் இருக்கிறாள்.]

கயேவ்: *லியுபா, நீ உன்னுடைய பையை அவர்களிடத்தில் கொடுத்துவிட்டாயே! இந்த மாதிரிக் காரியங்களை நீ செய்யக் கூடாது! நீ செய்யக்கூடாது!

---

* சீமாட்டி ரனவ்ஸ்கியின் சொந்தப் பெயர் லியூபா ஆண்டிரியவ்னா என்பது.

ரனவ்ஸ்கி: எனக்குத் தாங்கவில்லை! என்னை அடக்கிக் கொள்ள முடியவில்லையே! (அவர்கள் போகிறார்கள்.)

லொபாகின்: (அவர்களைத் தொடர்ந்து கதவு வழியில் நின்று கொண்டு) உள்ளே வாருங்கள்! நான் உங்களைக் கெஞ்சி அழைக்கிறேன், வாருங்கள்! ஏதோ கொஞ்சம் மது குடிப்போம். பட்டணத்தில் வாங்கிவரப் புத்தியில்லாமல் போய் விட்டது. ரயில்வே ஸ்டேஷனில் ஒரு புட்டிதான் இருந்தது, வாருங்கள்! (சற்று மௌனம்) வரமாட்டீர்களா? ஏன் வேண்டாம் என்கிறீர்கள்? (கதவண்டையிலிருந்து வெளியிலே வந்து) எனக்கு இம்மாதிரி நடக்குமென்று முன்பே தெரிந்திருந்தால், நான் இதை வாங்கியிருக்கவே மாட்டேன். நானும் இதைக் குடிக்காமல் வைத்து விடுகிறேன். (யாஷா ஒரு நாற்காலிமீது ஜாக்கிரதையாய்த் தட்டை வைக்கிறான்.) ஏன், யாஷா நீதான் ஒரு கிண்ணம் குடியேன்!

யாஷா: வீட்டை விட்டுப் போகிறவர்களின் க்ஷேமத்தை உத்தேசித்தும், உங்களுடைய க்ஷேமத்திற்காகவும் குடிக்கிறேன். (குடித்துக்கொண்டே) இந்த மது அசல் சரக்கில்லை, நிச்சயமாய்ச் சொல்வேன்!

லொபாகின்: ஒரு புட்டி எட்டு ரூபிள், அப்பா! (சற்று மௌனம்) இங்கே மிகவும் குளிராயிருக்கிறது.

யாஷா: நாங்கள் வீட்டைவிட்டுப் போகிறபடியால், அவர்கள் இன்று கணப்பு மூட்டவில்லை. (சிரிக்கிறான்.)

லொபாகின்; ஏன் சிரிக்கிறாய்?

யாஷா: சந்தோஷத்திலே.

லொபாகின்; அக்டோபர் மாதந்தான், இருந்தாலும் கோடைக் காலத்தைப்போல் சூரியன் காய்கிறான். கட்டடம் கட்ட நல்ல காலந்தான். (தன்னுடைய கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டு, கதவு வழியாய்க் கூப்பிடுகிறான்.) மறந்துவிடாதீர்கள். வண்டிவர நாற்பத்தேழு நிமிஷங்களே இருக்கின்றன! இன்னும் இருபது நிமிஷங்களில் நீங்கள் ஸ்டேஷனுக்குப் புறப்படவேண்டும். சற்றுத் துரிதப்படுத்துங்கள்.

(ஒரு பெரிய மேலங்கி அணிந்துகொண்டு கூடத்திலிருந்து வருகிறான் டிராவிமாவ்.)

டிராவிமாவ்: புறப்படுவதற்கு வேளையாகிவிட்டது. வாசலில் வண்டிகள் வந்து தயாராக நிற்கின்றன. என்ன சனியனோ யிருக்கிறது, என்னுடைய ரப்பர் பூட்சுகளைக் காணோமே!

எங்கேனும் போய்விட்டனவா? (வாயிற்படியில் நின்று கொண்டு) அன்னியர், என் ரப்பர் பூட்சுகளைக் காணோமே! எங்கே யிருக்கின்றன? ஒன்றுந் தெரியவில்லை!

லொபாகின்: நான் கார்க்கோவ் நகருக்குப் போகவேண்டியிருக் கிறது. நீங்கள் எந்த ரயிலுக்குப் போகிறீர்களோ, அதே ரயிலில்தான் நானும் வரப்போகிறேன். குளிர் காலத்தைக் கார்க்கோவில் கழிக்கலாமென்று நினைக்கிறேன். இத்தனை நாளாக ஒரு வேலையும் இல்லாமல் பைத்தியம் பிடித்தாற் போல இருக்கிறது. வேலை வெட்டி செய்தால்தான் ஏதோ உயிர் இருக்கிறது போலத் தோன்றுகிறது. இங்கே இந்தக் கைகளால் எதுவும் செய்வதற்கில்லை. இவைகள் என் கைகளாகத் தோன்ருமல் வேருெருவருடையவைபோலத் தோன்றுகின்றன.

டிராவிமாவ்: நாங்கள் சீக்கிரம் போய்விடுவோம், மிகவும் உபயோகமான உங்கள் வேலையை இனிமேல் நீங்கள் ஆரம்பித்துவிடலாம்.

லொபாகின்: கொஞ்சம் மது அருந்துங்களேன்!

டிராவிமாவ்: எனக்கு வேண்டாம்!

லொபாகின்: நீங்கள் மாஸ்கோவுக்குப் போகிறீர்களா?

டிராவிமாவ்: அவர்களைப் பட்டணத்திற்கு வழி அனுப்பிவிட்டு, நாளைக்கு நான் மாஸ்கோவுக்குப் போகிறேன்.

லொபாகின்: சரிதான்...இதுவரையில் ஆசிரியர்கள் பாடங் களைச் சொல்லித் தரவில்லைபோலிருக்கிறது: உங்களுக்காக இன்னும் காத்துக் கொண்டிருக்கிருர்களா?

டிராவிமாவ்: உங்களுக்கு வேண்டாத விஷயத்தில் நீங்கள் ஏன் தலையிடுகிருர்கள்?

லொபாகின்: எத்தனை யுகங்களாகக் கலாசாலையில் வாசித்து வருகிறீர்கள்?

டிராவிமாவ்: வேறு ஏதேனும் விஷயத்தைப்பற்றிப் பேசுங்கள். ஏதோ சாரமற்ற பழைய விஷயத்தையே திருப்பித் திருப் பிச் சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே! (ரப்பர் பூட்சுகளைத் தேடிக்கொண்டே) இனிமேல் நாம் இருவரும் சந்திப்பது துர்லபம். ஆகவே போகிறபொழுது தங்களுக்கு ஒரு விஷயத்தைச் சொல்லிவிட்டுப் போகலாம் என்று நினைக் கிறேன். எப்பொழுதும் கைகளை ஆட்டிக்கொண்டு இருக்கா தீர்கள்! அந்தப் பழக்கத்தை விட்டுவிடுங்கள். பங்களாக்

கட்டுவதும் பங்களாவில் வசிக்கிறவர்கள்கூட நாளடைவில் சொந்தப் பங்களாக்கள் வந்துவிடும் என்று நம்புவதும் கைகளை ஆட்டுகிற காரியமாகவே போய்விடப் போகின்றன! என்ன இருந்தாலும் உங்களிடத்தில் எனக்கு அன்பு இருக்கத்தான் செய்கிறது. உங்களுடைய விரல்களெல்லாம் ஒரு சைத்ரிகனுடைய விரல்களைப்போல இருக்கின்றன. உங்களுடைய உள்ளம் உணர்ச்சி ததும்பிய கூர்மையான உள்ளம்.

லொபாகின்: (அவனைத் தழுவிக்கொண்டு) நல்லது, போய் வாருங்கள்! உமக்கு அவசியமாயிருந்தால், பிரயாணத்திற்காக நான் கொஞ்சம் பணம் தருகிறேன்.

டிராவிமாவ்: எனக்குப் பணம் என்னத்திற்கு? வேண்டாம்.

லொபாகின்: உன்னிடத்தில் ஒன்றுமே இல்லையே?

டிராவிமாவ்: என்னிடத்தில் இருக்கிறது. விசாரித்ததற்கு வந்தனம். ஒரு மொழிபெயர்ப்புக்குப் பணம் வந்திருக்கிறது. இதோ பையில் இருக்கிறது. (வேதனைப்பட்டுக்கொண்டு) என்னுடைய ரப்பர் பூட்சுகள் போய்விட்டனவே!

வாரியா: (மற்றோர் அறையிலிருந்து) இதோ எடுத்துக்கொள் இந்த ஆபாசங்களை! (நாடக மேடைமீது ரப்பர் பூட்சுகளை எறிகிருள்.)

டிராவிமாவ்: ஏன் கோபித்துக்கொள்ளுகிருய்?...இவைகள் என்னுடைய பூட்சுகளில்லையே!

லொபாகின்: வசந்த காலத்தில் மூவாயிரம் ஏக்கர் நிலத்தில், கசகசாச் செடி * வைத்தேன். நாற்பதினுயிரம் ரூபிள் என் கைக்கு வந்திருக்கிறது. செடிகள் மலர்ந்திருக்கிற காட்சியே காட்சி. இப்பொழுது நாற்பதினுயிரம் லாபம் வந்திருப்பதால்தான் உனக்குக் கடன் தருவதாகச் சொல்லுகிறேன். முகத்தை அந்தப்புறம் திருப்பிக்கொள்ளுகிருயே! நான் ஒரு குடியானவன்......என்னிடம் ஒளிவு மறைவு கிடையாது.

டிராவிமாவ்: உங்கள் தகப்பனுர் ஒரு குடியானவர்; என்னுடைய தகப்பனுர் ஒரு கம்பவுண்டர். ஆதலால், தொழிலை வைத்து ஒன்றுமில்லை. (லொபாகின் கைப் புத்தகத்தை எடுக்கிருன்.) வேண்டாம், வேண்டாம்...லக்ஷம் கொடுத்

* இந்தச் செடிகளின் புஷ்பங்கள் மிகவும் அழகானவை; இச்செடிகளிலிருந்து அபின் தயாரிப்பது வழக்கம்.

தாலும் வேண்டாம். நான் அதை எடுத்துக்கொள்ள மாட்டேன். நான் சுதந்திரத்தை விரும்புகிறவன். நீங்கள் எல்லோரும், ஏழைகளும் பணக்காரர்களும் எவைகளை யெல்லாம் பெரிதாகக் கருதுகிறீர்களோ, அவைகளில் எதுவும் என்னை ஒருபோதும் பாதிக்காது. காற்றிலே பறக்கிற சிறு இறகைப்போலவே அவைகளைக் கருதுவேன். உங்கள் தயவெல்லாம் இல்லாமல் நான் வாழ முடியும். உங்களை நான் பொருட்படுத்தமாட்டேன். எனக்கு ஆற்றல் இருக்கிறது, நான் கௌரவமாக வாழ்வதால் பெருமையும் கொண்டிருக்கிறேன். ஜன சமுதாயம் மகோன்னதமான உண்மையை நாடி விரைந்து செல்லுகிறது. பூமியில் மக்கள் அடையக்கூடிய பேரின்பத்தை அடைய அதிவேகமாகச் செல்லுகிறது. இங்கேயே, இவ் வாழ்விலேயே எல்லாம் நிகழப்போகின்றன. நான் இந்தச் சமுதாயத்தின் முன்னணியில் நிற்கிறேன்.

லொபாகின்: நீ லட்சியத்தை அடைவாயா?

டிராவிமாவ்; நான் அதை அடைந்தே தீருவேன். (பேச்சில் ஓர் ஓய்வு) நான் அதை அடைவேன். மற்றவர்களுக்கும் அதை அடையும் மார்க்கத்தைக் காட்டுவேன். (தூரத்தில் கோடரி மரத்தைப் பிளக்கிற சத்தம் கேட்கிறது.)

லொபாகின்: நண்பா போய் வா! புறப்படுவதற்கு நேரமாயிற்று. நாம் ஒருவருக்கொருவர் பெருமை அடித்துக்கொண்டிருந்தால், வாழ்வும் மெல்லக் கரந்து போய்விடும். ஓய்வில்லாமல் வேலை செய்தால், என்னுடைய எண்ணங்கள் தெளிவடைகின்றன. அப்பொழுதுதான் எதற்காக நான் உலகத்தில் இருக்கிறேன் என்ற விஷயம் விளங்குகிறது. எத்தனை ஜனங்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள், எதற்காக இருக்கிறோம் என்ற விஷயத்தை அறியாமலேயே அவர்கள் இருக்கிறார்கள். அதைப்பற்றி இங்கே என்ன? அது இருக்கட்டும், கயேவுக்கு வருஷந்தோறும் ஆறாயிரம் ரூபிள் சம்பளத்திற்கு ஒரு பாங்கியில் வேலை ஆகியிருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறார்கள்... அவன் வேலையைக் காப்பாற்றிக் கொள்வானா? அவன் பெரிய சோம்பேறியாயிற்றே...

அன்னியா: (கதவு வழியில்) நாங்கள் போகிறவரையில் மரங்களை வெட்டவேண்டாமென்று அம்மா சொல்லச் சொன்னாள்.

டிராவிமாவ்: போதுமான லௌகிகம்கூடத் தெரியாமலிருந்தால்... (கூடத்து முகப்பு வழியாய்ப் போகிருன்.)

லொபாகின்: சீக்கிரம், சீக்கிரம்; அந்த மனிதர்கள்... (அவனைப் பின்தொடர்ந்து செல்கிருன்.)

அன்னியா: பீர்ஸை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போய்விட்டார்களா?

யாஷா: அவர்களிடத்தில் காலையிலேயே சொன்னேன். அவனை அழைத்துப் போயிருப்பார்கள்.

அன்னியா: (கூடத்தின் வழியே போய்க்கொண்டிருக்கும் எபிக்கிடாவிடம்) எபிக்கிடாவ், பீர்ஸை ஆஸ்பத்திரிக்கு அனுப்பியாகிவிட்டதா என்று பார்த்துச் சொல்லு.

யாஷா: (மனஸ்தாபத்துடன்) ஏகோவிடம் இன்று காலைதான் சொன்னேன். மூச்சுவிடாமல் ஏன் கேட்டுக்கொண்டேயிருக்கிருய்?

எபிக்கிடாவ்: பீர்ஸுக்கு வயதாகிவிட்டது, அவன் குணமடையப் போகிறதில்லை. , அவனுடைய தகப்பன், பாட்டன் எல்லோரும் போன இடத்திற்கு அவனும் போகவேண்டியதுதான். அவன் பாக்கியசாலிதான், அதனுல் எனக்குக் கூடப் பொருமை ஏற்படுகிறது. (தொப்பிப் பெட்டியின்மீது டிரங்கை வைக்கிருன்; பெட்டி நசுங்குகிறது.) உங்களிடம் நான் என்ன சொன்னேன் ?

யாஷா: (கேலியாக) உன் துன்பங்களை அடுக்கிச் சொன்னுய்!

வாரியா: (கதவுக்குப் பின்னுல் நின்றுகொண்டு) பீர்ஸை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டார்களா?

அன்னியா: அனுப்பியாகிவிட்டது.

வாரியா: ஏன் இந்தக் கடிதத்தை டாக்டரிடம் எடுத்துச் செல்லவில்லை?

அன்னியா: உடனே கொண்டு கொடுக்கவேண்டும்... (வெளியிலே போகிருள்.)

வாரியா: (பக்கத்து அறையிலிருந்து) யாஷா எங்கே? வழியனுப்ப வேண்டுமென்று அவனுடைய தாயார் வந்திருக்கிருள். இதைப் போய்ச் சொல்லு.

யாஷா: (கையை அலைத்துக்கொண்டு) என் பொறுமையை மிகவும் சோதித்துவிடுகிருர்கள். அவர்கள் செய்வதெல்லாம் இதுதான். (துன்னியாஷா சாமான்களை அடுக்கி

வைக்கிற அலுவலில் அங்கும் இங்கும் ஓடுகிருள்; இப்பொழுது யாஷா தனியாக இருக்கையில் அவனிடம் போகிருள்.)

துன்னியாஷா: யாஷா, என்னை ஒரு முறையாவது கண்ணெடுத்துப் பாரேன்! நீயா போகிருய்... என்னைக் கைவிட்டுப் போகிருய்... (அவனைத் தழுவிக்கொண்டு அழுகிருள்.)

யாஷா: ஏன் அழுகிருய்? (மதுவைப் பருகிக்கொண்டு) இன்னும் ஆறு நாளில் பாரிஸில் இருப்பேன். நாளை எக்ஸ்பிரஸ் வண்டியில் ஏறினல் கணப்பொழுதில் இவ்விடத்தைவிட்டு மறைந்துவிடுவோம் இப்படி நடக்குமென்று கொஞ்சங் கூட நான் நினைக்கவில்லை. இந்த நாட்டு வழக்கங்கள் எனக்குப் பிடிக்கவில்லை. என் வாழ்வைச் சரிவர நடத்த முடியவில்லை. அங்கேயும் அப்படித்தானே? அறியாமையை அதிகமாய்ப் பார்த்தாகிவிட்டது—இது போதும் எனக்கு. (மேலும் மதுவைக் குடித்துக்கொண்டு) ஏன் அழுகிருய்? நாகரிகமாக நடந்தகொள்ள விரும்பினல், இம்மாதிரி அழமாட்டாய்.

துன்னியாஷா: (முகத்தில் பவுடரை ஒற்றிக்கொண்டு கையிலுள்ள சிறு கண்ணுடியில் பார்க்கிருள்.) பாரிஸ் பட்டணத்திலிருந்து கடிதம் போடு. நான் உன்னைக் காதலித்தேன், யாஷா, உன்னை எல்லை கடந்து காதலித்தேன். என் உள்ளம் துன்பங்களைக் கொஞ்சங்கூடத் தாங்க முடியாதபடி மென்மையானது, யாஷா!

யாஷா: ஜனங்கள் வருகிருர்கள். (தனக்குள்ளே பாடிக்கொண்டு பெட்டிகளைச் சுற்றிச்சுற்றி வருகிருன்.)

[ரனவ்ஸ்கி அம்மாள், கயேவ், அன்னியா, சார்லட்டா ஆகியோர் வருகின்றனர்.]

கயேவ்: புறப்படுவதற்கு நேரமாகிவிட்டது. கொஞ்சங்கூடக் காலதாமதம் செய்வதற்கில்லை. யாரிடத்திலோ மீன் வாடை அடிக்கிறதே!

ரனவ்ஸ்கி: பத்து நிமிஷத்தில் வண்டிகளில் போய் உட்காருவதற்குத் தயாராயிருக்கவேண்டும்... (அறையைச் சுற்றிப் பார்த்துக்கொண்டு) அருமையான என் பாட்டனுடைய வீடே! என் இன்ப நிலையமே! உன்னை விட்டுப் பிரிய வேண்டியிருக்கிறது. குளிர்காலம் கழிந்துவிடும், வசந்த காலம் வரும், ஆனல் நீ இருக்கப் போகிருயா? அவர்கள் உன்னை இடித்துத் தள்ளிவிடப் போகிருர்கள். எத்தனை சம்ப

வங்களை இந்தச் சுவர்கள் கண்டிருக்கின்றன. (மிகுந்த ஆர்வத்துடன் தன் பெண்ணைத் தழுவி முத்தமிடுகிறாள்.) என் செல்வமே! உன்னுடைய கண்கள் இரண்டு வயிரங்கள் போல ஒளி வீசுகின்றன. நீ மிகுந்த மகிழ்ச்சியுடன் விளங்குகிறாய், உனக்கு மிக்க சந்தோஷமாயிருக்கிறதா?

அன்னியா: ஆம், மிகுந்த மகிழ்ச்சிதான். நமக்கு ஒரு புதிய வாழ்வு ஆரம்பமாகிறது, அம்மா.

கயேவ்: (சந்தோஷமாய்) எல்லாம் இப்பொழுது சரியாய்ப் போய்விட்டன. செர்ரித் தோட்டம் விற்கப்படுகிறவரையில் மனம் குழம்பிக்கொண்டு இருந்தோம், எல்லோரும் கஷ்டப்பட்டோம். இனிமேல் மாற்ற முடியாதபடி எல்லாம் முடிந்து தீர்ந்ததும் நாம் அமைதி யடைந்துவிட்டோம். சந்தோஷமாய்க்கூட இருக்கிறோம். நானும் பாங்கு உத்தியோகஸ்தனாகிவிட்டேன்...... நான் மஞ்சள் பந்தைத் தள்ளுகிறேன். லியுபா, நீ என்ன சொன்னாலும், உன் முகத்தில் களை வந்திருக்கிறது. அதைப்பற்றிச் சந்தேகமில்லை.

ரனவ்ஸ்கி: உள்ளத்திலே அமைதி ஏற்பட்டிருக்கிறது, அது உண்மைதான். (அவளுடைய தொப்பியும் அங்கியும் அவளிடம் கொடுக்கப்படுகின்றன.) கவலையற்றுத் தூங்குகிறேன். யாஷா, என் சாமான்களை எடுத்துக்கொண்டு வா. மணியாகிவிட்டது. (அன்னியாவைப் பார்த்து) குழந்தாய், சீக்கிரம் வந்து உன்னைச் சந்திப்பேன்...நான் பாரிஸுக்குப் போகிறேன். தோட்டம் வாங்குவதற்காக யாரோஸ்லாவிலிருந்து உன் பாட்டி அனுப்பிய பணத்தை வைத்துக்கொண்டு அங்கே வசிப்பேன். பாட்டி வெகு நாள் வாழட்டும்! அந்தப் பணம் எத்தனை நாளைக்கு நிற்கப்போகிறது!

அன்னியா: நீ சீக்கிரம் திரும்பி வந்துவிடுவாய், இல்லையா, அம்மா? கஷ்டப்பட்டுப் படித்துப் பரீட்சையில் தேறி, நான் வேலை செய்து உனக்குச் சம்பாதித்துப் போடுகிறேன். சரத்காலத்தில் மாலை நேரத்தில் நீயும் நானுமாக அமர்ந்துகொண்டு விதவிதமான புஸ்தகங்களையெல்லாம் வாசிப்போம். வாசிக்க மாட்டோமா? (அம்மாவை முத்தமிட்டுக்கொண்டு) சரத்காலத்தில் நாம் எத்தனையோ புஸ்தகங்களைப் படிப்போம், நம் கண்முன் ஆச்சரியமான ஒரு புதிய உலகம் தோன்றும்... (கனவு காண்பவள்போல.) அம்மா, சீக்கிரம் வந்துவிடு.

ரனவ்ஸ்கி: என் தங்கமே, வந்துவிடுகிறேன். (பெண்ணைத் தழுவிக் கொள்கிறாள்.)

[லொபாகின் வருகிறான். சார்லட்டா மெல்லிய குரலில் ஒரு பாட்டுப் பாடுகிறாள்.]

கயேவ்: சார்லட்டா யோகக்காரிதான்; அவள் பாட்டல்லவா பாடுகிறாள்!

சார்லட்டா: (ஒரு சிறு மூட்டையைத் தூக்கிக் குழந்தையை இடுப்பில் வைத்துக்கொள்வதுபோல் வைத்துக்கொண்டு அழாதே அப்பா, அழாதே அப்பா!) குழந்தை அழுவதுபோல் 'கு-வா, கு-வா, குவா!...' என்று குரல் கேட்கிறது. ஆராரோ! ஆராரோ, அழாதே கண்ணே! உனக்காக என் உள்ளம் வாடுகிறது. (மூட்டையை ஓரிடத்தில் போடுகிறாள்) எனக்கு ஏதாகிலும் ஒரு வேலை பார்த்துத் தந்தால் நலமாயிருக்கும். வேலையில்லாமல் ஜீவனம் செய்யமுடியாது.

லொபாகின்: உனக்கு ஏதாவது ஒரு வேலை பார்த்துத் தருவோம்! கவலைப்படாதே.

கயேவ்: ஒவ்வொருவரும் நம்மைவிட்டு விலகுகின்றனர்; வாரியா போகிறாள்... நமக்கு இனிமேல் இங்கே என்ன காரியம்? ஒரு நிமிஷத்தில் வேண்டாதவர்களாகப் போய்விட்டோம்.

சார்லட்டா: பட்டணத்தில் எனக்குப் போக்கிடம் ஏது? நானும் வெளியேற வேண்டியதுதான். (பாடுகிறாள்) எனக்கு என்ன கவலை?...

லொபாகின்: இதோ வருகிறது யார்? விசித்திரமான ஓர் ஈசுவர சிருஷ்டி!

சிமியனாவ்: (நெஞ்சு படபடத்து) எனக்கு மூச்சு திணறுகிறது......நிதானப் படுத்திக்கொள்ளுகிறேன்......திராணியில்லை...குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாருங்கள்......நீங்கள் மிகவும் நல்ல ஆத்மாக்கள்......

கயேவ்: பணத்துக்குத்தான் இத்தனை பாசாங்கு செய்கிறாய் போலிருக்கிறது. நான் போய்விடுகிறேன். (வெளியிலே போய் விடுகிறான்.)

சிமியனாவ்: (ரனவ்ஸ்கியைப் பார்த்து) அழகு மிகுந்த சீமாட்டி! உங்களைப் பார்த்து வெகு நாளாகிறது. (லொபாகினைப் பார்த்து) நீங்களா?......உங்களை இங்கே பார்க்கக் கிடைத்தது பெரும் பாக்கியந்தான்...அபாரமான அறிவாளி

யல்லவா நீங்கள்! எடுத்துக்கொள்ளுங்கள்......பெற்றுக் கொள்ளுங்கள்......(லொபாகினிடம் பணத்தைக் கொடுக்கிருன்.) இந்த நானூறு ரூபிளை எடுத்துக் கொள்ளுங்கள்... இதுபோக நான் உங்களுக்குத் தரவேண்டிய பாக்கி எண்ணூற்று நாற்பதுதான்......

லொபாகின்: (திகைத்து, தோள்களைச் சற்றே குலுக்கிக் கொள்ளுகிருன்.) இது ஒரு கனவு போலல்லவா படுகிறது. எங்கிருந்து பணம் கிடைத்தது உனக்கு?

சிமியனுவ்: சற்றுப் பொறுங்கள்......அதிகத் தாபமா யிருக்கிறது......மிகுந்த ஆச்சரியமான ஒரு சம்பவம். நான் இருக்கும் இடத்திற்குச் சில ஆங்கிலேயர்கள் வந்தார்கள். அங்கே பூமியில் ஏதோ வெள்ளைக் களிமண் இருப்பதைப் பார்த்து விட்டார்கள். (ரனவ்ஸ்கியைப் பார்த்து) அம்மா, நீங்கள் பேரழகுள்ளவர்கள். பேராச்சரியமானவர்கள். இந்தாருங்கள், உங்களுக்கு நானூறு ரூபிள்......பெற்றுக்கொளுங்கள். (பணம் கொடுக்கிருன்.) பாக்கித் தொகையை பின் அனுப்புகிறேன்......(தண்ணீர் குடிக்கிருன்.) இப்பொழுதுதான் ரயிலில் ஒரு வாலிபன் சொல்லிக் கொண்டிருந்தான்: ஒரு தத்துவ ஞானி, வீட்டுக் கூரையிலிருந்து குதிக்க வேண்டுமென்று உபதேசம் செய்கிருராம்......'குதித்து விடுங்கள்' என்று அவர் சொல்லுகிருர்; ஆம், குதித்தாலே எல்லாம் முடிந்துவிடும். (ஆச்சரியத்துடன்) நீங்கள் அப்படிச் சொல்ல மாட்டீர்களே! இன்னும் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்......தயவுசெய்து கொடுங்கள்.

லொபாகின்: அந்த ஆங்கிலேயர்கள் எவர்கள்?

சிமியனுவ்: வெள்ளைக் களியுள்ள என் நிலத்தை இருபத்து நான்கு வருஷம் குத்தகைக்கு விட்டேன். சற்று மன்னிக்க வேண்டும். எனக்குப் பேசுவதற்குக்கூட அவகாசமில்லை...... நான் அவசரமாகப் போகவேண்டும்......போய் ஜினோகோவையும் கார்டமனேவையும் பார்க்கவேண்டும்...ஒவ்வொருவருக்கும் நான் பணம் கொடுக்கவேண்டியிருக்கிறது. வியாழக்கிழமை உங்களை வந்து பார்க்கிறேன்......சௌக்கியமாயும் சந்தோஷமாயும் இருங்கள்.

ரனவ்ஸ்கி: நாங்கள் இதோ புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம், பட்டணத்திற்குப் போகிறோம். நாளை நான் வெளிநாட்டுக்குப் பிரயாணம்......

சிமியனுவ்: ஏன்? (திடுக்கிட்டு) பட்டணத்திற்கா? மேஜை, நாற்காலி ஒன்றையும் காணேமே!......பெட்டிகள் அடுக்கி வைக்கப் பட்டிருக்கின்றன......நல்லது, நல்லது...(கண்ணீர் விட்டுக்கொண்டே) அதி மேதாவிகள் அந்த ஆங்கிலேயர்கள்......பகவான் உங்களுக்கு அனுக்கிரகம் செய்வாராக... நல்லது......இந்த உலகத்தில் எல்லாம் ஒரு காலத்தில் முடிவடைந்து விடுகின்றன......(ரனவ்ஸ்கியின் கையை முத்தமிட்டுக்கொண்டே) நானும் ஒரு காலத்தில் போக வேண்டியவன்தான். நான் போய்விட்ட செய்தி உங்களுக்குக் கிடைக்கிற பொழுது, குதிரை போலிருந்த பிஸ்சிக் என்று என்னை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்: 'சிமியனுவ் பிஸ்சிக் என்று ஒருவன் இருந்தானே......அவனுடைய ஆத்மா சாந்தி அடையட்டும்' என்று பிரார்த்தனை செய்யுங்கள்......இன்று காற்று நேர்த்தியா யிருக்கிறது......ஆமாம்.. (பரபரப்புடன் வெளியே போய், உடனே திரும்பிக் கதவருகே நின்றுகொண்டு) என் தஷாங்கா உங்களை மிகவும் விசாரித்தாள்!......(வெளியே போகிறுன்.)

ரனவ்ஸ்கி: நாங்கள் புறப்படுவதற்குத் தயாராயிருக்கிறோம். நான் இரண்டு கவலைகளோடு போகிறேன். பீர்ஸுக்கு உடம்பு அசௌகரியமா யிருக்கிறது, இது முதலாவது கவலை. (கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு) இன்னும் ஐந்து நிமிஷந்தான் இருக்கிறது.

அன்னியா: அம்மா, பீர்ஸை ஆஸ்பத்திரியில் சேர்த்தாய் விட்டது. யாஷா காலையிலேயே அவனை அனுப்பிவிட்டான்.

ரனவ்ஸ்கி: மற்றொரு கவலை வாரியாவைப் பற்றியது. அவள் அதிகாலையில் எழுந்திருந்து வேலை செய்கிற சுபாவம் உள்ளவள். வேலையில்லாது போனல் தண்ணீரிலிருந்து வெளியே எடுத்தெறிந்த மீனைப்போல் அவள் துடிப்பாள். அவள் உடம்பு வெளுத்துத் துரும்பாய்ப் போய்விட்டாளே! ஐயோ பாவம்! அழுதவண்ணமாய் இருக்கிருள்! (பேச்சில் ஓர் ஓய்வு) லொபாகின், என் எண்ணம் உனக்கு நன்ருகத் தெரியுமே ...அவள் உன்னைக் கல்யாணம் செய்துகொள்வாள் என்று நம்பியிருந்தேன்...நீங்கள் இருவரும் மணந்துகொள்வீர்கள் என்றே இதுவரை தோன்றிற்று. (அன்னியா காதில் ஏதோ முணுமுணுக்கிருள்; அவள் சார்லட்டாவுக்குச் சமிக்ஞை காட்டுகிருள்,

இருவரும் வெளியே போகிறார்கள்.) அவள் உன்னை நேசிக்கிறாள். நீயும் அவளிடத்தில் பிரியம் வைத்திருக்கிறாய். ஆனால் நீ அவளை விட்டு அகலுகிறவன் போல நடந்துகொள்ளுகிறாயே! அதுதான் எனக்கு ஆச்சரியமாய் இருக்கிறது. நீ செய்கிற காரியம் எதுவுமே எனக்கு விளங்கவில்லை!

லொபாகின்: உண்மையைச் சொல்லப்போனால், எனக்குமே விளங்கவில்லை. எனக்குந்தான் எல்லாம் ஆச்சரியமாயிருக்கிறது......இப்பொழுதுகூட நேரம் இருந்தால், இப்பொழுதே பேசுவதில் எனக்குச் சம்மதம்......இதை முடித்து விடுவோமே — ஆனால் நீங்கள் இல்லாமல், நானாக அவளிடம் எப்படிக் கேட்பது?

ரனவ்ஸ்கி: நல்ல யோசனைதான்! எல்லாம் ஒரு நிமிஷ வேலை! இப்போதே அவளைக் கூப்பிடுகிறேன்.

லொபாகின்: இந்தச் சந்தர்ப்பத்தில் சந்தோஷம் கொண்டாடுவதற்கு நான் வாங்கிவந்த மதுவும் இதோ இருக்கிறது...... (கிண்ணங்களைப் பார்க்கிறான், எல்லாம் காலியாக இருக்கின்றன.) யாராவது ஏற்கனவே குடித்துவிட்டார்களா? (யாஷா இருமுகிறான்) துளிகூட விடாமல் நக்கிக் குடித்து விடுவது என்பது இதுதான்!

ரனவ்ஸ்கி: (குதூகலத்துடன்) நல்லது! நாங்கள் போகப் போகிறோம். யாஷா, போய்வருகிறோம்! நானே அவளைக் கூப்பிடுகிறேன். (கதவண்டை நின்றுகொண்டு) வாரியா, எல்லாவற்றையும் அப்படியே போட்டுவிட்டுச் சீக்கிரம் இங்கே வா. ஓடிவா! (அவளும் யாஷாவும் வெளியிலே போகிறார்கள்.)

லொபாகின்: (தன் கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு) நல்லது ......(மௌனம். கதவுக்குப் பின்னால் அடக்கமான சிரிப்பும் இரகசியமான பேச்சும் கேட்கின்றன. கடைசியாக வாரியா வருகிறாள்.)

வாரியா: (மூட்டைகளை வெகு நேரம் பார்த்துக்கொண்டு) ஆச்சரியமாயிருக்கிறதே, அதைத் தேடித் தேடிப் பார்த்தும், எங்கேயும் காணவில்லையே!

லொபாகின்: எதைத் தேடுகிறாய்?

வாரியா: நான்தான் சாமான்களை மூட்டை கட்டினேன். அதை எங்கே வைத்தேன் என்ற ஞாபகமே வரவில்லையே! (பேச்சில் ஓர் ஓய்வு.)

லொபாகின்: வாரியா! நீ என்ன செய்ய உத்தேசித்திருக்கிருய்?

வாரியா: நானு? ராஜ்குலின் குடும்பத்தாரிடம் போகப்போகிறேன்......அவர்கள் வீட்டுக் காரியத்தைப் பார்க்க உத்தேசம்......அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருக்கிறேன். ஏதோ வீட்டை மேற்பார்க்கிற வேலை......

லொபாகின்: அவர்கள் யாஷ்னிவோ நகரில் அல்லவா இருக்கிருர்கள்? இங்கிருந்து ஐம்பது மைலுக்கு அப்பால் இருக்கிருர்கள்! (பேச்சில் ஓய்வு) இந்த வீட்டின் வாழ்வு இதோடு முடிந்துவிட்டது.

வாரியா: (மூட்டைகளைச் சோதனைச் செய்துகொண்டு) எங்கேயிருக்கும்? டிரங்குப் பெட்டிக்குள் அடியில் வைத்துவிட்டேனு?...இந்த வீட்டின் வாழ்வு இதோடு முடிவடைந்துவிட்டது......ஆமாம், இனிமேல் இங்கே ஒன்றுமில்லை...

லொபாகின்: நான் இப்பொழுது கார்க்கோவ் நகருக்குப் போகிறேன்......அடுத்த வண்டியில் போகிறேன்......வேலை நிறைய இருக்கிறது. எபிக்கிடாவ் இங்கேயே இருப்பான்... நான் அவனை வேலைக்கு வைத்துக்கொண்டிருக்கிறேன்.

வாரியா: நல்லது!

லொபாகின்: போன வருஷம் இந்தச் சமயம் பனிபெய்ய ஆரம்பித்துவிட்டது. உனக்கு ஞாபகமிருக்கிறதோ? இப்பொழுது அமைதியாயிருக்கிறது. சூரியனும் பிரகாசிக்கிருன். குளிர்மட்டும் இருக்கிறது......பனி மிகவும் குறைவுதான்—மூன்று டிகிரி இருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது.

வாரியா: நான் பார்க்கவில்லை. (மௌனம்) சீதோஷ்ணத்தை அளக்கும் எங்களுடைய தெர்மாமீட்டர் உடைந்து போய்விட்டது. (கூடத்திலிருந்து கதவு வழியாக 'லொபாகின்' என்ற குரல் வருகிறது.)

லொபாகின்: (அந்தக் குரலுக்காக வெகுநேரம் காத்துக்கொண்டிருந்தவன்போல) இதோ வந்துவிட்டேன். (அவசரமாய்ப் போகிருன்.) (ஒரு துணி மூட்டையைத் தலைமீது வைத்துக்கொண்டு மெல்ல அழுகிருள் வாரியா. கதவு திறக்கிறது. ரனவ்ஸ்கி அம்மாள் சந்தடி செய்யாமல் நுழைகிருள்.)

ரனவ்ஸ்கி: நல்லது... சரி, நாங்கள் போகிரேம்.

வாரியா: (அழுகையை நிறுத்தி, நீர்மல்கிய கண்களைத் துடைத்துக்கொண்டு விட்டாள்.) அம்மா, மணியாகிவிட்டது. வண்டிக்கு நேரமிருக்குமானால், நானும் ராஜ்குலின் குடும்பத்தாருடைய வீட்டுக்குப் போகிறேன்...

ரனவ்ஸ்கி: (கதவு வழியாக) அன்னியா, சாமான்களை எடுத்து வைத்துக் கொள்.

[அன்னியா, கயேவ், சார்லட்டா மூவரும் வருகின்றனர். கயேவ் குளிருக்கு அடக்கமான சட்டை அணிந்திருக்கிறான். அதற்குமேல் பிளானல் துண்டையும் போர்த்துக் கட்டியிருக்கிறான். வேலைக்காரர்களும் வண்டிக்காரர்களும் வருகிறார்கள். எப்பிக்கிடாவ் மூட்டைகளை அப்புறப்படுத்துவதில் ஈடுபட்டிருக்கிறான்.]

ரனவ்ஸ்கி: சரி, நாம் பயணமாகிவிட்டோம்!

கயேவ்: என் அன்புள்ள நண்பர்களே, இந்த வீட்டுக்கு இனிமேல் திரும்பி வரப்போகிறதில்லை. ஒரு வார்த்தையும் சொல்லாமல் நான் அகல முடியுமோ? என் உள்ளத்தில் எழுகிற உணர்ச்சிகளை அடக்க முடியுமோ?

அன்னியா: (கொஞ்சுகிற பாவனையில்.) மாமா, என்ன இப்படி!

வாரியா: மாமா, தயவுசெய்து பேசவேண்டாம்!

கயேவ்: (தளர்ந்த நிலையில்.) மஞ்சள் பந்தை நடுப்பையில் தள்ளுகிறேன்!......நான் பேசவில்லை......

(டிராவிமாவ் பிரவேசிக்கிறான், பிறகு லொபாகின் வருகிறான்.)

டிராவிமாவ்: நாழிகை யாகிவிட்டது, புறப்பட வேண்டியது தான்!

லொபாகின்: எப்பிக்கிடாவ், என் மேலங்கி எங்கே?

ரனவ்ஸ்கி: இன்னும் ஒரு நிமிஷம் இருந்துவிட்டுத்தான் போகப் போகிறேன். இந்த வீட்டின் சாமான்களையும் கூரைகளையும் காண, இதுவரை பார்க்காதது போலவும், இப்பொழுது தான் முதன் முதல் ஆர்வத்துடனும் அன்புடனும் பார்ப்பது போலவும் தோன்றுகிறது.

கயேவ்: எனக்கு ஞாபகமிருக்கிறது. ஒரு ஞாயிற்றுக் கிழமை—அப்பொழுது எனக்கு வயது ஆறு—இந்த ஜன்னல் பக்கத்தில் நின்றுகொண்டு அப்பா கோவிலுக்குப் போவதைப் பார்த்தேன்—

ரனவ்ஸ்கி: எல்லாச் சாமான்களையும் எடுத்துக்கொண்டு விட்டார்களா?

லொபாகின்: எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு விட்டார்கள் என்றுதான் நினைக்கிறேன். (மேலங்கியைப் போட்டுக் கொண்டே) எப்பிக்கிடாவ், எல்லாவற்றையும் ஒழுங்காய்ப் பார்த்துக்கொள்.

எப்பிக்கிடாவ்: (கரகரத்த குரலில்) சரி, உங்களுக்குக் கவலையே வேண்டாம், போய் வாருங்கள்!

லொபாகின்: உன் குரலுக்கு என்ன வந்துவிட்டது?

எப்பிக்கிடாவ்: இப்பொழுதுதான் ஏதோ விழுங்கித் தண்ணீரைக் குடித்தேன்.

யாஷா: (உதாசீனத்துடன்) என்ன அறியாமை!

ரனவ்ஸ்கி: நாங்கள் போனால் இங்கே ஈ, காக்கைகூட இருக்காது.

லொபாகின்: வசந்த காலம் வரையில்...

வாரியா: (ஒரு மூட்டையிலிருந்து சிறு குடை ஒன்றை இழுக்கிறாள். யாரோ ஒருவரை அடிக்கிறதுபோலப் படுகிறது. லொபாகின் பயப்படுகிறவன்போலப் பாசாங்கு செய்கிறான்) ஏன் அப்படி? நான் ஒன்றும் அப்படி நினைக்கவில்லை.

டிராவிமாவ்: வண்டிகளில் உட்காருவோம். மணியாகிவிட்டது. ரயிலும் வந்துவிடும்.

வாரியா: டிராவிமாவ், அதோ டிரங்குக்குப் பக்கத்தில் உன் பூட்சுகள் இருக்கின்றன...(கண்ணீர் விட்டுக்கொண்டு) அவைகள் எவ்வளவு அழுக்கடைந்து இருக்கின்றன. வாங்கி அநேக காலமாய்விட்டதுபோல் இருக்கிறது.

டிராவிமாவ்: (பூட்சுகளை அணிந்துகொண்டு) போவோமே!

கயேவ்: (அழாத குறையாய்) ரயில்...ஸ்டேஷன்...மத்தியில் உள்ள பந்தை அடித்தேன், வெள்ளைப் பந்தைப் பையில் தள்ளினேன்......

ரனவ்ஸ்கி: வாருங்கள், எல்லோரும் போவோம்.

லொபாகின்: எல்லோரும் இங்கே வந்துவிட்டனர் அல்லவா? அங்கே ஒருவரும் இல்லையே? (இடது பக்கத்துக் கதவைச் சாத்திப் பூட்டிக்கொண்டு) இங்கே சாமான்களை அடுக்கி வைத்திருக்கிறோம். அறையைப் பூட்டி வைக்கவேண்டும். சரி, புறப்படுவோம்.

அன்னியா: இனிமேல், இந்த வீடேது! இனிமேல், இந்தப் பழைய வாழ்வேது: போய்வருகிறேன்.

டிராவிமாவ்: புதிய வாழ்வை வரவேற்போம்!......அன்னியா வோடு போய்விடுகிருன். (வாரியா அறையைச் சுற்றி ஒரு முறை பார்த்துவிட்டு, நிதானமாய் வெளியிலே போகிருள். யாஷாவும் சார்லட்டாவும் வீட்டில் வளர்ந்த பிரியமான நாயோடு வெளியே போகிருர்கள்.)

லொபாகின்: வசந்த காலம் வரையில் பிரிந்திருப்போம்......சரி தான்......போய் வருகிறேன்......... (வெளியே போகிருன்.) (ரனவ்ஸ்கி அம்மாளும், கயேவும் தனியே நிற்கிறார்கள். தழுவிக்கொண்டு பெருமூச்சு விடுவதற்கென்று தனித்து வந்தார்களோ என்று தோன்றுகிறது. மெதுவாய்ப் பிறர் அறியாதபடி பெருமூச்சு விடுகிருர்கள்.)

கயேவ்: (எல்லாவற்றையும் கைவிட்ட நிலையில்) அக்கா! அக்கா!......

ரனவ்ஸ்கி: ஓ, என் அழகுள்ள இன்பத் தோட்டமே! என்னுடைய வாழ்வு, என்னுடைய இளமை, என்னுடைய இன்பம் எல்லாவற்றையும் இழந்தேன்! இழந்தேன்!

அன்னியாவின் குரல்: (சந்தோஷமாயும் அலட்சியமாயும்) அம்மா!

டிராவிமாவின் குரல்: (சந்தோஷத்துடனும் பரபரப்புடனும்) கூ - யீ!...கூ - யீ!... கூ - யீ!

ரனவ்ஸ்கி: கடைசி முறை சுவர்களையும் ஜன்னல்களையும் பார்க்கவேண்டுமென்ற ஆவல் வருகிறது. இந்த அறையில் தான் என்னுடைய அம்மாவுக்கு உலாவப் பிரியம்!

கயேவ்; அக்கா, அக்கா! என்ன அக்கா, போதும்!

அன்னியாவின் குரல்: அம்மா!......

டிராவிமாவின் குரல்: கூ-யீ!......

ரனவ்ஸ்கி: நாங்கள் இதோ வருகிறோம். (அவர்கள் வெளியிலே போகிருர்கள். நாடகமேடை சூனியமாகிவிடுகிறது. கதவுகள் மூடுகிற சத்தமும், வண்டிகள் ஓடுகிற சத்தமும் கேட்கின்றன. பிறகு எழுந்த அரவம் அமைதியில் கரைகிறது. அந்த அமைதியில் மரத்தின்மீது கோடாரி விழுகிற ஒலி எழுந்து, பரிதாபகரமான சோக நாதமாக மிதந்து வருகிறது. காலடிச் சத்தம் கேட்கிறது. வலது பக்கத்துக் கதவு வழியாக பீர்ஸ் எட்டிப் பார்க்கிருன். அவன் வழக்கப்படி அணியும் சட்டையும் வெள்ளையான உள்ளங்கியும்

அணிந்து விளங்குகிறான். கால்களில் செருப்புகள் இருக்கின்றன. அவனுக்கு உடம்பு சரியாயில்லை.)

பீர்ஸ்: (கதவண்டை போய்த் தாழ்ப்பாளைத் தள்ளிப் பார்க்கிறான்.) என்ன, பூட்டப்பட்டிருக்கிறதே. அவர்கள் போய்விட்டார்கள். (சாய்வு நாற்காலியின் மீது உட்கார்ந்து கொண்டு) என்னை மறந்துவிட்டார்களே.........அதனால் என்ன? இங்கே சற்று நேரம் உட்காருகிறேன்......கயேவ் கம்பளிச் சட்டையை போட்டுக்கொள்ளவில்லை. வெறுஞ் சட்டையை அணிந்து வெளியேறிவிட்டார் என்று நிச்சயமாய்ச் சொல்வேன்.........(கவலையுடன் பெருமூச்சு விட்டுக்கொண்டு) நான் அதைக் கவனித்திருக்கவேண்டும். பாலியம் அல்லவா, கொஞ்சங்கூட நின்று யோசனை பண்ண மாட்டார்கள். (ஏதோ மனத்திற்குள் முணுமுணுக்கிறான்.) ஏதோ நடைப்பிண வாழ்வு வாழ்ந்தாகிவிட்டது......(படுத்துக்கொண்டு) நான் படுத்துக்கொள்ளுகிறேன்......(தன்னை நினைத்தே பேசிக்கொண்டு) பலமெல்லாம் போய்விட்டது. இப்பொழுது ஒன்றுமேயில்லை. ஒன்றுக்கும் பயன்படாத ஜன்மமே! (அசையாமல் அவன் படுத்திருக்கிறான்.)

[தூரத்திலிருந்து ஒரு சத்தம் கேட்கிறது; அது ஆகாயத்திலிருந்து எழுவதுபோலப் படுகிறது. அறுந்த தந்தியின் ஒலி கிளம்புகிறது. சோகத்தில் அந்த ஒலி மாய்கிறது. ஓர் அமைதி நிலவுகிறது. தூரத்தில் தோட்டத்து மரங்கள் மீது விழுகிற கோடரிகளின் ஓசை கேட்கிறது.]

[திரை விழுகிறது]

முற்றும்

எங்கள் இதர நாடகங்கள்

1. மீராபாய் அல்லது பக்தியிற் சிறந்த பதிவிரதை
2. பீஷ்மர் பிரமசரியம்
3. வாஸந்திகா
4. சபலா

பிரபல நாடக ஆசிரியர் ஏ. கிருஷ்ணஸ்வாமி ஐயா இயற்றியவை

5. தஞ்சை நாயகர் தாழ்வு அல்லது விதியின் வலிமை

பி. எஸ். சுப்பிரமணியம், எம்.ஏ., எழுதியது

6. பரதன் அல்லது ப்ராத்ரு சிகாமணி

எம். சேஷய்யா இயற்றியது

7. லவ - குச. வே. சாமிநாத சர்மா இயற்றியது
8. நீலி வசீகரம் - ஷேக்ஸ்பியர் மகாகவி இயற்றிய டேமிங் ஆப் தி ஷ்ரூ என்னும் நாடகத்தைத் தழுவி ஸ்ரீசைலர் எழுதியது.
9. லோபியின் காதல் - மாலியர் எழுதிய மைஸர் எனும் நாடகத்தைத் தழுவி ஸ்ரீ எஸ்.வி. கணபதி எழுதியது.
10. அந்தகன் குழலோசை - ஸ்ரீமதி வேங்கடலக்ஷ்மி எழுதியது.
11. மாலினி மகாகவி டாகுர் - த. நா
12. புலேச்சி குமாரசாமி மொழிபெயர்ப்பு
13. போஜன் - டி. எஸ். நாராயண சாஸ்தியார் இயற்றிய போஜ சரித்திரத்தை, நாடக மேடைக்கு ஏற்றபடி ஸ்ரீ ஆர். வி. நாராயணஸ்வாமி, எம்.ஏ., எல்.டி. சுருக்கியது.
14. போலி விசாரணை - ஹைகோர்ட் ஜட்ஜ் எ. எஸ். பி. ஐயர் ஆங்கிலத்தில் எழுதியதை த. நா. ஸேனாபதி மொழிபெயர்த்தது.
15. ஆண்டாள் ஸ்ரீ எச். வைத்தியநாதனும்
16. பிரதிக்ஞை பி. ஹனுமந்தராவும்.
17 விமோசனம் - "சசி" இயற்றியது
18. கடற்படை ஆண்டன் செஹாவ் -
19. மூன்று சகோதரிகள் ரா. ஸ்ரீ தேசிகன் மொழிபெயர்ப்பு

அல்லயன்ஸ் கம்பெனி, 154, பிராட்வே ரோட், சென்னை - 4

எரி நட்சத்திரம்

வி. ஸ. காண்டேகர்

டி.எஸ்.

கா. ஸ்ரீ. ஸ்ரீ.

மொழிபெயர்த்தது

அவள் பெயர் தாரா; ஆனால் அவளுடைய தகப்பனார் அவளை உல்கா என்று அழைத்தார். அவள் வாழ்க்கை முழுவதும் எரி நட்சத்திரத்தைப் போலத்தான். வசந்தன், மாணிக்கராவ், சந்திரகாந்தன், பண்டிதர் ஆகிய இந்நான்கு பேரும் அவளுடைய வாழ்க்கைக்கு அநுபவத்தை உண்டாக்கியவர்கள். 'அடுத்த தலைமுறையில் வரும் பெண் இதைவிட முன்னால் அடியெடுத்து வைப்பாள்' என்கிறார் அவளுடைய தகப்பனார். அவள் அப்படி என்ன புரட்சி செய்தாள், எப்படிச் செய்தாள் என்பது கதை.

நாவலினிடையே மின்னல் வீச்சுப் போலச் சடாரென்று வீசி, அறிவுக்கு விளக்கம் கொடுக்கும் தத்துவ தரிசனம் காண்டேகருடைய நூல்களின் தனிச் சிறப்பு. 'துளசி தெய்வமாம்; மல்லிகை, செவ்வந்தி, சண்பகம் முதலிய யாவும் கொடிகளாம்! ஜனங்களுக்கு ஒன்றுமே பலன் கொடுக்காமல், அதற்கு மாறாக அவர்களிடமிருந்து தனக்குப் பூஜை மட்டும் பெற்றுக்கொள்கிறதே, அது தெய்வம். பழங்கள் இனிமையானவை; பூக்கள் அழகானவை. ஆனால் எந்த மரங்களில் இவை உண்டாகின்றனவோ, அந்த மரங்களை யாரும் பூஜிப்பதில்லை!' இப்படி ஆயிரக் கணக்கான மணிவாசகங்கள்.

"காண்டேகரின் மூல நூலா? அது உங்களுக்குத் தேவையில்லை. கா. ஸ்ரீ. ஸ்ரீ. யின் மொழிபெயர்ப்பைப் படியுங்கள்" என்று அறிஞர்கள் கூறும்வண்ணம் அவ்வளவு அழகாக அமைத்திருக்கிறது மொழிபெயர்ப்பு.

காகிதம், அச்சுக்கலை, பைண்டிங் - யாவும் உயர்தரம்.

எரி நட்சத்திரம் - அல்லயன்ஸ் வெளியீடு

தலைவர் ஜவாஹர்

எழுதியவர் :

தி. ஜ. ர.

உள்ளுறை

1 வம்சமும் தந்தையும்
2 பாலியப் பருவம்
3 வீட்டிலே வாத்தியார்
4 சீமைப் படிப்பு
5 ஊர் திரும்பியபின்
6 தொழிலா, அரசியலா?
7 மணமும் மலைப்பயணமும்
8 தந்தையின் மனமாற்றம்
9 கிராமங்களிலே திரிதல்
10 முதல் சிறைவாசம்
11 வெளிவந்தபோது
12 சில அனுபவங்கள்
13 ஐரோப்பாவில்
14 போலீஸ் தடியடி
15 தந்தைக்குப்பின் மகன்
16 உப்புப்போர் ராஷ்ட்ரபதி
17 மோதிலாலின் மறைவு
18 ராஜியும் ராஜிமுறிவும்
19 சிறை ஜன்னல் வழியே
20 கமலாவின் பிரிவு
21 முசோலினியைக் காண மறுப்பு
22 மூன்றும் முறை காங்கிரஸ் மகுடம்
23 அக்காளும் தங்கையும்
24 நாஜி அழைப்பு - நிராகரிப்பு
25 திரிபுரியும் பின்னரும்
26 "வெளியே போ"
27 விடுதலையும் வரவேற்பும்
28 வேவல் திட்டம் முறிவு
29 மந்திரிகள் தூது
30 காஷ்மீரச் சம்பவம்
31 முதல் இந்திய தேசிய சர்க்கார்
32 லீகர் பிரவேசம்
33 அரசியல் நிர்ணய சபை
34 பிரிட்டிஷ் வாபஸ் கெடு

விலை ரூ. 3—8—0

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4

ராஜாஜி

(முதல் இந்திய கவர்னர் ஜனரல்)

(இன்றுவரை நிகழ்ச்சிகள்கொண்ட விரிவான அழகான சரித்திரம்—பல படங்களுடன்)

"பிரசன்ன விகடன்" ஆசிரியர் நாரண துரைக்கண்ணன் எழுதியது. கனம் டாக்டர் ப. சுப்பராயன் அவர்கள் முன்னுரையும், கனம் எம். பக்தவத்ஸலம் அவர்கள் சிறப்புரையும் கொண்டது.

........ரூ. 2—0—0........

முக்கிய அபிப்பிராயங்களுள் சில

(அமரர்) எஸ். சத்தியமூர்த்தி இந்நூலின் முதற் பதிப்புக்கு அளித்துள்ள சிறப்புரையின் முக்கிய பாகம்:—

*நம் தமிழ்நாட்டு மாபெருந் தலைவரும் தியாகியுமான ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் அவர்கள்சரித்திரத்தை எழுத முன்வந்ததற்காக ஆசிரியரை நான் பாராட்டுவதுடன், மிகவும் சந்தோஷமும் அடைகிறேன். இந்தச் சரித்திரம் நல்ல முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

டாக்டர் ப. சுப்பராயன்:—* ராஜாஜியின் வாழ்க்கையை முதலிலிருந்து தற்காலம் வரையிலும் நன்கு விவரித்து எழுதியிருக்கிறார். இம்மாதிரியான புத்தகங்களை நமது பள்ளிகளிலிருக்கும் மாணவர்களுக்குக் கொடுப்பது அவசியம். இதை எல்லாத் தமிழ் மக்களும் பாராட்டு வார்கள்.

கனம் எம். பக்தவத்ஸலம்:—* எல்லோரும் உணரக்கூடிய அளவில் ஆசிரியர் வரைந்த இந்நூலை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை - 4

சமீப வெளியீடுகள்

★

நாவல்கள்

		ரூ. அ.
ராஜகுமாரி விபா	டாகுர்	3-0
ஆனந்த மடம்	பங்கிம் சந்த்ரர்	2-8
மிருணாளினி	,,	2-8
விஜயா	சரத் சந்த்ரர்	3-0
இரு துருவங்கள்	காண்டேகர்	6-0
எரி நட்சத்திரம்	,,	4-8
சந்திரிகா	பரிசுபெற்ற நாவல்	1-4
தீனதயாளு	நடேச சாஸ்திரியார்	1-8

சரித்திரங்கள்

தலைவர் ஜவாஹர்	தி. ஜ. ர.	3-8
என் சரிதம் (காந்திஜியின் சுயசரிதை)	கா. ஸ்ரீ. ஸ்ரீ. மொழிபெயர்ப்பு	3-8
ராஜாஜி	நாரண துரைக்கண்ணன்	1-0
ஸர்தார் வல்லபபாய் படேல்	ஜம்புநாதன்	1-8
ராஜேந்திர பிரஸாத்	எம். எஸ். சுப்ரமணிய ஐயர்	1-0
உத்தரராம சரிதம்	க. சந்தானம்	1-8
தோட்டக் கலை	ச. கு. கணபதி ஐயர்	4-8

★

அல்லயன்ஸ் கம்பெனி,

மயிலாப்பூர் :: சென்னை 4.